விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 வைகாசி 24 சனிக்கிழமை (07.06.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 170

## ஜெனிவா கூட்டத்தொடர் 10ஆம் திகதி ஆரம்பம்

### இலங்கை தொடர்பிலும் விவாதம்!



(ஜெனிவா)

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக குழுவின் 26-வது கூட்டத்தொடரிலும் இலங்கையின் மனிதவுரிமை நிலைமைகள் தொடர்பில் விவாதிக்கப்படும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜெனிவாவில் எதிர்வரும் 10ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் இந்தக் கூட்டத்தொடர் 27ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தொடரில் ஆர

20 ஆம் பக்கம் பார்க்க....

## முன்னாள் போராளிகள் 132 பேர் விரைவில் விடுதலை செய்யப்படுவர்

### புனர்வாழ்வு ஆணையாளர் விஜேதிலக தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் 132 பேர் தற்போது புனர்வாழ்விற்குள்ளாகி வருகின்றனர் என்று தெரிவித்துள்ள கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் அமுலாக்கத்திற்கான தேசிய செயற்பாட்டுத்திட்டம், புனர்வாழ்வு நடவடிக்கைகள் விரைவில பூரணமாகும் என்றும் அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் தேசிய செயற்பாட்டுத்திட்டம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

2009 ஆம் ஆண்டு போர் நிறைவடைந்ததன் பின்னர் ஏறத்தாழ 12,000 விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் சரணடைந்தோ அல்லது தடுப்பிற்கு உட்படுத்தப்பட்டோ இருந்தனர் என புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் ஜகத் விஜேதிலக தெரிவித்தார்.

எஞ்சியுள்ள 132 முன்னாள் விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் தற்போது ஒருவருட புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டத்திற்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். இந்த நிகழ

19 ஆம் பக்கம் பார்க்க....

# பயங்கரமான அபாயம் இலங்கைக்கு காத்திருப்பு

## நவநீதம்பிள்ளையை சுட்டிக்காட்டி அரசை எச்சரிக்கிறார் தயான்



(கொழும்பு)

*ஐ.நா மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு எதிராக நியமிக்க உள்ள சர்வதேச விசாரணைக்குழு நியமிக்கப்பட்டால் அது இலங்கைக்கு பயங்கரமான அபாயமாக இருக்கக் கூடும் என முன்னாள் ராஜதந்திரியான கலாநிதி தயான் ஜயதிலக தெரிவித்துள்ளார்.*

சர்வதேச ஊடகமொன்றிற்கு போட்டியளித்த தயான் மேலும் குறிப்பிடுகையில்,

இலங்கை மீதான சர்வதேச விசாரணைக் குழுவின் தலைவர் பதவியை சர்வதேசத்தில் நன்மதிப்பை பெற்ற ஒருவருக்கு வழங்க நவநீதம்பிள்ளை முயற்சித்து வருகிறார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் முன்னாள் செயலாளர் நாயகம் கொபி அனானை அதற்காக தெரிவு செய்

19 ஆம் பக்கம் பார்க்க....

## கொழும்பில் ரஷ்ய கப்பல்

(கொழும்பு)

ரஷ்யாவின் பசுபிக் பிரிவின் மூன்று கடற்படை கப்பல்கள் நேற்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தன.



ரியர் அட்மிரல் விளடீமீர் ஏ.திம்மித்ரிவ் தலைமையிலான இந்த ரஷ்ய கப்பல்களின் அதிகாரிகள் ஓய்வுக்காக கொழும்பு துறைமுகத்திற்கு வந்துள்ளனர்.

மார்ஷல் ஷப்போசினிகேவ், இல்ருக்ட், பயான் ஆகிய கப்பல்களை இலங்கை கடற்படையினர் கடற்படையின் மரபுகளுக்கு இணங்க வரவேற்றனர்.

மார்ஷல் ஷப்போசினிகேவ் என்ற கப்பலின் கட்டளை அதிகாரி

19 ஆம் பக்கம் பார்க்க....

### பள்ளிவாசலை அகற்ற பொது பல சேனா முயற்சி

(கொழும்பு)

மாவனல்லை ஹெம்மாத்தகம பிரதேசத்தில் உள்ள ஹேரேமினியா தாருல் ஹிக்மா பள்ளிவாசலை அங்கிருந்து உடனடியாக அகற்றுமாறு கோரி பொது பல சேனா அமைப்பு பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளது.

உரிய பதிவுகளை மேற்கொள்ளாது குறித்த பள்ளிவாசல் சட்ட

19 ஆம் பக்கம் பார்க்க....

### காணாமல் போனோர் தொடர்பில்

## ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் 18,600 முறைப்பாடுகள் பதிவு

(கொழும்பு)

இலங்கையில் கடந்த மூன்று தசாப்தங்களாக இடம்பெற்ற போரின போது காணாமல்போனோர் தொடர்பில் விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு 18,600 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இதனை குறித்த ஆணைக்குழுவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

குறித்த ஜனாதிபதி ஆணைக்குழு, கடந்த ஜனவரியில் இருந்து கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு ஆகிய இடங்களில் மூன்று அமர்வுகளை நடத்தியுள்ளது.

நான்காவது அமர்வு இந்த வாரத்தில் மட்டக்களப்பில் நடத்தப்பட

20 ஆம் பக்கம் பார்க்க....



ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூனை கடந்த செவ்வாய்க்கிழமை இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகபெரும சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். இச்சந்திப்பை ஐ.நாவின தலைமையகம் உறுதிப்படுத்தியுள்ள போதிலும், இதன்போது பேசப்பட்ட விடயங்கள் குறித்து எவ்வித தகவலையும் வெளியிடவில்லை.

### மிக வயதான பெண் 117 வயதில் மரணம்



(கொழும்பு)

ஆசியாவிலேயே மிக வயதான பெண் என அழைக்கப்பட்ட முதியவர் தனது 117 ஆவது வயதில் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

உக்கு அம்மா என அழைக்கப்பட்ட இவர் 1897 ஆம் ஆண்டு ஒக்டோ

19 ஆம் பக்கம் பார்க்க....

## வேற்றுக்கிரகம் மோதியதில் உருவான கோளம்தான் 'நிலா'

### புதிய ஆதாரங்கள் முன்வைப்பு

(லண்டன்)

பூமி உருவாகிவந்த சமயத்தில் அதன் மீது வேறொரு கிரகம் மோதிய பின்னர் பூமியைச் சுற்றி உருவான கோளம்தான் நிலா என்ற அறிவியல் கோட்பாட்டுக்கு ஆதரவான ஒரு ஆதாரம் கிடைத்திருப்பதாக புதிய ஆய்வுகள் வெளியாகியுள்ளன.

நாற்பது ஆண்டுகளுக்கும் முன்னால் அப்பலோ விண்கலத்தில்



நிலவுக்கு சென்றிருந்த விண்வெளி வீரர்கள் எடுத்துவந்த நிலவுப் பாறைகளில் இரசாயன ஆய்வுகளை மேற்

19 ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப் புலிகள் சுற்றுச்சூழல் தினத்துக்காக தங்கள் மாணவர் தினத்தை மாற்றியமைத்தார்கள்

## வடக்கு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகள் சுற்றுச்சூழல் மீது கொண்டிருந்த அக்கறை அளப்பரியது. ஒரு ஆயுதப் போராட்ட அமைப்பு பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்தவாறு சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபடுவது சாதாரணமானதல்ல. உலக சுற்றுச்சூழல் தினக் கொண்டாட்டங்களின் முக்கியத்துவம் குறைந்து போய்விடக்கூடாது என்பதற்காக அவர்கள் தங்கள் மாணவர் தினத்தையே மாற்றியமைத்தார்கள் என்று வட மாகாண விவசாயம், கமநலசேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

உலக சுற்றுச்சூழல் தினம் மற்றும் வட மாகாண சுற்றுச்சூழல் விழிப்புணர்வு வார நிகழ்ச்சிகள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மண்டைதீவு கண்டல் நிலச் சூழலில் நடைபெற்றது. அந்நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சுற்றுச்சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவம் பற்றி உரையாற்றியபோதே அமைச்சர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

விடுதலைப்புலிகள் பற்றி இப்போது பலரும் பலவாறாகப் பேசி வருகிறார்கள். வரலாற்றின் பக்கங்களில் சில விடயங்கள் பதியப்படாமல் போய்விடக்கூடாது என்பதற்காக இதனைக் குறிப்பிட விரும்புகிறேன். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் விடுதலைப்புலிகள் உலக சூழல்தினத்தை 1992ஆம் ஆண்டு யூன் 5ஆம் திகதி கொண்டாடியபோது, அதில் உரையாற்றுவதற்காக என்னையும் அழைத்திருந்தார்கள். அந்த நிகழ்ச்சியில் மிகக்குறைந்த எண்ணிக்கையானவர்களே கலந்து கொண்டிருந்தார்கள். இது எனக்கு மிகுந்த அதிருப்தியைக் கொடுத்தது.

யூன் 5ஆம் திகதிதான் தியாகி சிவகுமாரனின் நினைவு தினம். அவரது நினைவு தினத்தையே விடுதலைப்புலிகள் தங்கள் மாணவர் தினமாகவும் கொண்டாடி வந்தார்கள். பெருமெடுப்பில் கொண்டாடப்படும் இந்த நிகழ்ச்சியில் அதிக எண்ணிக்கையான மாணவர்கள் கலந்து கொள்வார்கள். உலக சுற்றுச்சூழல் தினத்தையும் மாணவர் தினத்தையும் ஒரேநாளில் வெள்வேறு விழாக்களாகக் கொண்டாடியதாலேயே சூழல் தினத்துக்கான முக்கியத்துவம் இல்லாமல் போனது. இரண்டு தினங்களையும் இணைத்து ஒரே நிகழ்ச்சியாக கொண்டாடியிருந்தால் கூடுதலானவர்கள் பங்கேற்றிருப்பார்கள் மாணவர்களும் சுற்றுச்சூழல் தொடர்பான விழிப்புணர்வைப் பெற்றிருக்க முடியும் என்று என் அதிருப்தியை மேடையில் இருந்த விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கு வெளிப்படையாகவே தெரிவித்தேன்.

அப்போது சந்திக்குச் சந்தி விடுதலைப் புலிகளினது அபிப்பிராயப் பெட்டிகள் வைக்கப்பட்டிருக்கும். சுற்றுச்சூழல் தினத்துக்கான முக்கியத்துவத்தையும், விடுதலைப்புலிகளின் மாணவர் தினத்தை அதே தினத்தில் கொண்டாடுவதால் சுற்றுச்சூழல் தினம் மீதான கவனிப்புக் குறைவது பற்றியும் அன்றைய தினமே விடுதலைப்புலிகளின் தலைவருக்கு ஒரு கடிதம் எழுதி அந்தப் பெட்டியில் சேர்த்திருந்தேன். அது மாத்திரமல்லாமல், அக்காலப் பகுதியில் பிரபலமாகியிருந்த கிட்டு பப்பாசி பற்றியும் அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தேன். கிட்டு வெளிநாடொன்றில் இருந்து எடுத்து வந்த பப்பாசி இனம் அது. அவர் எடுத்து வந்ததால் மாத்திரம் அது கிட்டு பப்பாசி ஆகி விட முடியாது. இவ்வாறு பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் பெயர் சூட்டி அழைப்பது இந்தப் பப்பாசி இனத்தை உருவா



க்கியவரின் அறிவுச் சொத்துரிமையைப் பறிப்பது போன்றதாகும் என்றும் எழுதியிருந்தேன்.

இக் கடிதத்துக்கு எனக்குத் தனிப்பட்ட முறையில் பதில் எதுவும் வரவில்லை. ஆனால், அடுத்த சில தினங்களுக்குள்ளாக அவர்களது பண்ணைகளில் மாட்டப்பட்டிருந்த கிட்டு பப்பாசி என்ற பெயர்ப் பலகைகள் யாவும் கழற்றப்பட்டு விட்டன. அடுத்த ஆண்டில் இருந்து யூன் 5ஆம் திகதியை உலக சூழல் தினமாக மாத்திரமே கடைப்பிடித்துக்கொண்டு, யூன் 5ஆம் திகதிதான் சிவகுமாரனின் நினைவு தினமாக இருந்தபோதும் யூன் 6 ஆம் திகதியே தங்கள் மாணவர் தினத்தைக் கொண்டாட ஆரம்பித்தார்கள்.

2009 ஆம் ஆண்டு வரை இவ்வாறு தான் நடைபெற்று வந்துள்ளது. இயற்கையின் மீது உண்மையான அக்கறை கொண்டிருந்தாலொழிய ஒரு ஆயுதப் போராட்டத் தலைமையால் சாதாரணமான ஒருவனின் கோரிக்கையை ஏற்று இந்த மாற்றத்தைச் செய்திருக்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார். (செ-6)

# முன்னாள் போராளிகள் பாராளுமன்றம் வருகை

(கொழும்பு)

வவுனியா பூந்தோட்டம் புனர்வாழ்வு முகாமில் புனர்வாழ்வு பெற்று வரும் முன்னாள் விடுதலைப்புலிப் போராளிகள் 140 பேர் நேற்று வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்துக்கு வருகை தந்திருந்தனர்.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் ஏற்பாட்டில் மேற்படி 140 பேரும் அழைத்து வரப்பட்டிருந்தனர்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வின் ஆரம்ப நிகழ்வு முதல், சபையின் அனைத்து நடவடிக்கைகளையும் பார்வையிட்ட அவர்கள் நேற்றைய தினமே காலி - அம்பாந்தோட்டை மற்றும் தெனியாய ஆகிய பிரதேசங்களுக்கும் பயணித்தனர்.

மேற்படி பிரதேசங்களுக்குச் சென்ற அவர்கள் அங்கு சிநேகபூர்வமாக விளையாட்டுப் போட்டிகளிலும் கலந்து கொண்டதாகவும் தெரிவித்தனர். (செ-11)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு
0213210815, 0215671532

தேவை

உங்கள் வீடுகளில் உள்ள பழைய புத்தகங்கள், கொப்பிகள், பத்திரிகைகள், காட்போட் பெட்டிகள் மற்றும் பழைய பிளாஸ்ரிக் வகைகள் அனைத்தும் உங்கள் வீடுகளுக்கு வந்து பணம் தந்து பெற்றுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
0770789476
(6589)

இறைச்சிக் கோழி விற்பனைக்கு



உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர் மற்றும் கல்போட் தினமும் சுத்தம் செய்யப்பட்டு நியாயமான விலையில் காலை 6.00 மணி முதல் இரவு 8.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.
நாய்க்கான கோழியிறைச்சி விற்பனைக்குண்டு 180/=
இப்போது கோழிப் பாகங்களும் (Chicken Parts) பெற்றுக் கொள்ளலாம்.
(சி-7584)
நல்லூர் பாம் சென்ரர். 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்.

3 Month Certificate Courses

| | | |
|---|---|---|
| Basic English | - | 1500/- |
| Advanced English | - | 1500/- |
| பேச்சுச் சிங்களம் | - | 1500/- |
| எழுத்துச் சிங்களம் | - | 1500/- |

புதிய பிரிவுகள் 08.06.2014 ஞாயிறு ஆரம்பம்
Success Language Centre
11, Kasthuriyar Lane, Jaffna.
T.P: 0776408622
(6587)

நீங்கள் ஓய்வு பெற்று விட்டீர்களா?



உங்கள் ஓய்வுக் காலத்தினை அனுபவிக்கும் அதேவேளை பணம் சம்பாதிப்பதையும் தொடருங்கள்.

தொடர்புகளுக்கு: த.பிரதீபன்
62/6 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.இல: 0777121868



(6586)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.குணம் சிறிராம்

அவர்கள் கடந்த நான்கு வருடங்களாக எமக்கு அலியான்ஸ் காப்புறுதி நிறுவனத்தின் சார்பாக நல்லதொரு சேவையை மேற்கொண்டுள்ளார். தற்பொழுது இவரின் திறமையின் காரணத்தாலும் இவரின் நற்குணத்தின் காரணத்தாலும் ஏசியன் அலியான்ஸ் (ASIAN ALLIANCE) காப்புறுதி நிறுவனத்தில் பிராந்திய முகாமையாளராக தேர்வு செய்யப்பட்டுள்ளார். இவரின் சேவைகள் மேன்மேலும் தொடர எமது பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கிளின்ரன் அந்தியகால சேவை
548, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(6590)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 19 - 04 - 1955



உதிர்வு 08 - 05 - 2014

அமரர் நடராசா யோகநாதன் (பொன்னார்)

கடந்த 08.05.2014 வியாழக்கிழமை எம்மைவிட்டுப் பிரிந்த எங்கள் குடும்பத் தலைவர் நடராசா யோகநாதன் அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (07.06.2014) சனிக்கிழமை காலை அவரது இல்லத்தில் நடைபெறும். தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"வேணுகீதம்" நக்கீரன் வீதி,
[illegible]டக்கு, அல்வாய். (சி-7583)

நடராசா யோகநாதன் (பொன்னார்) குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஆவது திருத்தச்சட்டம் குறித்த அழுத்தம் ஜனாதிபதிக்கு கசப்பை ஏற்படுத்தியுள்ளது

## நவசமசமாஜக்கட்சி தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

**அரசியல் அமைப்புச் சட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள 13ஆவது திருத்தச்சட்டத்திற்கும் அப்பால் சென்று தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி இலங்கை அரசுக்கு அழுத்தத்தை பிரயோகித்திருப்பது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஒருவித கசப்புத்தன்மையை தோற்றுவித்திருப்பதாக நவ சமசமாஜக்கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்துள்ளார்.**

கொம்பனித் தெருவில் அமைந்துள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இதேவேளை இந்தியாவின் முன்னாள் பிரதமர் கலாநிதி மன்மோகன்சிங்கிடம் ஏமாற்று வாக்குறுதிகளை வழங்கி அவரை ஏமாற்றி வந்தது மோடியிடம் செல்லுபடியாகாது என்பதை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உணர்ந்திருக்கிறார் என்றும் அவர் கூறியுள்ளார்.

இலங்கையை பொறுத்த வரையில் சிறுபான்மையினர் தொடர்ந்தும் நசுக்கப்பட்டு வருகின்றனர். வடமாகாண சபை தேர்தல் நடத்தப்பட்டு அதில் கூட்டமைப்பு வெற்றி பெற்றிருக்கின்ற போதிலும் மாகாணத்துக்குரிய அதிகாரங்கள் வழங்கப்படாது முட்டுக்கட்டை போடப்பட்ட நிலைமை காணப்படுகின்றது.

வடமாகாண சபையானது அரசாங்கத்தின் பிடிக்குள்ளேயே இருந்து வருகின்றது. இதனால் நல்லிணக்கம் என்பது எட்டாக்கனியாக மாறியிருக்கின்றது.

இது ஒருபுறம் இருக்க வடக்கில் நில அபகரிப்பு தொடர்ந்து கொண்டிருக்கின்றது. யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியில் அங்கு பல் லாயிரக்கணக்கான காணிகள் பாதுகாப்பு வலயங்களாக மாற்றப்பட்டன. தற்போது புதிய இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதுபோதாதமைக்கு தெற்கில் இருந்து சிங்கள மக்களும் வடக்கில் குடியேற்றப்பட்டு வருகின்றனர். நிலைமை இவ்வாறு இருக்கும் போது தமிழ் தேசியக் கூட்டமைப்பானது தமது மக்களின் பிரச்சினைக்கு தீர்வை காண்பதற்கு வெளிநாட்டு சக்திகளை எதிர்ப்பார்த்து கொண்டிருக்கின்றது.

ஆனால் கூட்டமைப்பு இதனை தவிர்த்து தமக்கு வாக்களித்த அனைத்து மக்களையும் ஒன்றுதிரட்டி போராட்டங்களை நடத்துவதன் மூலம் தமது எல்லைகளை எட்டமுடியும். கூட்டமைப்பு அவ்வாறு செயற்பட்டால் நவசமசமாஜக்கட்சியும் உறுதுணையாக இருக்கும் என தெரிவித்தார். (2)

# எதிர்க்கட்சி தலைவர் அழைப்பு விடுத்திருந்தால் விக்னேஸ்வரன் இந்தியா சென்றிருப்பார்

## அமைச்சர் நிர்மல கொத்தலாவல கூறுகிறார்

(கொழும்பு)

இந்தியாவின் புதிய பிரதமர் பதவியேற்ற வைபவத்திற்கு தன்னுடன் வருமாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க அழைப்பு விடுத்திருந்தால், வடக்கு மாகாண முதலமைச்சர் அவருடன் சென்றிருப்பார் என அமைச்சர் நிர்மல கொத்தலாவல தெரிவித்துள்ளார்.

மாத்தளை - குருநாகல் பிரதான வீதியின் புனரமைப்பு பணிகளை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 17 வருடங்கள் எதிர்க்கட்சியாக இருந்து மிகவும் சிரமப்பட்டே ஆட்சியை கைப்பற்றியது.

17 வருடங்களாக அமைப்பு ரீதியான பணிகளை மேற்கொண்டு, மக்களை ஒன்று திரட்டியே அன்று நாங்கள் ஆட்சியை கைப்பற்றினோம்.

ஆனால், இன்றைய எதிர்க்கட்சி பொறிகளை வைத்து, பேதங்களை ஏற்படுத்தி, பொய் பிரசாரங்களை மேற்கொண்டு ஆட்சியை கைப்பற்ற முயற்சித்து வருகிறது.

எமது அயல் நாடான இந்தியாவின் புதிய பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்பு விழாவுக்கு ஜனாதிபதி சென்றார்.

இன, பேதம் இல்லை என்பதாலும் சரியான முறையில் நாட்டை ஆட்சி செய்வதாலும் அவற்றை வார்த்தைகளுக்குள் மட்டும் வரையறுக்காது செயற்படுவதால், இந்திய பிரதமரின் பதவியேற்பு விழாவுக்கு வருமாறு வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்தார்.

எனினும் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அந்த கோரிக்கையை நிராகரித்தார்.

மோடி, எதிர்க்கட்சித் தலைவருக்கு வருமாறு அழைப்பு விடுத்து, எதிர்க்கட்சித் தலைவர், விக்னேஸ்வரனை தன்னுடன் வருமாறு அழைத்திருப்பாரேயானால் விக்னேஸ்வரன் அவருடன் சென்றிருப்பார் எனவும் அமைச்சர் நிர்மல கொத்தலாவல குறிப்பிட்டுள்ளார். (2)

# மாடுகளுக்கு கால்வாய் நோய்; பால் விற்பனை, வெட்டுவதற்குத்தடை

## மறு அறிவித்தல் வரை

மிருசுவில் வடக்குப் பகுதியில் 03 பட்டிகளிலுள்ள மாடுகளுக்கு கால்வாய் நோய் தொற்றியுள்ளதாக தென்மராட்சி பிரதேச கால்நடை வைத்தியதிகாரி வைத்தியர் ஜி.இரகுநாதன் தெரிவித்தார்.

இதனால், அங்கு இறைச்சிக்காக மாடுகள் வெட்டப்படுதலும் பால் விற்பனையும் வெள்ளிக்கிழமையிலிருந்து மறு அறிவித்தல் வரை தடைசெய்யப்பட்டுள்ளது. மறு அறிவித்தல் வரை மாட்டிறைச்சிக் கடைகளும் மூடப்பட்டிருக்கும் எனவும் அவர் கூறினார்.

கொடிகாமம் - பருத்தித்துறை வீதியில் வரணி வரையான இடங்களிலும் எழுதுமட்டுவாழ் ஏ-9 வடக்கு, மிருசுவில் வடக்கு பகுதியில் குடமியன், நாவற்காடு, எருவன், எழுதுமட்டுவாழ் படித்த மகளிர் குடியேற்றத்திட்டம், வரணி உள்ளிட்ட இடங்களில் பட்டிகளிலுள்ள மாடுகளுக்கே இந்த நோய் தொற்றியுள்ளது.

இந்த இடங்களிலிருந்து மாடுகள் வெளியிடங்களுக்கு கொண்டு செல்லப்படுவதும் வெளியிடங்களிலிருந்து மாடுகள் மேய்ச்சலுக்காக இந்த இடங்களுக்கு கொண்டு வருவதும் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

தொற்று ஏற்பட்டுள்ள பிரதேசத்தைச் சுற்றியுள்ள 15 கிலோமீற்றர் பகுதியிலுள்ள மாடுகளுக்கு முதற்கட்டமாக தடுப்பூசி ஏற்றப்பட்டு, தொடர்ந்து தொற்று ஏற்பட்ட மாடுகளுக்கு தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாகவும் அவர் கூறினார். இதன் மூலம் கால்வாய் நோய் பரவுவதை தடுக்கமுடியும். தடுப்பூசிகள் விரைவில் தமக்கு கிடைக்கும் பட்சத்தில் தடுப்பூசிகள் போடப்படும் எனவும் தெரிவித்தார். (2-4-29)

# ஜனாதிபதி ஆணைக்குழுவின் பதிவுகள் காத்தான்குடியில்

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வு நேற்று காலை காத்தான்குடி பிரதேச செயலகத்தில் ஆரம்பமானது.

காணாமற்போனார் தொடர்பாக விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வு பெற்ற நீதிபதி மெக்ஸ்வல் பராக்கிரம பரணகம தலைமையில் இந்த அமர்வு நடைபெறுகின்றது. காத்தான்குடியில் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்தவர்களின் சாட்சியங்கள் பதியப்பட்டு வருகின்றன.

நேற்றும் இன்றும் காத்தான்குடியிலும் நாளை ஞாயிற்றுக்கிழமை ஆரையம்பதி பிரதேச செயலக மண்டபத்திலும் ஆணைக்குழுவின் அமர்வு இடம்பெறவுள்ளன. காத்தான்குடியிலிருந்து மட்டும் 163 பேரின் விண்ணப்பங்கள் ஆணைக்குழுவுக்கு கிடைத்துள்ளதாக ஆணைக்குழுவின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (2)

# இராசி பலன்

**07.06.2014**

**(வைகாசி 24, சனிக்கிழமை)**

**சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு**

**நவமி பிற்பகல் 1.46 மணிவரை**

**உத்தரம் பிற்பகல் 1.05 மணிவரை**

**இராகுகாலம் 8.52-10.22 மணிவரை**

**சுபநேரம் 2.52-4.22 மணிவரை**

வளவன்

**மேடம்:** கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், மற்றவர்களின் மனநிலையை அறிந்து செயற்படுவீர்கள், தேக நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும்.

**இடபம்:** மனமகிழ்ச்சியோடு செயற்படுவீர்கள், பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள், சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம்.

**மிதுனம்:** நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.

**கடகம்:** புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், உடன் பிறப்புக்கள் உங்களின் கருத்துக்களை ஏற்க முன்வருவர், பயணங்களால் பலனுண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**சிம்மம்:** புண்ணிய காரியங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள், பணப் புழக்கம் அதிகரிக்கும், வெளியூர்த் தொடர்புகள் கூடும், வீட்டுத் தேவைகளை நிறைவு செய்வதில் சில தாமதம் ஏற்படலாம்.

**கன்னி:** புதிய அனுபவங்கள் ஏற்படும் நாள், உடல்நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கற்பனை மிகுதியான நாள், தொழிலில் அதிக ஈடுபாடு காட்டுவீர்கள்.

**துலாம்:** நடப்பதெல்லாம் நன்மைக்கே என்று நினைக்க வேண்டிய நாள், காரிய அலைச்சல்கள் அதிகரிக்கும், அதிகாரிகளை அனுசரித்துச் செல்ல வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

**விருச்சிகம்:** புகழ்பெற்றவர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கப் பெறுவீர்கள், குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும், வருமானம் திருப்திதரும், காரிய அனுகூலமுண்டு.

**தனுசு:** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், உற்றார், உறவினர்கள் உங்கள் முன்னேற்றத்தைக் கண்டு ஆச்சரியப்படுவர், குடும்ப ஒற்றுமை கூடும், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள்.

**மகரம்:** உங்களின் திறமைக்கு இன்று பாராட்டுக்கள் கிடைக்கும், அரைகுறையாக இருந்த பணிகளை ஒவ்வொன்றாகச் செய்து முடிப்பீர்கள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள்.

**கும்பம்:** கவலைகள் தீர கடவுளை வழிபட வேண்டிய நாள், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் இழுத்தடிக்கப்படலாம், நல்லவர் என நினைத்த ஒருவரே உங்களுக்கு விரோதமாக செயற்படலாம்.

**மீனம்:** உறவினர் வழியில் மனதிற்கினிய தகவல்கள் வந்து சேரலாம், நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறலாம், பயணங்களால் பலனுண்டு, காரிய அனுகூலமுண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிமாவட்ட ஆசிரியர்கள் சொந்த இடங்களுக்கு இடமாற்றம்

## இலங்கை ஆசிரியர் சங்கம்

வெளிமாவட்டங்களில் கடமையாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு இவ்வருட இறுதிக்குள் இவர்களின் சொந்த இடங்களுக்கு இடமாற்றம் வழங்கப்படவுள்ளது என இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

வடமாகாண கல்வி அமைச்சர் மற்றும் வடமாகாண கல்விச் செயலாளர், மாகாணக் கல்வித் திணைக்கள அதிகாரிகள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், இலங்கை ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்ட சந்திப்பு ஒன்று வடமாகாண கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்றது. கலந்துரையாடலின் போதே வடக்கு மாகாண கல்வியமைச்சு மேற்கண்ட உறுதி மொழியினை வழங்கியதாக இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் யோசப் ஸ்ராலின் தெரிவிக்கையில்,

இடமாற்றங்கள் அனைத்தும் தேசிய இடமாற்றக் கொள்கைக்கு அமைய இடம்பெறும் எனவும் வெளிமாவட்டங்களில் கடமையாற்றி வருபவர்களுக்கு அவர்களின் சொந்த வதிவிடங்களுக்கு அண்மையிலுள்ள பாடசாலை வழங்கப்படும் எனவும் வடமாகாண கல்வி அமைச்சரால் கூறப்பட்டதுடன் அனைவராலும் இவ்விடயம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மேலும் அடுத்த வருடம் முதல் அனைத்து இடமாற்றங்களும் ஜனவரி மாதம் நடைமுறைப்படுத்தப்படுமெனவும் கூறப்பட்டது. அத்துடன் இந்த வருடம் யாழ்.மாவட்டத்தில் இருந்து வெளிமாவட்டங்களுக்குரிய இடமாற்றங்களை உடனடியாக மேற்கொள்வதற்குரிய நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்பு விடுக்கப்பட்டது என அவர் தெரிவித்தார். (2-4)




# தவறான அரசியல் வழிநடத்தல்களால் இந்நாடு இரத்தத்தில் மூழ்கடிக்கப்பட்டது

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு







ஒருகால கட்டத்தில், யுத்தம் காரணமாக இந்நாடு இரத்தத்தில் மூழ்க தவறான அரசியல் வழிநடத்தல்களே காரணமாகின. இவ்வாறானதொரு கொடிய யுத்தத்துக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே முற்றுப்புள்ளி வைத்தார் என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

குருதிக் கொடையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலக இரத்ததான நிகழ்வில் கலந்துகொள்வதில் மகிழ்ச்சியடையும் அதேவேளை, இதனை ஏற்பாடு செய்த ஏற்பாட்டாளர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.


தானத்தில் சிறந்த தானமாக இரத்ததானம் கருதப்படுகின்றது. ஒரு காலகட்டத்தில் தவறான அரசியல் வழிநடத்தல்கள் காரணமாக இந்நாடு இரத்தத்தில் மூழ்கடிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு இந்நாட்டில் இடம் பெற்று வந்த கொடிய யுத்தத்தை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முடிவுக்குக் கொண்டுவந்து முற்றுப்புள்ளி வைத்தார் என அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

சர்வதேச நாடுகள் உலக இரத்ததான நிகழ்வை இலங்கையில் கடைப்பிடிக்க அங்கீகாரம் வழங்கியுள்ளமை சிறப்பம்சமாகும். எனவே, ஆரோக்கியமான சமூகத்தை கட்டியெழுப்ப எமது மக்கள் இவ்வாறானதொரு குருதிக்கொடையை வழங்குவதற்கு முன் வர வேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி உரையாற்றுகையில்,

2004 ஆம் ஆண்டு முதல் உலக சுகாதார ஸ்தாபனத்தினால் இத்தினம் ஏற்பாடு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அந்தவகையில் இத்தினம் இவ்வாண்டு இலங்கையில் முன்னெடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கையின் தேசிய நிகழ்வு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில், அதில் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட தாய்மார்கள் பங்கெடுக்கவுள்ளனர் என்றார். (2-6)




# தாய்மாரின் இறப்புவீதம் இலங்கையில் குறைவு

(யாழ்ப்பாணம்)

அபிவிருத்தியடைந்த நாடுகளை விட பிரசவத்தின் போது இறக்கும் தாய்மாரகளின் எண்ணிக்கை இலங்கையில் மிகவும் குறைவடைந்த நிலையிலேயே யுள்ளது என யாழ்.போதனா வைத்தியசாலையின மகப்பேற்று பெண் நோயியல் துறைத்தலைவரும், வைத்திய நிபுணருமான கே.முகுந்தன் தெரிவித்தார்.

குருதிக் கொடையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு கடந்த 4 ஆம் திகதி யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம் பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு இலட்சம் பிள்ளைகள் பிறக்கும் போது ஆயிரம் தாய்மார்கள் இறக்கின்றனர். தென்கிழக்காசியாவில் இலங்கையில் தான் பிரசவத்தின் போது தாய்மார்கள் இறக்கும் விகிதம் மிகவும் குறைவாகவுள்ளது. அபிவிருத்தியடைந்த நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் பிரசவத்தின் போது தாய் மரணமடையும் விகிதம் குறைவாகவேயுள்ளது. உலகிலேயே ஆபிரிக்க நாடுகளிலேயே அதிகளவில் தாய்மார் இறக்கின்றனர்.

உலகில் ஒரு நிமிடத்திற்குள் 800 தாய்மார் பிரசவத்தின் போது உயிரிழக்கின்றனர். இரத்தம் ஏற்றுதல் மூலம் பிரசவத்தின்போது அதிக உதிரப்போக்கு காரணமாக இறக்கும் தாயமாரின் எண்ணிக்கையை குறைக்க முடியும் என்றார். (2-6)

# வடமாகாண ஆளுநரினால் மருத்துவ சிகிச்சை நிதியுதவி



வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியினால் 67 பேருக்கான மருத்துவ சிகிச்சை நிதியுதவி மூன்றாவது தொகுதியாக வழங்கப்பட்டது.

இந்நிதியுதவி நேற்று முன்தினம் வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் வைத்து உரியவர்களுக்கு வழங்கப்பட்டது.

இதில் புற்றுநோய், சிறுநீரகம், இருதய சத்திர சிகிச்சைஎனபலநோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டது.

இதன்போது முள்ளந்தண்டு நரம்பு இன்றி நடக்க முடியாத நிலையிலிருந்த ஐந்து வயது சிறுமி ஒருவரின் மருத்துவ செலவுக்காக இரண்டு இலட்சம் ரூபாவினைஆளுநர்வழங்கிவைத்தார்.

இதில் வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், உப செயலாளர், ஜே.எக்ஸ்.செல்வநாயகம், எஸ்.அண்ணாத்துரை மற்றும் பல அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# ஒற்றுமையாக வாழ்வதற்கு மொழி கட்டாயமானது

## யாழ்.மாவட்ட கட்டளைத்தளபதி வலியுறுத்து

தமிழ்மொழிச் சகோதரர்களுக்கு சிங்களமொழியை கற்றுக் கொடுக்க வேண்டும். அதேபோன்று, சிங்களமொழிச் சகோதரர்களுக்கு தமிழ்மொழியை கற்றுக்கொடுக்க வேண்டும் என யாழ்.மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதி உதயபெரேரா தெரிவித்துள்ளார்.

தமிழ்மொழி பயிற்சியில் தேர்ச்சி பெற்ற இராணுவ வீரர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு காங்கேசன்துறை தல்செவன விருந்தினர் விடுதியில் நேற்று முன் தினம் மாலை நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். இங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

"எல்லோரும் ஒன்றாக, ஒற்றுமையாக வாழ்வதற்கு மொழி கட்டாயமானது. அந்த வகையில், நாங்கள் தமிழ்மொழிச் சகோதரர்களுக்கு சிங்களமொழியை கற்றுக் கொடுகக வேண்டும். அதே போன்று, சிங்களமொழிச் சகோதரர்களுக்கு தமிழ்மொழியை கற்றுக்கொடுக்க வேண்டும்.

தமிழ்மொழிமூல பயிற்சி நெறியை சில இராணுவ வீரர்கள் கற்றுத் தேர்ந்துள்ளார்கள். தமிழ்மொழி கற்பது இலகுவானது.

நாட்டில் உள்ள மும்மொழிகளில் தமிழ், சிங்களம் கட்டாய மானதாகும்.

மேலும்யாழ். குடாநாட்டில் அனைத்துப் பிரதேசங்களிலும் கடமையாற்றும் இராணுவ வீரர்களுக்குத் தமிழ்மொழியை மேம்படுத்தும் நோக்கத்துடன் இந்த தமிழ்மொழிப் பயிற்சிநெறி ஆரம்பிக்கப்பட்டது" என்றார்.

இதேவேளை, யாழின் அனைத்து பிரதேசங்களிலும் கடமையாற்றும் இராணுவ வீரர்களுக்கான தமிழ் மொழி பயிற்சி வழங்கப்பட்டது. இப் பயிற்சி நெறியானது ஒரு மாதகாலத்தை கொண்டதாகும்

பயிற்சி நெறியினை மேற்கொண்டவர்களுக்கு இறுதியில் சொல்வதெழுதல் எழுத்துப்பரீட்சை மற்றும் பரீட்சை குழு ஒன்றினால் நேர்முக செய்முறை பரீட்சை வைக்கப்பட்டது அதில் தேர்வானவர்களுக்கே சான்றிதழ் வழங்கப்பட்டன.

இப் பயிற்சி நெறியினை 17 அதிகார தர இராணுவத்தினரும் ஆயிரத்து 195 இராணுவ வீரர்களும் பூர்த்தி செய்துள்ளனர்.

2015 ஆம் ஆண்டு பெப்ரவரி மாத இறுதியில் யாழ்.பாதுகாப்பு படை தலைமையகத்தின் கீழ் கடமையாற்றும் அனைத்து இராணுவ வீரர்களும் தமிழ் மொழி பயிற்சி நெறியினை பூர்த்தி செய்வதை நோக்காக கொண்டே இப் பயிற்சி நெறிகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும்தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் அன்றையதினம் தமிழ் மொழி தேர்ச்சி பெற்ற இராணுவ வீரர்களால் தமிழ்மொழி மூல நாடகம் ஒன்றும் மேடையேற்றப்பட்டு இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (2-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்றச்சாட்டுக்களில் இருந்து மீள்வதற்கு அரசிற்கு வாய்ப்புள்ளது

## எரான் விக்ரமரட்ண எம்.பி.தெரிவிப்பு

**இலங்கை தமிழர் தொடர்பில் ஐக்கிய நாடுகளின் மத்தியஸ்தத்தில் புலம்பெயர் தமிழர்களையும் உள்ளடக்கி சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று தமிழக முதல்வர் கோரியுள்ளமையை ஐக்கிய தேசியக் கட்சி நிராகரித்துள்ளது.**

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரட்ண இந்த நிராகரிப்பை கொழும்பில் செய்தியாளர்கள் மத்தியில் வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி எப்போதும் இலங்கையின் ஒருமைப்பாடு மற்றும் எல்லை சுதந்திரம் என்பவற்றை பாதுகாத்து வருகிறது.

இந்நிலையில் ஜெயலலிதாவின் கோரிக்கையை ஏற்கமுடி யாது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். ஜெயலலிதாவின் சர்வஜன வாக்கெடுப்பு கொள்கையை ஐக்கிய தேசியக் கட்சி எதிர்த்தாலும் ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரங்கள் பகிரப்படவேண்டும் என்பதில் உறுதியாகவுள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதன்போது வெளியாரின் தலையீடுகள் தவிர்க்கப்பட வேண்டும் என்றும் எரான் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஐக்கிய நாடுகளின் போர்க் குற்றம் தொடர்பில் குற்றச்சாட்டுக்களில் இருந்து மீள்வதற்கு இன்னமும் இலங்கை அரசாங்கத்துக்கு வாய்ப்புள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் குற்றவாளிகள் தராதரம் பாராது தண்டிக்கப்பட வேண்டியது அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் இனவாதத்தை தூண்டும் வகையில் கருத்து வெளியிடுகின்றனர், அவற்றை ஏற்றுக் கொள்ள முடியாது.

இவ்வாறான கருத்துக்கள் மூலம் நாட்டுக்கு பாதகம் ஏற்படும். அனைவரும் நாம் இலங்கையர் என்பதனை கவனத்திற் கொள்ள வேண்டும்.

சுங்கத் திணைக்கள அதிகாரிகளின் பாதுகாப்பை உறுதி செய்வது குறித்து பேசப் படுகின்றது. சுங்கத் திணைக்கள அதிகாரிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதில் மாற்றுக் கருத்துக்கிடையாது.

குற்றவாளிகளின் பெயர்கள் குறித்த தகவல்கள் வெளியிடப்பட வேண்டும். சுங்கத் திணைக்களம் ஊழல் மோசடிகள் நிறைந்த நிறுவனமாகவே மக்களினால் கருதப்படுகின்றது.

இதனை மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இதில் அரசியல் தலையீடுகளை முற்று முழுதாக தடுக்க ஆவன செய்ய வேண்டும்.

உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த அதிகளவில் செலவிடுவதனால் மட்டும் அபிவிருத்தியை ஏற்படுத்திவிட முடியாது. உற்பத்தியை மையமாகக் கொண்ட அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டியது அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார். (2)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 4<br>கி.பா: 12.75 செவ் 2 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: A/L, Q.S / தொழில்நுட்ப உத்தியோகத்தர்<br>தொ.இ: B/3206 | பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 2<br>கி.பா: 19.25 செவ் 8 இல்<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/3224 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 1<br>கி.பா: 18.5<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L / தாதியர்<br>தொ.இ: B/3211 | பிறப்பு: 1986 கிறிஸ்தவம் RC<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: MBBS / வைத்தியர்<br>தொ.இ: G/3225 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 3<br>கி.பா: 22.5 செவ் 12 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: Charted Accounting / கணக்காளர் (ஓமான்)<br>தொ.இ: B/3212 | பிறப்பு: 1990 கிறிஸ்தவம் RC<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/3230 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 24 சூரி செவ் 6 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BSc / பொறியியலாளர் (சிங்கப்பூர்)<br>தொ.இ: B/3213 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 1<br>கி.பா: 15<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L / தற்காலிக வேலை<br>தொ.இ: G/3231 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )



அக்கினி வேதாகமப் பாடசாலை
FIRE
இலவச புதிய பயிற்சிப் பிரிவு ஆரம்பம்
இயேசு கூறினார் "அறுவடையோ மிகுதி வேலையாள்களோ கொஞ்சம்" இயேசுக் கிறிஸ்து பார்வையாளர்களை உருவாக்க வரவில்லை. சீஷர்களை உருவாக்க வந்தார்.
பயிற்சியின் காலப்பகுதி: ஒரு வருடம்
கல்வியின் இலக்கு:
❖ இறையியலும் பயிற்சியும் (Theology and Practice)
❖ சுவிஷேசத்தை அறிவிக்கவும் சபையை ஸ்தாபிக்கவும் (Mission for Evangelism & Church Planting)
❖ நற்சான்று பயிற்சி (Character Training)
❖ ஒழுங்கமான அர்ப்பணிப்பு (Disciplined Devotion)
விண்ணப்ப ஆரம்பத் திகதி: 02 June 2014 விண்ணப்ப முடிவுத் திகதி:- 15 June 2014
நீங்கள் இயேசுவின் சீஷர்களாக மாற விரும்புகின்றீர்களா?
கர்த்தர் வைத்திருக்கிற அழைப்பை அறிந்து அவருக்காக அனலாகச் செயற்பட வாஞ்சிக்கிறீர்களா?
அதற்குரிய பயிற்சியை வேதாகமப் பாடசாலையில் மேற்கொள்ள விரும்புகிறீர்களா?
மேலதிக தொடர்புகளுக்கு: 021 790 4469
72/4, சொலமன் லேன், கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.
(6554)
Email: fireschool.sl@gmail.com/Web: www.gpwmission.com


# மைதானத்தின் பெயரை நீக்க வேண்டும்

## மங்கள சமரவீர எம்.பி

ருஹுணு பல்கலைக்கழகத்தின் மாணவர்களுக்கு சனத் ஜெயசூரிய எம்.பி. தாக்க முற்பட்டமையை கருத்திற் கொண்டு மாத்தறை மைதானத்தின் பெயர் நாமத்திலிருந்து சனத்ஜெயசூரியவின் பெயரை நீக்க வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

அண்மையில் ருஹுணு பல்கலைககழக மாணவர்களின் மீது முன்னாள் கிரிக்கெட் வீரரும் பாராளுமன்ற உறுப்பினருமான சனத் ஜெயசூரிய தாக்க முற்பட்டமையானது மிகவும் மிலேச்சத்தனமான செயலாகும்.

சனத் ஜெயசூரியவின் குடும்பம் ஐ.தே. கட்சியினரான போதிலும் தான் அமைச்சரான காலப்பகுதியில் இவரது பெயர் நாமத்தினை குறித்த மைதானத்திற்கு சூட்டினேன். இருந்த போதிலும் சனத் ஜெயசூரிய இவ்வாறு மிலேச்சத்தனமாக நடப்பார் என நம்பவில்லை.எனவே, குறித்த மைதானத்திலிருந்து சனத் ஜெயசூரியவின் பெயர் நாமத்தினை நீக்க வேண்டும். அதற்கு பதிலாக புனித செவ ரல்ஸ் கல்லூரி பெயர் நாமத்தை சூட்ட வேண்டும் என்றார். (2)




உ
ஸ்ரீஸ்ரீ அம்மா பகவான் சரணம்
ஓம் சச்சிதானந்த பரப்ரம்மா புருஷோத்தம பரமாத்மா
ஸ்ரீ பகவதி சமேத ஸ்ரீ பகவதே நமஹா

ஸ்ரீஸ்ரீ அம்மா பகவானின் 38 ஆவது திருக்கல்யாண தினம்
லோக கல்யாண மஹோற்சவமும் WEBCAST தரிசனமும்

அன்பர்களே! சம்பூர்ண அவதார புருஷர்களான ஸ்ரீ அம்மா பகவான் உலக மக்களுக்கு ஜீவன் முக்தி அளித்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில் திருக்கல்யாண தினத்தை லோக கல்யாண மஹோற்சவமாகக் கொண்டாட திருவருள் பாலித்துள்ளது.

இடம்:- "இளங்கலைஞர்" மன்றம் கலா மண்டபம், சட்டநாதர் கோவில் வீதி, நல்லூர்.
காலம்:- 09.06.2014 திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணி, WEBCAST தரிசனம் 5.00 மணி

சர்வமங்கள கரமான லோக கல்யாண நன்னாளில் அனுக்ரகம் பெறும் வாய்ப்பினை ஸ்ரீ அம்மா பகவான் மக்களுக்கு தந்துள்ளார்.

இன, மத பேதமின்றி இவ்வைபவத்தில் கலந்து அனுக்ரகம் பெறும் வண்ணம் அழைக்கின்றோம்.

*"அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே"*
*"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"*

வித்யாமாலை:-
அறிவுத்திறனை விருத்தி செய்வதற்கான வழிமுறைகளைத் தேடி அலையும் இளைஞர்களுக்கு தடைகளை நீக்கி வெற்றிப்பாதையைக் காட்டும் ஸ்ரீ அம்மா பகவானின் வித்யாமாலை அணியும் நிகழ்வு பாடசாலைகளிலும் சத்சங்கங்களிலும் ஜுன் மாதம் 12 ஆம் திகதியிலிருந்து நடைபெறும்.

(6583)
ஸ்ரீ அம்மா பகவான் சத்சங்கங்களின் ஒன்றியம், யாழ். மாவட்டம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொலமன் தீவில் புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதியுதவி

## இலங்கை அரசு வழங்கியது

சொலமன் தீவில் ஏற்பட்ட பாரிய புயலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக, இலங்கை மக்கள் சார்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் 50 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

சொலமன் தீவிலுள்ள ஜோர்தான் டார்ஸி லிலோ மாநிலத்திற்கு கடந்த மே மாதம் 22 ஆம் திகதி விஜயத்தினை மேற்கொண்டுள்ள போது அந்நாட்டு பிரதமரை நேரில் சந்தித்த அட்மிரல் திஸர சமரசிங்க, ஜனாதிபதியினால் எழுதப்பட்ட ஓர் கடிதத்தினையும் 50 ஆயிரம் அமெரிக்க டொலர் அடங்கிய காசோலையினையும் கையளித்துள்ளார்.

இது பற்றி சொலமன் நாட்டுப் பிரதமர் கருத்துத் தெரிவிக்கையில்.



வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் வட்டு கிழக்கு சித்தன் கேணியினைச் சேர்ந்த உயர்தர வகுப்பில் கல்வி கற்கின்ற மாணவியின் கல்வியை ஊக்குவிக்கும் முகமாக 20 ஆயிரம் ரூபாவை அன்பளிப்பாக வழங்குவதை படத்தில் காணலாம்...

இலங்கை ஜனாதிபதிக்கு தனது நன்றிகளைத் தெரிவிப்பதோடு இவ்வாறு நாம் பாதிக்கப்பட்ட போது நேரமறிந்து உடன் உதவி புரிந்ததற்கு நான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன் என்றும் கூறினார்.

இந்நன்கொடை தொகை உடனடி அவசர தேவையான உணவு, உறைவிட வசதி, சுகாதாரம் போனறவற்றிற்கு முதலில் பயன்படுத்தப்படும்.

பொதுநலவாய மாநாடுகளின் போது தான் இலங்கை விஜயத்தினை மேற்கொண்டது பற்றி நினைவு கூர்ந்ததுடன் இலங்கையின் தற்போதைய அபிவிருத்தியானது மஹிந்த ராஜபக்ஷவின் அசைக்க முடியாத நம்பிக்கையும் திறமையுமே எனக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை நாட்டின் ஜனாதிபதிக்கும் மக்களுக்கும் தமது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன் இவ்விரு நாடுகளுக்குமிடையே சிறந்த நட்புறவினை பேண வேண்டும் என மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அபிவிருத்தி திட்டமிடல் மற்றும் உதவி ஒருங்கிணைப்பு அமைச்சர் கனன்லீ, பிரதமர் றொபேட் இரோகா மற்றும் ரஞ்சித் ஹெவாகம ஆகியோர் இந் நிகழ்வில் பங்கேற்றனர். (2)

# தவறுகளை சுட்டிக்காட்டுவதற்கு உரிமையுண்டு- அமைச்சர் மேர்வின்

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை உருவாக்க அர்ப்பணிப்புகளை மேற்கொண்ட அமைச்சர்கள் விமல் வீரவன்ஸ மற்றும் சம்பிக்க ரணவக்க ஆகியோருக்கு தவறுகளை சுட்டிக்காட்டும் உரிமை இருப்பதாக அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனை கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமைச்சர்கள் விமல் வீரவன்ஸ, சம்பிக்க ரணவக்க ஆகியோர் ஆளும் கூட்டணியை கட்டியெழுப்ப உதவியவர்கள். அவர்கள் படித்த முக்கியமான நபர்கள்.

ஏதேனும் ஒன்றை சுட்டிக்காட்டும் உரிமை அவர்களுக்கு உள்ளது. அவர்கள் சுட்டிக்காட்டுவதை ஆராய்ந்து பார்க்கும் உரிமை ஜனாதிபதிக்கு உள்ளது.

இந்த அமைச்சர்கள் கோபத்தில் இவற்றை கூறவில்லை. ஆளும் கூட்டணியில் தண்ணீர் நிறைந்த பின்னர் சத்தமிடும் தவளைகள் போன்றவர்கள் இல்லை. மனிதத் தன்மை பற்றி பேசும் நபர்களே உள்ளனர். (2)


# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 | 90 |
| பச்சைமிளகாய் | 250 | 280 | 200 |
| தக்காளி | 180 | 180 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 50 |
| கோவா | 140 | 100 | 120 |
| கரட் | 160 | 140 | 160 |
| பூசணி | 80 | 80 | 70 |
| புடோல் | 80 | 80 | 100 |
| வாழைக்காய் | 40 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 130 | 100 | 120 |
| பெரிய வெங்காயம் | 90 | 80 | 90 |
| பாகற்காய் | 160 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 70 | 70 | 80 |
| கருணைக் கிழங்கு | 50 | 50 | 60 |
| பயற்றங்காய் | 130 | 140 | 100 |
| லீக்ஸ் | 80 | 80 | 100 |
| பீற்றூட் | 90 | 90 | 100 |
| கறிமிளகாய் | 200 | 130 | 160 |
| முருங்கைக்காய் | 150 | 200 | 120 |
| போஞ்சி | 140 | 140 | 140 |
| கத்தரிதம்புள்ள | 60 | 60 | 80 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 |
| தேசிக்காய் | 150 | 140 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 15-50 | 30 | 20-30 |
| இராசவள்ளி | 90 | 100 | 100 |


# (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 37




**அஜித்குமார் அஜித்**




**பிரியன் பிரியா**





**கவின் ராஜேஸ்**



கணவர் நல்லா இருக்கணும் என்று திருவாதிரை விரதமும், தாலி நிலைத்திருக்கணும் என்று சுமங்கலி விரதமும் இருக்கும் பெண்களே.... நீங்கள் மௌன விரதம் இருந்து பாருங்க உங்க கணவரை விட சந்தோசமான மனிதன் இந்த உலகில் வேறு யாரும் இருக்க மாட்டார்கள்...!!!

**வாசிகன் நந்தகோபால்**



தமிழ் ரீச்சர் : அவள் நடந்து சென்றாள்...
இந்த வாக்கியத்தை ஆச்சரியக்குறியுடன் மாற்றுங்கள் பார்ப்போம்...
மாணவன்: டேய் மச்சான் ,figure டா!

**சுஜன் சுஜன்**




**மணி கண்டம்**

வாழ்க்கையில் தோல்வி மட்டும் தொடர்ந்து வந்தால் தோற்றுக் கொண்டிருக்கிறோம் என்று அர்த்தம் இல்லை... தோல்வியைத் தாண்டிச் சென்று கொண்டிருக்கிறோம் என்று அர்த்தம்...

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளியவளை பொதுச்சந்தை குறைபாடுகளை நிவர்த்தி செய்க





(முல்லைத்தீவு)

**யுத்தத்தினால் சேதமடைந்த முள்ளியவளை பொதுச் சந்தையை புனரமைத்து தந்துள்ள போதிலும்வியாபாரநடவடிக்கைகளைமேற்கொள்ளும் வியாபாரிகளும் மக்களும் பல்வேறு அசௌகரியங்களைஎதிர்நோக்கிவருகின்றனர்.**

முள்ளியவளை பொதுச் சந்தையிலுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்து தருமாறு வலியுறுத்தி சந்தை நிர்வாகத்தினரால் மனுவொன்று நேற்றைய தினம் கரைதுறைப் பற்று பிரதேச செயலரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

அம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

முள்ளியவளை பொதுச்சந்தை யுத்தத்தினால் மிகவும் மோசமாக சேதமடைந்திருந்தது.

இந்நிலையில்பிரதேசசபையினரால் 44 இலட்சம் ரூபா செலவில் சந்தை கட்டடம் புனரமைக்கப்பட்டு கடந்த ஏப்ரல் மாதம் 9'ஆம் திகதி திறக்கப்பட்டது.

சந்தையை புனரமைத்து வியாபார நடவடிக்கைகளுக்கு விட்டமையிட்டு உங்களுக்கு நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

எனினும், சந்தையின் மீன், இறைச்சிக் கடைகளின் கழிவு நீர் செல் லும் வடிகால் சிறிதாகவுள்ளதனால் அப் பகுதியில் துர்நாற்றம் வீசுகின்றது.

முழுமையாக மின்சார வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. சந்தைக் கட்டடத்தின் கூரைகள் ஒழுங்கீனமாகவுள்ளதால் மழைகாலங்களில் உட்புற வளாகத்தில் நீர் தேங்கி காணப்படுகின்றது.

துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் பின்பக்க வேலிகள் என்பன அமைக்கப்படவில்லை.

மேற்குறித்த வசதிகளின்மையால் மக்களும் வியாபாரிகளும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்நிலையில், ஏற்கனவே தங்களிடம் வாய் மூலமாக இப்பிரச்சினைகள் தொடர்பில் தெரியப்படுத்தியும் எவ்வித நடவடிக்கையும் எடுக்க வில்லை.

தற்போதாவது, குறித்த குறைபாடுகளை விரைவில் நிவர்த்தி செய்யுமாறு கோரிக்கை விடுக்கின்றோம் எனவலியுறுத்தப்பட்டுள்ளது. (9-267)

# சட்டவிரோத கட்டடங்கள்; நீதிமன்று செல்ல உத்தேசம்

(முல்லைத்தீவு)

கரைதுறைப்பற்று பிரதேச சபையினால் கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்தல் மற்றும் சட்டவிரோத கட்டடங்கள், ஆலய உற்சவங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் முன்னாயத்தங்கள் பற்றி செயலாளர் சு.ரவீந்திரநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பாதசாரிகளினதும் வாகனங்களதும் போக்குவரத்துக்கு இடையூறாக கட்டாக்காலி கால்நடைகள் காணப்படுகின்றன. எனவே, கட்டாக்காலி கால்நடைகளை பிடிக்கும் செயற்பாட்டை பிரதேச சபை மீளவும் ஆரம்பித்துள்ளது.

இந்நிலையில், பிடிக்கப்படுகின்ற கால்நடைகள் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டு உரிமையாளர் தண்டப் பணம் செலுத்த வேண்டி ஏற்படும்.

அத்தோடு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அனுமதியின்றி கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இக்கட்டடங்களை அமைக்க வேண்டாமென பல தடவைகள் அறிவுறுத்தியிருந்தும் உரிமையாளர்கள்கவனத்திலெடுக்காமை யினால் நீதி மன்றில் வழக்குத் தொடரப்படவுள்ளது. பிரதேச சபையின் எல்லைக்குள் கட்டடங்களை நிர்மாணிப்போர் பிரதேச சபையிடம் அனுமதியை பெற்றுக் கொள்வது அவசியம்.

மேலும், வற்றாப்பளை கண்ணகைஅம்மன் ஆலயத்திருவிழாவை முன்னிட்டு கழிவகற்றல் பாதைகள் செப்பனிடல் அத்தியாவசியத் தேவைகளும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அதேபோல், எதிர்வரும் 13 ஆம் திகதி அளம்பில் அந்தோனியார் தேவாலயத்தின் வருடாந்த உற்சவம் ஆரம்பமாகவுள்ளதால் அதற்கான வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்றார். (9-267)





## விளையாட்டுக்கள் பிற்போடப்பட்டுள்ளன

(மல்லாவி)

வடமாகாண பாடசாலைகளுக்கிடையில் நடைபெறவிருந்த விளையாட்டுப் போட்டிகளில் மாற்றம் செய்யப்படவுள்ளதாக வடமாகாண கல்வித் திணைக்கள மேலதிக கல்விப் பணிப்பாளர் மு.இராதாகிருஷ்ணன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய எதிர்வரும் 10 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் 3 ஆம் கட்ட பெரு விளையாட்டுக்கள் நடைபெறவுள்ளன. எனினும், பூப்பந்து, சதுரங்கம், பளுதூக்கல் ஆகிய விளையாட்டுக்களே பிற்போடப்பட்டுள்ளன.

இந்நிலையில் பூப்பந்தாட்டம் எதிர்வரும் 12,13,14 ஆம் திகதிகளிலும் சதுரங்கப்போட்டிகள் 14,15,16 ஆம் திகதிகளிலும் பளுதூக்கல் 13, 14 ஆம் திகதிகளிலும்நடைபெறவுள்ளன. (9-15)



பூநகரி சித்தங்குறிஞ்சி ஸ்ரீ முருகமூர்த்தி தேவஸ்தானத்தின் கும்பாபிஷேகம் அண்மையில் இடம்பெற்ற போது... (படம்:-பூநகரி செய்தியாளர்)

# வனவள ஜீவராசிகள் திணைக்களம் ஊடாக திட்டமிட்டு தொடர் காணி அபகரிப்பு

மன்னார் மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட குருவில்வான் இசைமாளமோட்டை கிராம மக்கள் தற்போது எதிர்கொள்ளும் பிரச்சினை தொடர்பில் உயர் மட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்று உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக நாடாளும்மன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் உறுதியளித்தார்.

குருவில்வான் இசைமாள மோட்டை கிராமத்தில் வாழ்ந்து வரும் மக்களை உடனடியாக வெளியேறும்படி வன வள ஜீவராசிகள் திணைக்கள அதி காரிகளினால் அறிவித்தல் விடுக் கப்பட்டுள்ளது.

இவ் அறிவித்தலினால் 14 குடும்பங்களை சேர்ந்த மக்கள் பாதிப்படைந்துள்ளனர்.

இக்கிராமமானது மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பாலபெருமாள்கட்டு கிராம சேவகர் பிரிவில் கட்டுக்கரை குளத்தை அண்டியுள்ளது.

1972ஆம் ஆண்டு அப்பகுதியில சுமார் 150 குடும்பங்கள் வாழ்ந்து வந்தன. நாட்டில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்து தற்போது மக்கள் மீள் குடியேறியுள்ளனர்.

இந்த நிலையிலே எதுவித முன் அறிவித்தலுமின்றி உடனே வெளியேறும்படி வனவள ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளினால் அறிவித்தல் விடுக்கப்பட்டது.


இக்கிராமத்தைச் சேர்ந்த பலருக்கு எதிராக வனவள ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளினால் மன்னார் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல்களும் செய்யப்பட்டுள்ளன.

குறித்த கிராம மக்களை எழுப்புவதற்கு ஏற்கனவே இராணுவம் முயற்சி செய்து வந்தது. இதற்கு மக்கள் ஒத்துழைக்கவில்லை. இந்த நிலையில் பொது மக்களுக்குச் சொந்தமான பல இடங்களில் இராணுவத்திற்குச் சொந்தமான இடம் என இராணுவத்தினரால் பெயர் பலகை நாட்டப்பட்டுள்ளது.

தற்போது வனவள ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளிள் இக்கிராமத்திற்கு வந்து மக்களை வெளியேறுமாறு கூறுவதோடு பழைமை வாய்ந்த மரங்களை வெட்டும்படி அச்சுறுத்தி வருகின்றனர்.

சகல வளங்களையும் கொண்ட இக்கிராமத்தில் சிங்கள குடியேற்றம் ஒன்றை மேற்கொள்ளும் முகமா கவே இந்த நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

எனவே இக்கிராமத்தை மீட்டுத்தர நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும் என கிராம மக்கள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம்



அடைக்கலநாதனிடம் வேண்டுகோளை முன்வைத்தனர்.

இந் நிலையில் இவ்விடயம் தொடர்பில் உயர் மட்ட அதிகாரி களின கவனத்திற்கு கொண்டு சென்று உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக அவர் உறுதியளித்துள்ளார். (9-250)

# கரைதுறைப்பற்று பி.செயலர் பிரிவில் சமுர்த்தி நிவாரணத்தில் பாரபட்சம்

(முல்லைத்தீவு)

கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவிலுள்ள 10 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் சமுர்த்தி நிவாரணம் வழங்கப்படாமல் புறந்தள்ளப்படுவதாக கவலை வெளியிட் டுள்ளனர்.

இங்குள்ள 46 கிராம சேவையாளர் பிரிவுகளில் 10 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 2004 மக்களே பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் 2010ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்டனர்.

இந்நிலையில், கொக்குத் தொடுவாய் வடக்கு, தெற்கு, மத்தி, செம்மலை கிழக்கு, தண்ணிமுறிப்பு, முள்ளிவாய்க்கால் மேற்கு, கேப்பாப்பிலவு, தண்ணி ரூற்று கிழக்கு, குமாரபுரம், அம்பலவன் பொக்கணை போன்ற கிராம சேவையாளர் பிரிவுகளே நிவாரணம் வழங்கப்படாது புறந்தள்ளப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட மக்கள் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்திடம் கேட்ட போது,

சமுர்த்தி நிவாரணம் வழங்கப்படுவதற்கான பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு கொழும்பிலுள்ள சமுர்த்தி அதிகார சபையினருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதெனவும் சிபார்சு செய்யப்பட்டால் உடனே வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், மீள்குடியேறி சுமார் 2 வருடங்கள் கடந்துள்ள போதும் இதுவரை நிவாரணம் வழங்கப்படவில்லை. (9-267)

# வீட்டுத்திட்ட பயனாளிகளின் வங்கி நடவடிக்கைகளை இலகுபடுத்துக

(மல்லாவி)

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள வீட்டுத்திட்டத்திற்கு தெரிவாகியுள்ள 393 பயனாளிகளின் வங்கி கணக்கினை தமக்கு அருகிலுள்ள வங்கியில் மாற்றித் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்திய அரசின் நிதியுதவியுடன் நடைமுறைப்படுத்தப்படும் வீட்டுத் திட்டத்தினை இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இந்நிலையில், திருமுறிகண்டியில் 164, மாங்குளத்தில் 139, பனிக்கன் குளத்தில் 30, ஒலுமடுவில் 60, பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

வீட்டுத்திட்டத்திற்கு தேவையான பணத்தேவைகளை பெறுவதற்காக அனைத்துப் பயனாளிகளுக்கும் வங்கிகளில் கணக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த பயனாளிகளுக்கு அருகாமையில் மாங்குள பகுதியிலுள்ள வங்கிகள் காணப்பட்ட போதும், அங்கு கணக்குகளை ஆரம்பிக்க வீட்டுத் திட்டத்தை முன்னெடுப்பவர்கள் அனுமதி வழங்கவில்லை.

மாறாக கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வங்கிகளிலே கணக்குகளை ஆரம்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், பயனாளிகள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் சம்பந்தப்பட்டோர் நடவடிக்கை எடுக்குமாறும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (9-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

827

# அது... இது, எது?

அஞ்சலிக்கு வயது ஐந்து. இரவு படுக்கையில் படுத்திருந்த அப்பாவின் மீது ஏறி அமர்ந்தபடி,நான் ஒன்று கேட்பேன் வாங்கித் தருவிங்களா அப்பா? என ஆசையாக கேட்டாள். அவள் அப்படி என்ன கேட்பாள் என்பதைத் தெரிந்துகொள்ள அவளுடைய அம்மா, அண்ணனுக்கும் ஆசையாக இருந்தது. நிச்சயமாக உனக்கு வாங்கித் தருவேன் என்றார் அப்பா. அதன் பிறகு அவள் சொன்னதுதான் எல்லோரையும் பெரும் சுவாரஸ்யத்துக்கும் குழப்பத்துக்கும் ஆளாக்கிவிட்டது.

அஞ்சலியின் அப்பா, அம்மா, அண்ணா மாக்ஸ் மூவரும் பெரும் ஆராய்ச்சியில் இறங்கவேண்டியதாகிவிட்டது. எனக்கு மிகவும் பிடித்தமானதாக இருந்தாலும், அதன் பெயர் தெரியாதே என்றாள் அஞ்சலி. அப்படியானால் அதை எப்படி வாங்கித்தர முடியும்? அம்மாவுக்கு எடுத்த எடுப்பிலேயே ஆயாசமாகிவிட்டது. அஞ்சலிக்கு அதை எப்படியாவது விளக்கிச் சொல்ல வேண்டும் என்று கண்கள் அலை பாய்ந்தன. பரவாயில்லை குட்டி... நீ யோசித்து நாளைக்குச் சொல். நாளைக்கே வாங்கித் தருகிறேன் என்று நம்பிக்கையூட்டும் விதமாகச் சொன்னார் அப்பா. அவளுக்கு நம்பிக்கை தேவையாக இருக்கவில்லை. அந்தப் பொருள் தான் தேவையாக இருந்தது.

விளக்கை அணைத்துவிட்டு கண்ணயர ஆரம்பத்த நேரத்தில் அஞ்சலி அப்பா கண்டுபிடித்துவிட்டேன் விளக்கைப் போடுங்கள் என உற்சாகமாகக் குரல் கொடுத்தாள் இவ்வளவு நேரமாக அவள் தூங்காமல் யோசனையிலிருந்து இருக்கிறாள். விளக்கு இல்லாமல் சொல்ல முடியாதா? அப்பா கேட்டார். இல்லையப்பா... விளக்கை போட்டால் தான் அதை உங்களுக்குக் காட்ட முடியும்.

ஓ.. நம் வீட்டில் ஏற்கனவே இருக்கும் பொருள்தானா? என்றார் அப்பா. விளக்கை போட்டுவிட்டு அவளைப் பார்த்தார். அவள் படுத்திருந்த நிலையிலேயே தன் சிறிய ஆள்காட்டி விரலை உயர்த்தி விட்டத்தைக் காட்டினாள். அங்கே என்ன இருக்கு? மாக்ஸ் யோசனையோடு கேட்டான். மேலே இருப்பது உங்களுக்கு தெரியவில்லையா? அவள் உறுதியாகச் சொல்வதைப் பார்த்து இன்னும் கூர்ந்து பார்த்தனர். அப்பா கட்டிலின் மீது ஏறி நின்று உற்றுப் பார்த்தார்.



அப்பா நான் சொன்னது மேலே சுழலும் மின்விசிறியைத்தான் என்றாள். உனக்கு எதற்கு மின்விசிறி? மாக்ஸால் யூகிக்கவே முடியவில்லை. அவள் இதே மாதிரியான சிறிய பொம்மை மின்விசிறியைக் கேட்கிறாள் என்றார் அம்மா. அப்படியா? மகளின் தலையை வருடியபடி அப்பா கேட்டார். அவள் இல்லை என்பதாக மறுத்துவிட்டு நான் கேட்பது இந்த மின்விசிறியோ, பொம்மை மின் விசிறியோ இல்லை அது.... இது... போல இருக்கும். மின் விசிறிபோல இருக்கும். வேறு ஒரு பொருளை மூவரும் கற்பனை செய்து பார்த்தனர். எதுவுமே நினைவுக்கு வராத நிலையில் அப்பா அது சுழலக்கூடியதா? என்று கேட்டார். சற்றே யோசித்து விட்டு ம்ம்ம்...சுழற்றினால் சுழலும் என்றாள்.

பம்பரம் தானே? உற்சாகத்துடன் குரல் கொடுத்தான் மாக்ஸ். இல்லை. அது பம்பரம்போல இருக்காது. கடற்கரையில் காற்றடித்தால் சுழலுமே அந்தக் காற்றாடியா? அண்ணனின் கேள்விகள் அவளுக்கு அலுப்பாக இருந்தன. அதெல்லாம் இல்லவே இல்லை. அப்படியும் மாக்ஸ் விடவில்லை. தன் புத்தகத்திலிருந்த மின் விசிறியைக் காண்பித்து இதைப் போல இருக்குமா? என்றான். அஞ்சலியின் ஏரிச்சல் எல்லை மீறியது... நான் சொல்வது இந்த மாதிரி இருக்காது. அந்த மாதிரி இருக்கும் என்றபடி மேலே சுழன்றுகொண்டிருந்த மின்விசிறியை மீண்டும் காட்டினாள். அவளுடைய குட்டிக் கண்கள் கோபத்தால் சிவந்தன.

இரண்டு மின்விசிறிகளுக்கும் என்ன வித்தியாசம்? என்று எல்லோருமே தீவிரமாக ஆராய்ந்தனர். இது வேறு நிறத்திலும் அது வேறு நிறத்திலும் இருப்பது உங்கள் யாருக்குமே தெரியவில்லையா? என்றாள். அவர்கள் வீட்டு விசிறி காப்பிக் கொட்டை நிற விசிறி. மாக்ஸ் காண்பித்தது வெள்ளை விசிறி. நீ சொல்லும் பொருள் காப்பிக்கொட்டை நிறத்தில் இருக்குமா? தலையை மேலும் கீழுமாக ஆசையாக அசைத்தாள்.

இவர்களுக்குப் புரியவைத்து விட்ட திருப்தி அவளுடைய முகத்தில். ஆனாலும் அஞ்சலி கேட்டதைக் கண்டுபிடிக்க முடியாமலேயே தூங்கினார்கள்.

இரண்டு நாட்கள் கழித்து மீண்டும் இது குறித்துப்பேச்சு ஆரம்பித்தது. நான் சொன்னது சுவையாக இருக்கும் என்றாள்.

நீ சொன்னது சாப்பிடக்கூடியதா? இதை ஏன் முதலிலேயே சொல்லவில்லை? அப்பா பாதி விடயம் தெளிவாகிவிட்டது போல சொன்னார்.

ம்... அது மேற்புறத்தில் காப்பி நிறத்திலும் உள்ளே வேறு நிறத்திலும் இருக்கும் என்றாள் அஞ்சலி.

அதை நீ எப்போது, எந்த இடத்தில் சாப்பிட்டாய்? என்ற கோணத்தில்விசாரணை தொடர்ந்தது. போண்டா, பஜ்ஜி, பிட்சா என்று வரிசைப்படுத்திப் பார்த்தும் பயனில்லை. அது எதுவுமே இல்லை என்ற அஞ்சலி. அதை ஹோட்டலில் சாப்பிடவில்லை என்பதை மட்டும் தெளிவுபடுத்தினாள்.

தோசையா...

சாக்லேட்டா?

போர்ன்விட்டாவா?

ஆளுக்கு ஒரு கேள்வி கேட்டனர். கேள்விகள் திசைமாறிப் போவதைப் பார்த்து, அது வட்டமாக இருக்கும். குடிக்கும் பொருள் அல்ல முடிந்த அளவு அவள் விளக்குவதற்கு முயற்சி செய்தும் தன்னால் கண்டுபிடிக்க முடியவில்லையே என அப்பாவுக்கு வருத்தமாக இருந்தது. காப்பி நிறத்தில் இருக்கும் சாப்பிடும் பொருள் என்ன என்று அப்பா தன் அலுவலகத் தோழர்களிடமும், மாக்ஸ் அவனுடைய வகுப்பு மாணவர்களிடமும் கேட்டுப் பார்த்தனர். இறுதியாக தான் யூகித்த தின்பண்டம் சரியாக இருக்கும் என்று அதைக் கையோடு வாங்கிக் கொண்டு வீட்டுக்கு வந்தார் அப்பா.

இதுதானே நீ கேட்டது? பொட்டலத்தைப் பிரித்துக் காண்பித்தார். அதில் பிளம்ஸ் கேக்குகள் இருந்தன. வட்டவடிவமான காப்பிநிற திட உணவு. உள்ளே வேறு நிறத்திலும் அது இருந்தது. அஞ்சலி அப்பாவையும் கேக்கையும் மாறி மாறிப் பார்த்தாள். இதுவும் எனக்குப் பிடிக்கும்தான். ஆனால் நான் சொன்னது இது இல்லை. அது இதைவிட மெல்லியதாக இருக்கும் என்றாள். அஞ்சலி ஆசைப்பட்டதை அவர்களால் தெரிந்துகொள்ள முடியாமலேயே போய்விட்டது.

சில நாட்கள் கழித்து, அப்பாவின் அம்மா இருக்கும் கிராமத்துக்குச் சென்றார்கள்.

வரண்டா ஈஸி சேரில் சாய்ந்து கொண்டு, தாத்தா ரேடியோவில் பாட்டு கேட்டுக்கொண்டு இருந்தார். தாத்தா என்று கத்தியவாறே அஞ்சலியும் மாக்ஸும் ஓடிச் சென்று தாத்தாவைக் கட்டிக் கொண்டார்கள். பாட்டி எங்கே? கேட்டாள் அஞ்சலி.

நீங்க எல்லாம் ரொம்ப நாளைக்கு அப்புறம் வர்றீங்க இல்லியா? அதான், உங்க பாட்டி பலகாரம் பண்ணிட்டு இருக்கா என்று தாத்தா சொல்லிக் கொண்டு இருக்கும் போதே, கையில் கரண்டியுடன் பாட்டி வரண்டாவுக்கே வந்துவிட்டார்.

அந்த கரண்டியில் இருந்த பலகாரத்தைப் பார்த்தாள். அடுத்த நொடியே அவள் கண்கள் விரிந்தன. இதுதான்.... இதுதான் என துள்ளிக் குதித்தாள்.

அட இதுவா? என்றாள் அஞ்சலியின் அம்மா. மாக்ஸுக்கும் அப்பாவுக்கும் ஆச்சரியம் தாளவில்லை.

அது தமிழர் உணவு வகைகளில் ஒன்று. அரிசி மாவும் வெல்லமும் கலந்து செய்யப்படுவது. ரொம்பவே சுவையாக இருக்கும். அடடா நாம்கூட இதை மறந்துவிட்டோமே என நினைத்தார் அப்பா.

எதற்கு அதிரசத்தைப் பார்த்து இத்தனை ஆச்சரியப்படுகிறார்கள்? என்று புரியாமல் பார்த்தார் பாட்டி.

06.2014
07

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1099 - முதலாவது சிலுவைப் போர்: ஜெருசலேம் மீதான தாக்குதல் ஆரம்பமானது.
- 1494 - ஸ்பெயினும் போர்த்துக்கல்லும் தாம் கண்டு பிடித்த புதிய உலகத்தைத் தமக்கிடையே பகிர்ந்துகொள்ள உடன்பாட்டை எட்டினர்.
- 1654 - பதினான்காம் லூயி பிரான்சின் மன்னனாக முடிசூடினான்.
- 1863 - மெக்சிக்கோ நகரம் பிரெஞ்சுப் படையினரால் கைப்பற்றப்பட்டது.
- 1893 - மகாத்மா காந்தி தனது முதலாவது ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்தார்.
- 1905 - நோர்வே சுவீடனுடனான தொடர்புகளைத் துண்டித்தது.
- 1967 - ஸ்ரேலியப் படைகள் ஜெருசலேம் நகரினுள் நுழைந்தனர்.
- 1981 - ஸ்ரேலிய வானூர்திகள் ஈராக்கின் ஒசிராக் அணுக்கரு உலை மீது குண்டு வீசித் தாக்கி அழித்தன.
- 1991 - பிலிப்பைன்சில் பினடுபோ எரிமலை வெடித்து 7 கி.மீ உயரத்துக்கு அதன் தூசிகள் பறந்தன.
- 2007 - கொழும்பு விடுதிகளிலிருந்து தமிழர் கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர்.

**பிறப்புகள்**


- 1974 - மகேஷ் பூபதி, இந்திய டெனிஸ் ஆட்டக்காரர்
- 1975 - ஏலன் ஐவர்சன், அமெரிக்காவின் கூடைப்பந்து ஆட்டக்காரர

**இறப்புகள்**

- 1906 - பொன்னம்பலம் குமாரசுவாமி, இலங்கையின் சட்டசபை உறுப்பினர் (பி. 1849)
- 1964 - ஆறுமுகம் ஆச்சாரியார், யாழ்ப்பாணம் திருநெல்வேலியைச் சேர்ந்த சிற்பாசிரியர் (பி. 1890)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சி பலன்கள்



**சித்திரை 3,4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்**

**வரப்போகிறது குரு பத்தில்! தரப்போகிறது இடமாற்றம்!** **60/100**

**ஜன சக்தியும், பண சக்தியும் ஒருங்கே இணையப் பெற்ற துலாம் இராசிநேயர்களே!**

உங்கள் இராசிக்கு இதுவரை 9 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குருபகவான் இப்பொழுது 10 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். 10 இல் குரு வந்தால் பதவி மாற்றம், இடமாற்றம், ஊர் மாற்றம் என்று பலருக்கும் வருவது இயற்கைதான். எத்தனை மாற்றங்கள் வந்தாலும் இப்பொழுது சஞ்சரிக்கப்போகும் குரு, உச்சம் பெற்ற குருவாக அல்லவா சஞ்சரிக்கப் போகின்றார்.

எனவே, அதன் பார்வை பலத்தால் ஒப்பற்ற நல்ல பலன்களை அற்புதமாக அள்ளி வழங்கப்போகிறார். இதுவரை ஜென்மச் சனியின் ஆதிக்கத்தில் இருக்கும்பொழுது, யோசித்து செயற்பட்டால்தான் யோகம் வருமென்று சொல்வார்கள். ஆனால், இப்பொழுது பெயர்ச்சியாகும் குரு தன ஸ்தானத்தைப் பார்க்கப் போவதால் தனவரவு தாராளமாக வந்து சேரும். இருப்பினும் ஏழரைச் சனியின் தொடர்ச்சி இருப்பதால் மற்றவர்களுக்கு பொறுப்புகள் சொல்வதை மட்டும் தவிர்க்க வேண்டிய நேரமிது. கடந்த ஓராண்டாக உங்கள் இராசியை குரு பார்த்துக் கொண்டுதான் இருந்தார். அப்படியிருந்தும் பல காரியங்கள் முடியவில்லை. கூடுதல் விரயத்தோடு குழப்பங்களில் ஆழ்ந்திருந்தீர்கள்.

இது எதனால் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். உங்கள் இராசிநாதன் சுக்ரனுக்கு குரு பகைவனாக விளங்குகிறார். பகைவனின் பார்வையில் சிக்கியதால் தான் பலவகையான பிரச்சினைகள் உங்களுக்கு வந்தது. இப்பொழுது அந்த நிலை மாறி, வைகாசி 30 முதல் வசந்தகாலம் தொடங்கிவிட்டது.

செயல் ஸ்தானம் எனப்படும் பத்தாமிடத்தில் சஞ்சரிக்கும்பொழுது, குரு முத்தான வாழ்க்கையை வழங்கப்போகிறது. அத்தனைக்கும் மேலாக, தொழில் ஸ்தானத்தில் அடியெடுத்து வைத்த குருபகவான் தொழிலை வளப்படுத்தப் போகிறார்.

**நன்றி மறக்காத குணத்தைப் பெற்றவர் நீங்கள்!**

கற்பனா சக்தி அதிகம் கொண்ட உங்களுக்கு கடின உழைப்பு பிடிக்காது. எளிதில் சம்பாதிக்க வேண்டுமென்று விரும்புவீர்கள். இளமை, இனிமை, புதுமை இந்த மூன்றும் இருந்தால் எல்லோரும் தன்னை நாடிவருவர் என்று எடுத்துரைப்பீர்கள். சங்கீதம், கலை, இலக்கியம் போன்றவற்றில் ஆர்வம் அதிகமிருக்கும்.

அதிர்ஷ்டமானவர்கள் நீங்கள் என்று அருகில் இருப்பவர்கள் உங்களைப் பார்த்துச் சொல்வர். ஒருசிலர் புத்தகப் பிரியர்களாகவும் விளங்குவர். பிறருக்கு அடிமையாக இருக்கச் சிலருக்குப் பிடிக்காது. இப்படிப்பட்ட குணங்களைப் பெற்ற உங்களுக்கு இந்த குருப்பெயர்ச்சி தரும் பலன்கள் எவை என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

**பத்திலே குருதான் வந்தால்**
**பதவியில் மாற்றம் தோன்றும்!**
**முத்தான வாழ்வில் நாளும்!**
**முன்னேற்றத் தடைகள் கூடும்!**
**கொத்தோடு துயரம் தீர**
**குருவினை வணங்க வேண்டும்!**
**தத்தளிக்கின்ற உள்ளம்**
**தானாக அமைதி காணும்!**

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது தொழில் ஸ்தானம் எனப்படும் பத்தாமிடம் குரு பலத்தால் புனிதமடைகிறது. எனவே, ஒருசிலர் புதிய பொறுப்புகளையும், பதவிகளையும் காண்பர். அரசியலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு அதிரடி மாற்றங்கள் வந்து சேரலாம்.

மூன்றாமிடம் மற்றும் ஆறாமிடத்திற்கும் அதிபதியாக குரு விளங்குவதால் சகோதர வர்க்கத்தினரால் ஏற்பட்ட சஞ்சலம் அகலும். உத்தியோகத்திற்கு விண்ணப்பித்தவர்களுக்கு அழைப்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. மேலதிகாரிகளின் ஆதரவு கூடும். திடீரென பொறுப்புகள் வந்து சேரலாம். அந்நிய தேசத்திலிருந்துகூட ஒருசிலருக்கு அழைப்புகள் வந்து சேரும். சங்கிலித் தொடர்போல வந்த கடன்சுமை குறையும். உடல்நலம், சீராக ரண சிகிச்சை செய்ய வேண்டுமென்று சொல்லி வந்த மருத்துவர்கள், சாதாரண சிகிச்சையிலேயே உங்களுக்கு உள்ள நோயைப் போக்கிவிடுவர்.

**குருபார்வை தரும் யோகங்கள்!**

10 ஆம் இடத்தில் இருக்கும் குருவின் பார்வை 2,4,6 ஆகிய இடங்களில் பதிவாகிறது. எனவே, அந்த இடங்கள் எல்லாம் புனிதமடைகின்றன. வாழ்வில் செல்வச் செழிப்போடு சுகங்களையும், சந்தோஷங்களையும் அனுபவிக்க வேண்டுமானால் குரு இரண்டு, நான்கு ஆகிய இடங்களைப் பார்க்க வேண்டும். அந்த அமைப்பு உங்களது சுய ஜாதகத்தில் இல்லாவிட்டாலும் அதன் பர்ர்வை பதிவதால் யோகங்கள் ஏற்படும்.

**இரண்டினை குருதான் பார்த்தால்,**
**இல்லத்தில் அமைதி கூடும்!**

## துலாம்



**நான்கினை குருதான் பார்த்தால்,**
**நல்லதோர் சுகங்கள் வாய்க்கும்!**
**ஆறினைக் குருதான் பார்த்தால்,**
**அகிலத்தில் கடன்கள் தீரும்!**

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

எனவே, இரண்டாமிடத்தைப் பார்க்கும் குருவால் குடும்பத்தில் அமைதி கூடும். குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்சினை அகலும். சுபகாரியப்பேச்சுக்கள் அடுக்கடுக்காக வந்து சேரும். குறிப்பாக யாருக்காவது வாக்கு கொடுத்தால் அதைக் காப்பாற்ற முடியவில்லையே என்ற கவலை இனி அகலும். பழைய பாக்கிகள் வசூலாகி பரவசப்படுத்தும். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். கடுமையாக பிரயாசை எடுத்தும் இதுவரை முடிக்க இயலாத காரியத்தை எல்லாம் இப்பொழுது முடித்து வெற்றி காண்பீர்கள். இந்த நேரத்தில் குடும்ப உறுப்பினர்களின் கோரிக்கைகளை எல்லாம் நிறைவேற்றுவீர்கள். தாயின் உடல்நலம் சீராகும். தக்கவிதத்தில் வீடு கட்டிக்குடியேற வேண்டுமென்ற எண்ணம் நிறைவேறுவதற்கான அறிகுறிகள் தோன்றும். உத்தியோகத்தில் வேலைப்பளு கூடுகிறதே, எதிர்பார்த்த சம்பளம் கிடைக்க்வில்லையே என்று அங்கலாய்த்துக் கொண்டிருந்தவர்களுக்கு இப்பொழுது நல்ல நேரம் வந்துவிட்டது. உயரதிகாரிகள் உங்களுக்கு உறுதுணையாக இருப்பர்.

**சஞ்சாரப் பலன்கள்**

குரு தன் சுயசாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (13.06.2014 முதல் 28.06.2014 வரை):- 6 இற்கு அதிபதியான குரு தன் சுயகாலில் சஞ்சரிக்கும் பொழுது தேக ஆரோக்கியத்தில் அடிக்கடி பாதிப்புகள் ஏற்பட்டு அகலும். வேகமாக வளர்ச்சியடைந்த பணிகள் பாதியிலேயே நிற்கும். உத்தியோக மாற்றங்கள் உறுதியாவது போல் தோன்றி கைநழுவிச் செல்லலாம். சுபகாரிய நிகழ்ச்சிகளில் தடைகள் உருவாகும். சகோதர வர்க்கத்தினர்களை சார்ந்திருப்பவர்கள் பிரச்சினைகள் வராமல் பார்த்துக் கொள்வது நல்லது.

சனி சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது (29.06.2014 முதல் 27.08.2014 வரை):- நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடிவரும். நாட்டுப்பற்று மிக்கவர்கள் உங்கள் கூட்டு முயற்சிக்கு உறுதுணை புரிவர். வாகன யோகம் உண்டு. பயணங்களால் பலன் கிடைக்கும். கடிதம் கனிந்த தகவல்களைக் கொண்டு வந்து சேர்க்கும். பிள்ளைகள் வழியில் சுபகாரியப் பேச்சுக்கள் முடிவடையும். தொழில் தொடங்க மூலதனம் கேட்கும் பட்சத்தில் அதன் ஆசைகளை நிறைவேற்றுவீர்கள். பழைய வாகனங்கள் பழுதாகி அதிக தொல்லைகள் கொடுக்கிறதே அதை விற்றுவிட்டு புதிய வாகனம் வாங்கலாமா என்ற யோசனையில் இருந்தவர்களுக்கு இப்பொழுது நல்ல வாய்ப்பு வந்து சேரும். நண்பர்கள் கூட்டு முயற்சிக்கு உறுதுணை புரிவர்.


புதன் சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது (28.08.2014 முதல் 02.12.2014 வரை):- புதன் உங்கள் இராசிக்கு 9,12 இற்கு அதிபதியாவார். அவரது சாரத்தில் சஞ்சரிக்கும்பொழுது விரயங்கள் அதிகரிக்கும். வெளிநாட்டுத் தொடர்பான முயற்சிகளில் அனுகூலம் கிடைக்கும். வீட்டிற்குத் தேவையான விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். தந்தை வழி உறவில் நன்மை கிட்டும். பூர்வீக சொத்துக்கள் எதிர்பார்த்தபடியே பாகப்பிரிவினைகள் அமையும்.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு!**

வெள்ளிக்கிழமை தோறும் அம்பிகை வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். யோக பலம் பெற்ற நாளில் திசை மாறிய தென்முகக் கடவுளை இன்முகத்தோடு வழிபட்டு செல்வ வளத்தைப் பெருக்கிக் கொள்ளுங்கள்.

**துலாம் இராசியில் பிறந்த பெண்களுக்கு!**

இந்தக் குருப்பெயர்ச்சியால் தாய்வழி ஆதரவு பெருகும். வீடு கட்டிக் குடியேற வேண்டுமென்ற எண்ணத்தை பூர்த்தி செய்து கொள்வீர்கள். உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்துகொள்வர். ஊர் மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும். குருவின் பார்வை பலத்தால் உடல் ஆரோக்கியம் சீராகும். மாற்று மருத்துவத்தை மேற்கொண்டு ஆரோக்கியத்தை சீராக்கிக்கொள்வீர்கள். பக்கத்துவீட்டாரின் பகை மாறும். கணவன்- மனைவிக்குள் அடிக்கடி பிரச்சினைகள் உருவாகாமல் இருக்க விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. குழந்தைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது. அவர்களின் எதிர்கால நலன் கருதி ஒரு தொகையைச் செலவிடுவீர்கள். ஆதியந்தபிரபு வழிபாடு ஆனந்தம் வழங்கும்.



**குருப் பெயர்ச்சி நேர ஜாதகம்**

| | | | |
|---|---|---|---|
| | சுக்ரன் கேது | சூரியன் புதன் (வ) | |
| | குருப்பெயர்ச்சி 13-6-2014 | | வியாழன் |
| | | | |
| சந்திரன் | | சனி (வ) ராகு | செவ்வாய் |

***சுப ஸ்ரீ ஜய வருடம் வைகாசி மாதம் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை (13.06.2014) மாலை 6.03 மணிக்கு புனர்பூசம் நட்சத்திரம் நான்காம் பாதத்தில் கடக இராசியில் குரு பகவான் சஞ்சரிக்கிறார். இந்த வீடு குருவிற்கு உச்ச வீடாகும்.***

**குருவின் வக்ர காலம்**

**➢13.06.2014 முதல் 28.06. 2014 வரை புனர்பூசம் 4 இல் நட்சத்திரக் காலில் குரு. (தனது சாரம்)**

**➢29.06.2014 முதல் 27.08 2014 வரை பூசம் நட்சத்திரக்காலில் குரு. (சனி சாரம்)**

**➢28.08.2014 முதல் 02. 12.2014 வரை ஆயிலியம் நட்சத்திரக் காலில் குரு. (புதன் சாரம்)**

**➢03.12.2014 முதல் 21.12.2014 வரை மகம் நட்சத்திரக் காலில் குரு அதிசாரமாக செல்கிறார்.**

**➢17.12.2014 முதல் 21.12.2014 வரை கேது சாரத்தில் குரு வக்ர கதி.**

**➢22.12.2014 முதல் 14.04.2015 வரை ஆயிலியம் நட்சத்திரக் காலில் புதன் சாரத்தில் வக்ர கதியில் குரு செல்கிறார்.**

**➢15.04.2015 முதல் 04.07.2015 வரை ஆயிலியம் நட்சத்திரம் புதன் சாரத்தில் நேர் கதியில் குரு செல்கிறார்.**

**➢05.07.2015 அன்று குரு சிம்ம இராசியில் பிரவேசிக்கிறார்.**

**அக்கறை செலுத்த வேண்டிய வக்ர காலம்!**

குருபகவான் 03.12.2014 முதல் 21.12. 2014 வரை மக நட்சத்திரக்காலில் அதிசாரமாகச் செல்கிறார். டிசம்பர் 17 முதல் சிம்மத்தில் வக்ர கதியில் இயங்குகிறார். தொடர்ந்து 14.04.2015 வரை வக்ர கதியிலேயே சஞ்சரிக்கிறார். இந்த வக்ர காலம் உங்களுக்கு நன்மையை வழங்குமென்றே சொல்லலாம். கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம் என்பதற்கேற்ப விபரீத ராஜயோகம் உங்களுக்கு செயற்படப்போகிறது.

எனவே, வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். கூட்டு முயற்சியில் வெற்றி கிடைக்கும். உத்தியோக உயர்வு, ஊதிய உயர்வு போன்றவைகள் எதிர்பார்த்தபடி வந்து சேரும். ஒருசிலர் விருப்ப ஓய்வில் தனித்து இயங்க முற்படுவர். நல்ல மாற்றங்கள் இல்லம் வந்து சேரும் நேரமிது.

நாளை விருச்சிகம்....

ஜோதிடக் கலைமணி
சிவல்புரி சிங்காரம்

# வரப்போகிறது குரு பத்தில்! தரப்போகிறது இடமாற்றம்!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விவசாய சூழலுக்கிணைவான பசுமை தொழில்நுட்பங்கள்-06






பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

மண்புழுஉர திரவ வளர்ப்பு [Vermiphonics]

மண்புழுவினைப் பயன்படுத்தி எளிய தொழில்நுட்பங்களை உள்வாங்கி அவற்றை எமது பயிர்ச செய்கையில் பயன்படுத்துவது பற்றி இத்தொடரில் தற்போது ஆராய்ந்து கொண்டிருக்கின்றோம். இதன் மூலமாக எமது மக்களுக்கு தேவையான வழி முறைகளில் சேதனமுறை பயிர்ச் செய்கையை ஊக்குவிப்பதற்காக உலகெங்கும் இருக்கின்ற எளிய தொழில்நுட்பங்களை அறிமுகப் படுத்துவதே இதன் நோக்கமாகும். மண்புழு என்பது மண்ணினுள் உயிா வாழும் உயிரியந்திரமாகும. இதனை மாபெரும் மேதையான அரிஸ்ரோட்டில் மண்ணின் இதயம் என வர்ணித்தமைக்கும் முக்கிய காரணமுண்டு. மண்ணை வளப்படுத்தும் முக்கிய செயற்பாட்டில் மண்புழு இருப்பதுவே இதற்கு காரணமாகும். தாவர மற்றும் விலங்கு கழிவுகளை உணவாக உட்கொண்டு வெளிவிடுகின்ற கழிவினையே மண்புழு உரமாக நாம் கருதுகின்றோம். ஆக மண்புழுவினது கழிவு தாவரங்களுக்கு சிறந்த பசளையாகும். ஒட்டுமொத்தத்தில் கழிவிலிருந்து கழிவுக்கான சமாச்சாரமாகவே இதனைக் கருதலாம். ஆனால் கழிவிலிருந்து வெளியாகும் மண்புழு உரமானது சேதன விவசாயத்திற்கும் பயிர்களுக்கும் சிறந்த பசளையாகவும் இதிலிருந்து பெறப்படும் மண்புழு திரவமானது சிறந்த இலைப்பசளையாகவும் விளங்குகின்றது. மண்புழு வளர்ப்புக்கு பயன்படுத்தப்படும். இலகுவில் பெறக்கூடிய மண்புழுவினை முழுமையாக பயன்படுத்தி சேதன விவசாயத்திற்கான சிறந்த உள்ளீட்டினை நாம் பெறமுடியுமல்லவா.

வடபகுதியில் தொழிற்றுறை வளர்ச்சி விருத்தியடைய எத்தனிக்கும் இந்நிலையில் சுற்றுச்சூழலைப்பற்றியும் நாம் கரிசனை கொள்ள வேண்டும். அதில் நேற்று முன்தினம் (ஜூன் 5ஆம் திகதி) உலக சூழல் பாதுகாப்பு தினமாகும். வடமாகாண விவசாய கால்நடைகள் கமநல சேவைகள் மற்றும் நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சினால் அமைச்சர் ஐங்கரநேசன் தலைமையில் மண்டைதீவில் நேற்றுமுன்தினம் கண்டல் தாவரங்களுக்கிடையில் இத்தினம் மாணவர்கள் ஆசிரி யர்கள் புடைசூழ நடைபெற்றது.

இத்தினத்தினை அந்த ஒரு நாளில் மட்டும் கொண்டாடுவதை வழக்கமாக கொள்ளாது வருடம் முழுவதும் நாம் கொண்டாட வேண்டும். அதன் மூலமாகத்தான் எமது மக்களிடையே சூழல் சார்ந்த விழிப்புணர்வினை ஏற்படுத்திக் கொள்ள முடியும். சுற்றுச்சூழலுக்கு இயை வான மண்புழு தொழில் நுட்பத் தினை விருத்தி செய்து நாம் முழுமையாக பயன்படுத்திக் கொள்ள முன்வரவேண்டும். மண்புழு தொழில் நுட்பம் பற்றிய பயிற்சிப்பட்டறையினை மக்களுக்கு தெரியப்படுத்த இன்னும் அதிலுள்ள நன்மைகளை எடுத்துக் கூற கிளிநொச்சியலமையும் விவசாய பீடத்தில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. எதிர்வரும் ஜூன் 14ஆம் திகதி விவசாய பீடம் சம்பிரதாயபூர்வமாக கிளிநொச்சியில் உயர் கல்வி அமைச்சரினால் ஆரம்பிக் கப்பட்ட பின்னர் இப்பயிற்சியினை விவசாய பெரு மக்களுக்கு வழங்க ஆவன செய்யப்படுகின்றது.

வகையான முறையில் தாவரங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதில் மண்சார்ந்து பயிருக்கு வழங்கப்படுகின்ற ஊட்டச்சத்துக்களை கண்டறிந்து செயற்கையாக அதனை நீரினூடாக த்ாவரத்தின் வேருக்கு வழங்கும் சிற்ப்பு முறையாகும். மேலைத்தேய நாடுகளில் இந்த தொழில்நுட்பம் பாரியளவில் விருத்தியடைந்துள்ள போதிலும் நமது நாட்டில் அந்தளவிற்கு இத்தொழில் நுட்பம் இன்னும் விருத்தியடையவில்லை. இதற்கு காரணம் இவ்வாறான திரவ வளர்ப்பில் பயன்படுத்தப்படும் ஊட்டச்சத்துக்களின் அதிகரித்த விலையாகும். திரவ பசளையாக காணப்படும் இவ்ஊடச்சத்துக்களின் தேவை பயிருக்கு பயிர் வித்தியாசமானதாக இருக்கும். அழகுத்தாவரங்களை உற்பத்தி செய்வதற்கு அதிகளவில் பயன்படுத்தப்படும் இத்தொழில்நுட்பத்தினை திட முடியும். மண்புழு வளர்ப்பின் மூலம் பெறப்படும் மண்புழு உரத்தினை அடிப்படையாக வைத்து அதிலிருந்து மண்புழு திரவத்தை பெற்று அதனை தாவரங்களுக்கு செலுத்தி வளர்க்கும் முறையாகும். வெளிநாடுகளில் செய்யப்பட்ட

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 53-V

மண்ணின்றிய நிலையில் திரவ ஊடக வளர்ப்பு [Hydrophonics] மூலம் தாவரங்களை வளர்ப்பது பற்றி கேள்விப்பட்டிருப்பீர்கள். இதில் மண்ணின்றி பயிருக்கு அவசியமாக தேவையான ஊட்டச்சத்தினை நீரினை அடிப்படையாக கொண்ட ஊடகத்தினூடாக கொடுப்பதன் மூலம் தாவரங்களை வளர்ப்பதாகும். குறிப்பாக மண்ணில் பிரச்சினையான இடங்களில் இவ் தற்போது பயிர்ச்செய்கையில் குறைந்த விலையில் பயன்படுத்துவதற்கான ஆய்வு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும் வடபகுதியில் அழகுத்தாவர உற்பத்தியும் உள் வாங்கப்படும் தொழிற்றுறைக்குள் உள்ளடக்கப்பட்டிருப்பதனால் இம் முறையைப்பற்றியும் கவனத்திற்கெடுப்பது நல்லது.

வீட்டுத்தோட்டத்தில் வளர்க்கப்படும் தாவரங்களுக்கும் இந்நீருடான வளர்ப்பு முறையை ஏற்படுத்



ஆய்வுகளிலிருந்து பின்வரும் முடிவுகள் பெறப்பட்டுள்ளன. 100 கலோகிராம் சேதன கழிவிலிருந்து 180 லற்றர் மண்புழுதிரவ ஊடகமும (Vermiliquor or Vermiponics). 89 கிலோ மண்புழு உரமும் 8 கிலோகிராம் உயிருள்ள மண்புழுவும் கிடைக்கும். இந்த மண்புழு திரவஊடகத்தை பயன்படுத்தினால 80 சதவீதத்திற்கு அதிகமான விளைச்சலை அசேதன உள்ளீடுகளை பயன்படுத்திய விளைச்சலுக்கிணைவாக பெறலாம். குறிப பாக பெறப்பட்ட விளைச்சலின் மொத்த திண்ம அளவானது (Dry weight) 90 சதவீதத்திற்கும் அதிகமானதாக அசேதன உள்ளீடுகளை பயன்படுத்திய விளைச்சலுக்கிணைவாக பெறப்பட்டுள்ளது.

மேலும் காரஅமில அளவானது பயிர்களுக்கு தேவையான அனுசரித்துச் செல்லும் அளவினதாகவும் இருக்க காணப்பட்டுளளது.

(தொடரும்)

## இணைப்புக்குழு தலைவர் பதவியிலிருந்து வீரவன்ச நீக்கம்



கொழும்பின் புறநகர் கடுவலை இணைப்புக்குழு தலைவர் பதவியில் இருந்து அமைச்சர் விமல் வீரவன்சவை விலக்குவதற்கான தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

கடுவலை இணைப்புக்குழுவின் 16 ஆளும் கட்சி உறுப்பினர்கள் இதற்கு ஆதரவாக வாக்களித்தனர்.

அமைச்சர் விமல் வீரவன்ச அரசாங்கத்தை சங்கடத்துக்கு உள்ளாக்கும் வகையில் செயற்பட்டு வருகிறார்.

எனவே அவரை குறித்த பதவியில் நீடிக்கச்செய்ய முடியாது என்ற அடிப்படையிலேயே அவரை நீக்குவதற்கான யோசனை முன்வைக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. (2)

## மக்களின் வாழ்க்கை குறித்து அரசிற்கு பொறுப்பு இல்லை

### கரு ஜயசூரிய தெரிவிப்பு

ஜனாதிபதி தலைமையிலான இன்றைய அரசாங்கத்திற்கு நாட்டு மக்களின் வாழ்க்கை குறித்து எந்தவிதமான பொறுப்பும் இல்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவச் சபையின் தலைவர கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

தொழில்சார் மற்றும் இராஜதந்திரம் பற்றிய இயலாமையால் இன்றைய ஆட்சியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இயற்கை அனர்த்தத்தால் ஏற்படும் கனமழை, வெள்ளம், பஞ்சம் போனறவை ஆட்சியாளர்களின் அதர்மம் காரணமாக ஏற்படுவதாக பௌத்த இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளன.

இலங்கையில் இந்த சந்தர்ப்பத்தில் அதுவே ஏற்பட்டு வருகிறது. இதனைக்கூறி அரசியல் மகிழ்ச்சியையும் இலாபத்தையும் பெறும் எந்த நோக்கமும் எமக்கில்லை.

இவற்றுடன் எந்த சம்பந்தமும் இல்லாத அப்பாவி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளமையே இங்கு கவலைக்குரிய விடயமாக உள்ளது.

கடந்த சில நாட்களாக நடைபெற்ற சம்பவங்களை பார்க்கும் போது நாட்டின் ஆட்சியாளர்கள் தம்மை அந்த இடத்திற்கு கொண்டு வந்த மக்கள் சக்தி தொடர்பில் உணர்வுகளையும், அக்கறையையும கொண்டிருக்கவில்லை என்பது முக்கியமான விடயமாக உள்ளது.

நாட்டு மக்களுக்கு தாக்கத்தை ஏற்படுத்தும் உண்மையான பிரச்சினை குறித்து செவிகொடுத்து நாட்டின் பொறுப்பாளர் என்ற வகையில் அவற்றுக்கு தீர்வை வழங்குவதற்கு பதிலாக நாட்டின் ஆட்சியாளர்கள் அதனை முற்றாக மறந்து செயற் பட்டு வருகின்றனர்.

மக்களை மறந்து போன ஆட்சியாளர்கள் எப்போதும் நீண்ட தூரம் பயணித்ததில்லை என்பதற்கு உலக அரசியல் சாட்சியாக உள்ளது.

இந்த அர்த்தத்தில் நோக்கும் போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் முடிவு தற்பொழுது ஆரம்பமாகி விட்டது என்பதை தெளிவாக காண முடிகிறது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதைப்பொருள் பயன்பாட்டால் இளைஞர் சமூகம் சீரழிகின்றது

### நாடாளுமன்றில் சிறிதரன் எம்.பி.சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணத்தில் போதைப் பொருள் பயன்பாடு அதிகரித்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர எஸ்.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம உரையாற்றிய போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

போதைப் பொருட்கள் பாரியளவில் நாட்டுக்குள் கொண்டு வரப்படுகின்றன. யாழ்ப்பாணத்திலும் போதைப் பொருட்களின் பயன்பாடு அதிகரித்துள்ளது. இதனால் இளைஞர சமூகம் சீரழிகின்றது.


போதைப் பொருள் மற்றும் மது பான பயன்பாட்டை கட்டுப்படுத்த அரசாங்கம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

சுங்கத் திணைக்களம் இது பற்றி எவ்வாறு பேசினாலும், நாட்டுக்குள் சட்டவிரோதமாக போதைப் பொருள் கொண்டு வரப்படுவதனை மறுப்பதற்கில்லை என அவர் தெரிவித் துள்ளார்.

வெளி மாவட்டங்களிலிருந்து வடக்கிற்கு கொண்டு வரப்படும் கள்ளு வகைகள் சுகாதாரத்திற்கு உகந்தவையல்ல. இவை செயற்கையாகவே தயாரிக்கப்படுகின்றன.

மேலும்தமிழகமுதல்வர்ஜெயலலிதா பற்றி அவையில் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. ஜெயலலிதா தூர நோக்குடைய ஓர் தலைவியாவார். தமிழ் மகளின் பிரச்சினைகள் குறித்து அவர் கவனம் செலுத்துகின்றார் என்று கூறினார். (2)

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்



63

...அவர் முன்னால் ஒடிந்துவிடுமளவுக்கு வளைந்து விடவும் இல்லை.

அளவான மரியாதை- அளவான வெளிப்பாடு- அவ்வளவுதான்.

பாக்யராஜின் அந்தப் பண்பை நான் மனதுக்குள் மதித்தேன்.

ஒரு பாடலாசிரியன் அவருக்குப் பாட்டு எழுதுவது என்பது ஆழமான சந்தோஷம்; ஆனால், நீளமான அவஸ்தை.

சினிமாவுக்குச் செல்வதற்குத் தன் பிள்ளைக்கு அனுமதி மறுக்கும் அந்தக் காலத்து அப்பா மாதிரி- அவ்வளவு சீக்கிரம் ஓகே சொல்ல மாட்டார்.

பாட்டெழுதிக் கொண்டு போனால் பல்லவியை மட்டுமே பல நிமிடங்கள் வாசிப்பார்.

இப்போதுதான் எழுத்துக் கூட்டிப் படிக்கிறாரா என்று எனக்கு அப்போது தோன்றும்.

ஒரு சிகரெட் தற்கொலை செய்து முடித்திருக்கும்.

பிறகு மெதுவாய் நிமிர்ந்து மெல்லிய குரலில் வாதிக்க ஆரம்பித்தால் பெரும்பாலும் அதில் காயப்படுத்தாத நியாயம் இருக்கும்; தானும் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற தாகம் இருக்கும்.

பாக்யராஜிடம் நான் பார்த்து வியப்பது அவரது போராட்டம்.

எதையும் சவாலாய் ஏற்றுக்கொள்ளும் தார்மீகம்.

தான் கதாசிரியன் மட்டுமில்லை; இயக்குனர் என்று நிரூபிக்க வேண்டிய நிர்ப்பந்தம் வந்தது. வென்றும் காட்டினார். யாரையும் சார்ந்திருப்பது ஒரு சாபம். சுயமாய் நிற்க முடியாதா என்று ஒரு சுடு கேள்வி பிறந்தபோது தான் தயாரிப்பாளராகவும் முடியும் என்று சாதித்துக் காட்டினார்.

முதல் மனைவி மறைந்தபோது பாக்யராஜின் இடம் வெற்றிடமாகி விடுமோ என்று காரணமுள்ள ஒரு கவலை பிறந்தபோது பூர்ணிமா என்ற அறிவார்ந்த பெண்மணியைத் துணைவியாக்கிக் கொண்டு நிரப்ப முடியாத இடத்தை நிரப்பிக் காட்டினார்.




(அந்தத் திருமணத்திற்கான அழைப்பிதழை எழுதிக் கொடுத்தது இன்னும் என் நெஞ்சில் ஈரமான அனுபவம்)

தன் படத்துக்குத் தானே இசையமைத்துக் கொள்ள வேண்டும் என்று தவிர்க்க முடியாத முடிவுக்கு அவர் தள்ளப்பட்டபோது அதுவரை தொட்டுப் பார்த்திராத ஆர்மோனியத்தை தன் கட்டுக்குள் கொண்டு வந்தார்.

இந்தியாவின் விலை உயர்ந்த தற்கொலை என்று கருதப்படுகிற பத்திரிகைத் துறையிலும் நுழைந்து, தன்னையும் காப்பாற்றி, தன் பத்திரிகையையும் காப்பாற்றி இரவு பகலாய் புத்திதானமும், இரத்ததானமும் செய்து, உழைக்கச் சலிக்காமல் நிலைக்கச் செய்திருக்கிறார்.

பயிற்சியும் முயற்சியும் இருந்தால் இந்த வானத்தின் கீழ் எதுவும் சாத்தியம் என்பதற்குத் தடுத்துவிட முடியாத எடுத்துக்காட்டு என்றே பாக்யராஜை நான் பார்க்கிறேன்.

தான் பள்ளத்தில் கிடந்த போது பரிமாறியவர்களுக்கெல்லாம் மேட்டுக்கு வந்த பிறகு கை கொடுத்திருக்கிறார்.

சிலர் இவரால் மேட்டுக்கு வந்திருக்கிறார்கள்; சிலரால் இவர் பள்ளத்துக்கும் போயிருக்கிறார்.

ஒருநாள்-

இரவு ஏழு மணிக்குப் போனவன் நள்ளிரவு ஒரு மணி வரைக்கும் அவரோடு உரையாடிக் கொண்டிருந்தேன்.

குழந்தை மாதிரி தன்னைக் கொட்டித் தீர்த்து விட்டார்.

அப்போது அவர் சொல்லிய ஒரு கருத்து ஆட்டோகிராபில் எழுதித் தர வேண்டிய அற்புதமான கருத்தாகப்பட்டது.

**"தொடர்ந்த வெற்றி மட்டும் போதாது. மனிதனுக்குத் தோல்வியும் தேவை. தொடர்ந்து வெற்றியே வந்தால் அது அதிர்ஷ்டம் என்று கொச்சைப்படுத்தப்படும். தோல்வியும் வந்தால்தான் பெற்ற வெற்றி உழைப்பினால் வந்த ஊதியம் என்ற உண்மை விளங்கும்."**

தோல்விகூட வெற்றிக்குக் கிடைக்கிற வெளிச்சம் என்று புரிந்து வைத்திருக்கிற பக்குவம் கண்டு பூரித்துப் போனேன்.

அவர் அஸ்திபாரம் பெரிது; ஆற்றல் பெரிது; அனுபவம் பெரிது.

அவர் ஒரு நாளும் ஓய்ந்து போக மாட்டார்.

அவர் அவ்வளவுதான் என்று யாரும் எப்போதும் முடிவு கட்டிவிட முடியாது. ராத்திரி வந்தவுடன் நட்சத்திரங்களெல்லாம் கூடி 'சூரியன் அவ்வளவுதான்' என்று முடிவு கட்டிவிட முடியுமா என்ன?

*(தொடரும்)*

**-வைரமுத்து -**

# இலங்கை அகதிகளுக்கு மனவள ஆலோசனை ஆஸியில் முன்னெடுப்பு

## குடிவரவுத்துறை அமைச்சர் தெரிவிப்பு

அவுஸ்திரேலியாவில் உள்ள இலங்கை அகதிகளுக்கு மனவள ஆலோசனை வழங்கும் வேலைத் திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவுஸ்திரேலியாவின் குடிவரவுத்துறை அமைச்சர் ஸ்கொட் மொரிசன் தெரிவித்துள்ளார்.

இலங்கை அகதிகள் மத்தியில் தற்கொலை செய்து கொள்ளும் எண்ணம் அதிகரித்துள்ளது.

கடந்த இரண்டு வார காலப் பகுதியில் இரண்டு பேர் தற்கொலைக்கு முயற்சித்துள்ளனர்.

மிகவும் அழுத்தமான மன நிலையினாலேயே இவ்வாறான தற்கொலை முயற்சிகள் இடம் பெறுகின்றன.

இந்நிலையில் அவர்களுக்கு மனவள ஆலோசனைகளை வழங்கும் நடவடிக்கைகள் நடத்தப்படவுள்ளதாக அமைச்சர் ஸ்கொட் மொரிசன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அவுஸ்திரேலியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் உள்ள ஒப்பந்தம் இருக்கும் வரைக்கும் இலங்கை புகலிட கோரிக்கையாளர்களின் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாது என ஆஸியில் உள்ள அகதிகளுக்கான சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

தமது நண்பர்கள் இருவர் நாடு கடத்தப்பட்ட நிலையில், தாமும் நாடுகடத்தப்படலாம் என்ற அச்சத்தினாலேயே இலங்கை அகதி ஒருவர் அவுஸ்திரேலியாவில் தற்கொலை செய்து கொண்டதாக அவர்கள் குறிப்பிட்டனர்.

தமிழ் நாட்டின் அகதி முகாம் ஒன்றில் இருந்து கடந்த வருடம் அவுஸ்திரேலியாவுக்கு சென்றிருந்த அவர், பாதுகாப்பு விசாவில் தங்கி இருந்த நிலையில், கடந்த சனிக்கிழமை தீக்குளித்தார்.

அவர் தாம் எந்த தருணத்திலும் நாடுகடத்தப்படலாம் என்ற அச்சத்தில் வசித்து வந்ததாக அவருடன் வசித்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான அகதி கோட்பாட்டின் கடும்போக்கு நிலை காரணமாக எதிர் காலத்தில் இன்னும் உயிர்களை இழக்க நேரிடும் என சட்டத்தரணிகள் தெரிவித்துள்ள னர்.

அபாட் அரசாங்கத்தின், இலங்கை ஜனாதிபதியுடனான ஒப்பந்தம் இருக்கும் வரைக்கும் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாது.

இலங்கை அகதிகளை மட்டும் திட்டமிட்டு நாடுகடத்துவது உண்மையில் அவுஸ்திரேலிய மக்கள் மத்தியில் மிகவும் வேதனையளிக்க கூடிய விடயம் எனவும் மேலும் அவர்கள் தெரிவித்தனர். (2)

# பூட்டானுக்கு மோடியின் முதல் பயணம் அமையும்

## உயர் மட்டக்குழு பூட்டான் பயணம்

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் வெளிநாட்டுப் பயணத்தில் இலங்கைக்கு முதலிடமில்லை என்பது உறுதியாகியுள்ளது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இந்த மாதம் தனது முதல் வெளிநாட்டுப் பயணத்தை பூட்டானுக்கு மேற்கொள்ளவுள்ளார்.

இவரது பயணத்துக்கான ஏற்பாடுகள் மற்றும் தங்குமிட ஒழுங்குகளை மேற்கொள்வதற்காக, இந்திய அதிகாரிகளின் உயர் மட்டக் குழுவொன்று நேற்று பூட்டானுக்குப் பயணமாகியுள்ளது.

தற்போது நடைபெறும் இந்திய நாடாளுமன்ற அமர்வுகள் முடிந்த பின்னர், பெரும்பாலும், இம்மாதம் மூன்றாவது வாரத்தில் இந்தப் பயணம் இடம்பெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை தமது நாட்டுக்கு வருமாறு இலங்கை உட்பட சார்க் நாடுகள் பதவியேற்பு விழாவின் போது அழைப்பு விடுத்திருந்தன.

இந்த நிலையில், மோடியின் முதல் வெளிநாட்டுப் பயணம் இலங்கையாக இருக்கலாம் என்று கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று அண்மையில் செய்தி வெளியிட்டிருந்தது.

கடந்த சில நாட்களாக, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் வெளிநாட்டுப் பயணத் திட்டம் குறித்து நடத்தப்பட்ட ஆலோசனையில், இலங்கை, பாகிஸ்தானுக்கான பயணங்கள் குறித்து கலந்துரையாடப்படவேயில்லை என்று புதுடில்லி தகவல்கள் தெரிவிக்கின்றன. பூட்டான், நேபாளம், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான ஆகிய நாடுகளுக்கு செல் வது குறித்தே, கலந்துரையாடப்பட்டுள்ளது.

இறுதியில் முதல் பயணத்தை இந்தியாவின் நெருங்கிய நட்பு நாடான பூட்டானுக்கு மேற்கொள்வது என்று முடிவாகியுள்ளது.

இதையடுத்து, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பிறேசிலில் அடுத்த மாத நடுப்பகுதியில் நடக்கவுள்ள பிறிக்ஸ் அமைப்பின் உச்சி மாநாட்டில் பங்கேற்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (2)

# இலங்கையுடன் நிதிக்கொடுப்பனவு உடன்படிக்கை செய்யவில்லை

## சர்வதேச நாணய நிதியம் கூறுகின்றது

இலங்கை அரசாங்கத்துடன் இரகசிய உடன்படிக்கைகள் எதுவும் செய்து கொள்ளப்படவில்லை என்று சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சாளர் கெரி ரைஸ் இந்த குற்றச்சாட்டை நிராகரித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் உதவி தலைவர் லக்ஷ்மன் கிரியெல்ல அண்மையில் செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் உரையாற்றும் போது இலங்கை அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொண்டுள்ள பல உப உடன்படிக்கை களை வெளிப்படுத்த வேண்டும் என்று கோரியிருந்தார். இந்நிலையில் இது குறித்து ஐக்கிய நாடுகளின் இன்னர் சிற்றி பிரஸ் செய்தியாளர் நேற்று முன்தினம் ரைஸிடம் கேள்வி எழுப்பினார்.

இதன்போது தாம் எழுதி வைத்திருந்த பதிலை ரைஸ் வாசித்தார். அதில் தம்முடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளை இலங்கை 2012 ஆம் ஆண்டளவில் நிறைவு செய்து விட்டதாக குறிப் பிட்டார்.

இதனையடுத்து தற்போது இலங்கை அரசாங்கத்துடன் எந்த நிதிக் கொடுப்பனவு உடன்படிக்கைகளும் இல்லை என்றும் ரைஸ் தெரிவித்தார். அத்துடன் பிரதான உடன்படிக்கைகளுக்கு புறம்பாக வேறு உடன்படிக்கைகள் இல்லை என்றும் ரைஸ் தெரிவித்தார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 புதிய சுற்றுத் தொடரை மோடி ஆடி முடிப்பாரா?

பிரதமர் நரேந்திர மோடியின் ராஜதந்திரம் இப்போதுதான் வேலை செய்ய ஆரம்பித்துள்ளதால் போகப் போக இலங்கை புரிந்து கொள்ளும் என்கிறது புதுடில்லி வட்டாரம். இப்போது எங்கு பார்த்தாலும் எந்தச் செய்தியைப் படித்தாலும் மோடி என்பதே பேச்சாகவும் மூச்சாகவும் உள்ளது.

பிரதமர் நரேந்திரமோடி நல்லவர், வல்லவர், ஏமாற்றப்பட முடியாதவர், துணிச்சலானவர் என்று தமிழ் ஊடகங்கள் வர்ணிக்கின்றன. அவர் இலங்கையின் நண்பர், இலங்கைக்குக்கெதிராகச் செயற்பட மாட்டார் என்று சிங்கள ஊடகங்கள் தங்கள் வாசகர்களை உற்சாகப்படுத்தும் பாணியில் விமர்சிக்கின்றன.

ஜனாதிபதி மகிந்தராஜ பக்சவும் பிரதமர் நரேந்திர மோடியும் ஒரு தறியில் நெய்யப்பட்ட துணிகள் என்று இலங்கையின் முன்னாள் ஐ.நா தூதுவர் தயான் ஜயதிலக குறிப்பிட்டுள்ளார். ஜனாதிபதி மகிந்த ராஜ பக்சவையும் நரேந்திரமோடியையும் ஒப்பிட்டு இருவருக்கும் நன்கு ஒத்துப்போகுமென்று அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவும் தெரிவித்துள்ளார்.

ஜே.ஆர் ஜெயவர்த்தன ஜனாதிபதியான காலத்தில் அவரது மூக்கை மையமாக வைத்து வட இந்தியர்களுக்கு அவ்வாறான மூக்கே அமைந்திருப்பதால் அவரை வட இந்திய வம்சாவளி என்று சொல்லி கொழும்பின் ஆங்கில பத்திரிகையொன்று கட்டுரை எழுதியது ஞாபகம் இருக்கின்றது. பிரதமர் நரேந்திரமோடியின் பதவியேற்புக்குப் போன ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவரைத் தம்பக்கம் இழுப்பதற்காக வசிய மோதிரமொன்றை அணிந்து சென்றதாக ஒளிபடத்துடன் ஒரு செய்தி கடந்தவாரம் பிரசுரமானது. புதுடில்லி செல்லும்போது வடதமிழீழத்தின் முக்கியஸ்தர் ஒருவரையும் தம்முடன் அழைத்துச் செல்ல ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச விரும்பினார். தமிழகத்தின் எதிர்ப்பலையிலிருந்து தப்புவதற்காக வகுக்கப்பட்ட திட்டம் இது.

வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் இலங்கை அரசின் சதி வலைக்குள் சிக்காது அழைப்பை நிராகரித்துவிட்டார். இப்படியொரு அழைப்புக்காகவே அண்ணாந்து பார்த்திருந்த யாழ்.மேயர் யோகேஸ்வரி லபக் என அதனைப் பிடித்து இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுடன் புதுடில்லி சென்றார்.

ஆனால், பிரதமர் நரேந்திர மோடியின் பதவியேற்பு நிகழ்வுப் படங்கள் எதிலும் அவரது நிழலைக் கூடக் காணவில்லை. ஈஸ்வரன் மறுத்த இடத்திற்கு ஈஸ்வரியை அழைத்து தமது நாடகத்தை இலங்கை அரசு அரங்கேற்றி விட்டாராயினும் ஈஸ்வரியை புதுடில்லியில் எவரும் ஏறெடுத்தும் பார்க்கவில்லையாம்.

பதவியேற்பு நிகழ்வுக்கு மறுநாள் பிரதமர் நரேந்திர மோடியுடனான 25 நிமிட சந்திப்புக்கு யோகேஸ்வரியையும் மறவாமல் மகிந்தராஜ பக்ச அழைத்துச் சென்றார்.

இந்தச் சந்திப்பில் என்னென்ன விடயங்கள் உரையாடப்பட்டன என்பதே இன்று முக்கியமான பேசு பொருளாக சகல ஊடகங்களிலும் அலசப்படுகின்றது.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக இலங்கை அரசாங்கமே முதலில் ஓர் ஊடக அறிக்கையை வெளியிட்டிருந்தது. நல்லிணக்க முயற்சிகள், மீள் கட்டுமான நடவடிக்கைகள், புனர்வாழ்வுச் செயற்பாடுகள், மீனவர் விவகாரம் மற்றும் பிராந்திய நாடுகளுக்கிடையேயான ஒத்துழைப்புக்கள் பற்றி இருவரும் உரையாடியதாக இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

13ஆவது திருத்தம் பற்றி பிரதமர் நரேந்திர மோடி குறிப்பிட்ட எதுவும் மறந்தும் கூட இந்த அறிக்கையில் இடம்பெறவில்லை. சம்பூர் அனல்மின் உற்பத்தி திட்டத்தை துரிதப்படுத்துமாறு பிரதமர் நரேந்திரமோடி வலியுறுத்தியதையும் இந்த அறிக்கை மறந்துவிட்டது.

ஆனால், புதுடில்லியில் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில் இந்திய வெளியுறச் செயலாளர் சுஜாதா சிங் இந்த விடயங்களை விளக்கமாக எடுத்துக்கூறி அனைத்தையும் அம்பலப்படுத்தி விட்டார்.

இதனால் 13 ஆவது திருத்தச்சட்டத்தை மூடிமறைக்க முயன்ற இலங்கை அரசின் திருகுதாளம் படுதோல்வி கண்டது.



இதற்கும் மேலாக புதுடில்லியின் சவுத் புளொக்கில் ஊடகக்காரரைச் சந்தித்த புதிய வெளிவிகார அமைச்சர் சுஷ்மா சுவராஜும் 13 ஆவது திருத்தத்தைத் தாமதமின்றி நடைமுறைப்படுத்தி அதிகாரப் பகிர்வை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி மகிந்தராஜ பக்சவிடம் நரேந்திரமோடி வலியுறுத்தியதை உறுதிப்படுத்தினார்.

இலங்கை விவகாரத்தில் சுஷ்மா நன்கு பரீட்சயமானவர். மன்மோகன் சிங் ஆட்சிக் காலத்தில் இலங்கை சென்ற இந்தியக் குழுவுக்குத் தலைமை தாங்கிச் சென்றவர்.

அவ்வேளை ஜனாதிபதி மகிந்தராஜபக்ச வழங்கிய நினைவுப் பரிசைப் பெற்றதால் பல தலைக்குனிவுகளை அவர் சந்திக்க நேர்ந்தது.

அன்று வழங்கப்பட்ட பரிசை சுஷ்மா சுவராஜ் தம்முடன் வைத்திருக்கவில்லை என்றும் அது இந்திய அரசின் களஞ்சிய சாலையில் உள்ளதாகவும் அவரது அதிகாரிகள் இப்போது பகிரங்கப்படுத்தி அவர் மீதான களங்கத்தை துடைத்து வருகின்றனர்.

இந்தப் பிண்ணனியில் இவர் மீண்டும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் வலையில் சிக்கமாட்டார் என்று வருகின்ற செய்திகளை ஊடகவியலாளர் சந்திப்பில் இவர் வெளியிட்டுள்ள கருத்துக்கள் நிரூபிப்பதாக உள்ளன. இந்திராகாந்தியின் பாணியில் பிரதமர் நரேந்திர மோடி ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிடம் நடந்து கொண்டதாக (கடும் போக்கு) சில ஊடகங்கள் தெரிவித்துள்ளன. இந்தச் சந்திப்பில் எந்தத் தடங்களுமின்றி எடுத்த எடுப்பிலேயே நேரடியாக விடயத்தை கையாளும் இறுக்க நிலையை பிரதமர் நரேந்திர மோடி கையாண்டுள்ளார்.

தமிழர் பிரதேசத்தில் காணி சுவீகரிப்பை நிறுத்துவது, படையினரை விலக்கி காவற்துறையிடம் பொறுப்புக்களை ஒப்படைப்பது, காவற்துறை அதிகாரத்தை மாகாண சபையிடம் கையளிப்பது ஆகிய மூன்று விடயங்களையும் பிரதமர் நரேந்திரமோடி மகிந்தராஜபக்சவிடம் சுட்டிக் காட்டியுள்ளார்.

இவைகளைச் செயற்படுத்துவதில் ஏதாவது நெருக்கடி இருக்குமாயின் இந்தியா நேரடியாக தலையிட்டு உதவத் தயாராக இருக்கின்றது என்பதும் இங்கு தெரிவிக்கப்பட்டது. பிரதமர் நரேந்திர மோடியின் இறுக்கமான போக்குக்கு நேரடியாகப் பதில் கூற முடியாத இலங்கைத் தரப்பு இப்போதுதான் போர் முடிவடைந்திருக்கிறது. இன்னும் சில காலம் தேவைப்படும் என்று வழமைபோல பதிலளிக்க எத்தனித்தது.

இதனை இடைமறித்த பிரதமர் நரேந்திரமோடி போர் முடிந்து ஐந்தாண்டு களாகி விட்டது. இனியும் காலம் வேண்டும் என்று சொல்வது அர்த்தமற்றது என்று குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் நிறுத்தாது அங்கிருந்த வெளி விவகாரச்செயலாளர் சுஜாதா சிங்கிடம் முன்னாள் பிரதமர் மன்மோகன்சிங்குக்கு இலங்கைத் தரப்பால் முன்னர் வழங்கப்பட்ட வாக்குறுதிகளையும் கேட்டுத்தெரிந்து கொண்டார்.

அப்போது 13 இற்கும் அப்பால் என்று முன்னர் அழித்த உறுதி தெரியப் படுத்தப்பட்டபோது அதனை விரைவில் நீங்கள் நடைமுறைப்படுத்துவதை நாங்கள் எதிர்பார்க்கிறோம் என்று உறுதிபட தெளிவாக பிரதமர் நரேந்திர மோடி ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிடம் குறிப்பிட்டார் என்று புதுடில்லிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்பு திரும்பிய மகிந்த ராஜபக்ச புதுடில்லி வெப்பம் உடலிலிருந்து இறங்குவதற்கு முன்னதாகவே சம்பூர் அனல் மின்னிலைய திட்டத்தைத் துரிதப் படுத்துமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

சமகாலத்தில் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் இந்திய விஜயம் தொடர்பாக 13ஆவது திருத்தம் பற்றி ஊடகவியலாளர் கேட்டபோது அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா மழுப்பல் பதில் வழங்கி வசமாகச் சிக்குண்டார்.

அது ராஜதந்திரச் சந்திப்பென்பதால் எல்லாவற்றையும் கூற முடியாது என்பதே அமைச்சர் வழங்கிய பதில்.

நரேந்திரமோடியின் ராஜதந்திரம் இப்போதுதான் வேலை செய்ய ஆரம்பித்துள்ளதால் போகப்போக இலங்கை புரிந்து கொள்ளும் என்கிறது புதுடில்லி வட்டாரம்.

இந்திரா காந்தி பாணியில் பிரதமர் நரேந்திமோடி மகந்த ராஜபக்சவுடன் டீல் பண்ணுவதாக இந்திய ஊடகங்கள் எழுதியுள்ளன. 13க்குச் சாவுமணி அடிக்கா விட்டால் சிக்கல்கள் அதிகரித்து நாடு பிளவுபடுமென அபாய எச்சரிக்கை செய்துள்ளது தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் எனும் சிங்கள அமைப்பு.

இலங்கை விவகாரத்தைக் கையாள விசேட தூதுவர் ஒருவரை பிரதமர் நரேந்திரமோடி நியமிக்கப்போவ தாகவும் ஒரு செய்தி வந்துள்ளது. ஜே.ஆர்- ராஜீவ் ஒப்பந்தத்தின் 13-ஐ பிரதமர் நரேந்திரமோடி கிளறியெடுத்து புதிய ஆட்டத்தொடரை ஆரம்பித்துள்ளார். இதனை வெற்றிகரமாக்க பிரதமர் நரேந்திர மோடியால் முடியுமா? யாரை யார் வெல்லுவாரோ!

-பனங்காட்டான்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீட்சை நடவடிக்கைகளை அரசியல் மயமாக்க ஒருபோதும் இடமளியேன்

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு



உயர்தரப் பரீட்சைக்கான வினாத் தாள் தயாரிக்கும் நடவடிக்கையில் தான் தலையீடு செய்ததாக நிரூபித்தால் முழு பாராளுமன்றத்திலும் பகிரங்கமாக மன்னிப்புக்கோரத் தயாராகவிருப்பதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் கல்வி அமைச்சுத் தொடர்பான விசேட அறிவிப்பொன்றை வெளியிட்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்.

பரீட்சை நடவடிக்கைகள் அரசியல் மயமாவதற்கு தான் ஒரு போதும் இடமளிக்கப் போவதில்லையெனக் குறிப்பிட்ட அவர், தனிப்பட்ட தேவைகளுக்காக அப்பாவி மாணவர்களைப் பலியிட வேண்டாம் எனவும் சபையில் கூறினார்.

உயர்தரப் பரீட்சைக்கான வினாத்தாள் தயாரிக்கும் குழு தொடர்பில் அண்மையில் ஊடகங்களில் பல்வேறு விமர்சனங்கள் வெளியாகியிருந்தன.

பரீட்சைகளை நியாயமாக மாணவர்களுக்கு அநீதியின்றி நடத்த ஆலோசனைக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற சட்டத்தின் ஊடாக பரீட்சை ஆணையாளருக்கு சில அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதனடிப்படையில் அவர் வினாத்தாள் திருத்தும் குழுவிலிருந்து பொருத்தமற்றவர்களை நீக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

இது குறித்து எமக்கு கேள்வியெழுப்பமுடியாது. யார் கல்வி அமைச்சராக இருந்தாலும் வினாத்தாள் தயாரிக்கும் பணிகளில் எதுவித தலையீடும் செய்வதில்லை. ஐ.தே.க. தலைவர் ரணில் விக்ரமசிங்க கல்வியமைச்சராக இருந்த போதும் இதே நிலைப்பாடே காணப்பட்டது.

பரீட்சை ஆணையாளருக்கு சட்டத்தின் ஊடாக வழங்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரமே வினாத்தாள் தயாரிக்கும் குழுவிலிருந்த இருவரை நீக்கியுள்ளார். இந்தக் குழுவிலிருந்த ஜகத் பண்டாரநாயக்க என்பவர் 10 வருடங்களுக்கு மேலாக சிரேஷ்ட விரிவுரையாளராகக் கடமையாற்றியவர் என அவர் தெரிவித்தார். (2)

# சுற்றாடல் செயற்பாட்டு சுட்டியில் இலங்கைக்கு 69 ஆவது இடம்

2014 ஆம் ஆண்டுக்கான சுற்றாடல்செயற்பாட்டுசுட்டியில் இலங்கை 69 ஆவது இடத்தை அடைந்துள்ளது.

அமெரிக்கயேல் பல்கலைக்கழகம் இந்த மதிப்பீட்டு ஆய்வை ஆண்டுதோறும் நடத்தி வருகிறது. இதன்பிரகாரம் இந்தியா 155 ஆவது இடத்திலும், பங்களாதேஷ் 169 ஆவது இடத்திலும் பாகிஸ்தான் 148 ஆவது இடத்திலும் உள்ளன.

சுற்றாடல் தரவுகள் நாடுகளின் தேசிய மட்டத்தில் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

வளியின் தரம், நீர், மலசலகூட வசதிகள், நீர்வளம், விவசாயம், வன வளம், கடற்றொழில் உயிரியல் பல்லினத்தன்மை உலக குடியிருப்பு, காலநிலை எரிசக்தி ஆகியவை சுற்றாடல் சுகாதாரத்தில் அடங்குகின்றன.

புகை வெளியாகும் வாகனங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை 2008 ஆம் ஆண்டில் சட்டமாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (2)

# நாட்டில் 195 மில்லியன் அளவில் சிகரெட் விற்பனை குறைந்துள்ளது

## பிரதி.நிதியமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் 2011ஆம் ஆண்டில் 4,505 மில்லியனாகவிருந்த சிகரெட் விற்பனை 2012 ஆம் ஆண்டில் 4310 மில்லியனாக குறைத்துள்ளது.

இதன் மூலம் 195 மில்லியன் அளவில் சிகரெட் விற்பனை குறைந்துள்ளதாக பிரதி நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வாய் மூல கேள்விக்கான விடை நேரத்தின் போது ஐ.தே.கட்சி எம்.பி. புத்திக பத்திரண நாட்டின் சிகரெட் விலைகள் அதிகரிப்பு, பாவனை தொடர்பாக கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே பிரதி நிதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதி அமைச்சர் இதற்கு தொடர்ந்து பதிலளிக்கையில், 2002 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் தனிநபர் வருமானம் மற்றும் தேசிய உற்பத்திகள் உயர்வுக்கேற்ப சிகரெட்டுக்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டன.

சிகரெட் விற்பனையில் கோல்ட் லீப் வர்க்க சிகரெட்களே 85 வீதம் விற்பனையாகியுள்ளன.

ஒரு சிகரெட் விற்பனை மூலம் அரசுக்கான வருமானம் 71 சதமாகும்.

எஞ்சிய 29 சதம் விநியோகஸ்தர்கள் மற்றும் மொத்த வியாபாரிகள் சில்லறை வியாபாரிகளுக்கு புகையிலை கம்பனிக்கு செல்கிறது என்றும் அவர் தெரிவித்தார். (2)

# வருடமொன்றுக்கு நான்காயிரம் பேர் இராணுவத்திலிருந்து ஓய்வுபெறுகின்றனர்

## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

வடக்கு, கிழக்கு பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர்களை இராணுவத்தில் இணைத்துக் கொள்ளும் பணிகள் தொடர்ந்தும், இடம்பெற்று வருவதாக பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு ஊடகமையத்தின் பணிப்பாளரும் இராணுவப் பேச்சாளருமான பிரிகேடியர் ருவான வணிகசூரிய தெரிவித்தார்.

ஏற்கனவே இணைத்துக் கொள்ளப்பட்டவர்களுக்கு மேலதிகமாக அண்மையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த 987 இளைஞர்கள் இராணுவத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

கொள்ளுப்பிட்டியிலுள்ள பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு ஊடக மையத்தில் நேற்று



முன்தினம் காலை நடைபெற்ற பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பான வாராந்த செய்தியாளர் மாநாட்டில் பிரிகேடியர் கலந்துகொண்ட போதே மேற்கண்டவாறு விளக்கமளித்தார்.

வடக்கு, கிழக்கு பிரதேசங்களை மட்டுமன்றி நாடு முழுவதிலும் இளைஞர், யுவதிகள் இராணுவத்தில் இணைத்துக் கொள்ளப்படுகின்றனர்.

வருடமொன்றுக்கு இராணுவத்திலிருந்து சுமார் நான்காயிரத்துக்கும் அதிகமானோர் ஓய்வு பெற்றுச் செல்கின்றனர்.

இதனால் பெரும் எண்ணிக்கையிலான வெற்றிடம் ஏற்படுகிறது எனினும் இவற்றில் 2 ஆயிரத்து 700 பேருக்கான வெற்றிடங்கள் அத்தியாவசியமானதாகவுள்ளது.

அந்த வெற்றிடங்களை நிரப்பும் வகையிலேயே இளைஞர், யுவதிகள் இணைத்துக் கொள்ளப்படுகின்றனர் என்றார்.

அந்த வகையில் கடந்த சில மாதங்களுக்குள் கிழக்கிலிருந்து 410 பேரும் யாழ்ப்பாணத்திலிருந்து 400, முல்லைத்தீவி லிருந்து 131, கிளிநொச்சியிலிருந்து 27, வவுனியாவிலிருந்து 19 பேரும் இதுவரை சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளதாக பிரிகேடியர் தெரிவித்தார். (2)

# இன்று ஒரு தகவல்

## ஒரு புத்திமதி

ஒரு மன்னர் தனது அமைச்சரவையை அழைத்துக் கொண்டு ஒருநாள் காட்டுக்குப் புறப்பட்டார்.

அக் காட்டிலே ஒரு முனிவர் தவம் செய்து கொண்டிருந்தார். அவர் முன்னால் அரசன் போய் நின்று " சுவாமி...... என்னை ஆசீர்வதியுங்கள். எனக்கு ஏதாவது புத்திமதி சொல்லுங்கள் " என்று கேட்டார்.

முனிவர் அரசனை ஆசீர்வதித்தார். அதன் பின்னர் சொன்னார், "மகனே நீ! எந்தக் காரியத்தைச் செய்தாலும் அதைச் செய்வதற்கு முன்னர் ஒரு தடவை அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளை நன்றாக யோசித்துப்பார். உன் மனதிற்கு " அது சரி! " என்று தெரிந்தால் மட்டும் அதை நீ செய்யவேண்டும்" என்றார்.

அரசர் முனிவர் கூறியதை அப்படியே மனதில் இருத்திக் கொண்டார். நூறு பொற்காசுகளை முனிவர் காலடியில் வைத்து விழுந்து வணங்கினார்.

அரசரின் செயலை அமைச்சர் அவதானித்துவிட்டு, " என்ன இது! நமது அரசர் இவ்வளவு ஏமாளியாக இருக்கிறாரே.... ஒருசாதாரண யோசனை கூறிய முனிவருக்கு மன்னர் நூறு பொற்காசுகளை கொடுத்து வணங்குகிறாரே " என்று நினைத்தார்.

இது அரசருக்குப் புரிந்து விட்டது. இருந்தாலும் அதைப் பற்றி அமைச்சரிடம் அரசர் ஒன்று கேட்கவில்லை.

எல்லோரும் அரண்மனைக்குத் திரும்பி வந்து சேர்ந்தார்கள்.

அதன்பின் அரசர் என்ன செய்தார் தெரியுமா?

காட்டில் முனிவர் கூறிய புத்திமதியை ஒரு கல்லில் கல் வெட்டாகச் செதுக்கினார். அதைத்தன் அறையிலே எல்லோரது கண்கள் அதில் படும்படி பதித்து வைத்தார்.

இப்போதும் அரசரின் செயலைக் கவனித்த அமைச்சர் " என்ன இது....? நம் மன்னரின் அறியாமையைப் புரிந்து கொள்ளவே முடியவில்லையே. இதைப்போய் கல்லில் செதுக்கி வைக்க வேண்டுமா?" என்று நினைத்துக் கொண்டார்.

சில நாட்கள் கடந்தன ஒருநாள் அந்த மன்னருக்கு கடுமையான வயிற்றுவலி ஏற்பட்டது.

உடனே அவர் அரண்மனை வைத்தியரை அழைத்தார். வைத்தியர் வந்தார். அவர் மன்னரை சோதித்துப் பார்த்துவிட்டு, "சிறிது நேரம் இப்படியே படுத்திருங்கள்... நான் எங்கள் வீட்டிற்கு சென்று மருந்து எடுத்து வருகிறேன்" என்று கூறி விட்டு விரைந்து சென்றார்.

வைத்தியர் வீட்டிலிருந்து மருந்து எடுத்துவரும் போது மன்னர் ஒரு கட்டிலில் கண்மூடித்தூங்கிக் கொண்டிருந்தார். அப்போது அரண்மனையில் எவரும் இருக்கவில்லை.

வைத்தியர் மன்னரின் அறையினுள் நுழைந்தார். ஒரு சிறிய கோப்பையில் சிறிது மருந்தை ஊற்றினார். சற்றும்முற்றும் பார்த்தார். ஏதோ ஒரு பொடியை மருந்தில் கலந்தார். கலந்து எடுத்துக்கொண்டு மன்னரை நெருங்கினார். சற்று யோசித்து விட்டுத் திரும்பினார். கையில் இருந்த மருந்தைக் கீழே கொட்டி விட்டு வந்தார். அந்தக் கோப்பையை நன்றாகச் சுத்தம் செய்துவிட்டு மறுபடியும் சிறிது மருந்தை ஊற்றி எடுத்துக் கொண்டு வந்து " மன்னா! " என்று மெதுவாக அழைத்தார்.

மன்னர் எழுந்து, " வைத்தியரே! நான் கண்களை மூடிக் கொண்டிருந்தாலும் அவ்வப்போது நீங்கள் செய்ததைக் கவனித்துக் கொண்டு தான் இருந்தேன். முதலில் எதையோ கலந்தீர்கள்... பின்னர் அதை கீழே கொட்டிவிட்டு இப்போது வேறு கொண்டு வருகிறீர்கள்..... என்ன விடயம்? உண்மையைச் சொல்லுங்கள் " என்று மிரட்டினார்.

வைத்தியர் அப்படியே மன்னரின் காலில் பொத்தென்று விழுந்தார். உண்மையைச் சொன்னார்.

" மகாராஜா...உங்களுடைய படைத்தளபதி உங்களைக் கொல்ல சதி செய்தார். அவர் என்னிடம் விஷம் கலந்து கொடுக்கச் சொன்னார். அதன் பொருட்டு அவர்எனக்கு நிறைய வெகுமதி தருவதாகக் கூறினார். நானும் சம்மதப்பட்டு இங்கே வந்தேன். அவர் கொடுத்த விஷ்ப்பொடியை மருந்தில் கலந்தேன். அதையெடுத்துக் கொண்டு உங்களிடம் வந்த போது அறையில் மாட்டியிருந்த வாசகத்தை வாசித்தேன். அது என்னை யோசிக்க வைத்தது. நான் செய்யும் செயலால் என் உயிருக்கே ஆபத்து ஏற்படும் என்பதை புரிந்து கொண்டேன். அதனால் அதைக் கொட்டிவிட்டு வேறு மருந்து ஊற்றி வந்துள்ளேன் என்று கூறினார்.

இப்போது அந்த மன்னர் அமைச்சரை அழைத்து " பார்த்தீர்களா.... இந்தப் புத்திமதியை அன்று நீங்கள் அலட்சியமாக நினைத்தீர்கள். இன்றைக்கு அதுதான் என் உயிரைக் காப்பாற்றியிருக்கிறது "என்றார் மன்னன் அமைச்சர் தலையைக் குனிந்து கொண்டார்.

அதனால்....பெரியவர்கள் நமக்குச் சொல்லும் புத்திமதி ஆரம்பத்தில் சாதாரணமாகத்தான் தெரியும், அதற்காக நாம் அதை அலட்சியம் செய்யக்கூடாது.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீனாவில் தீவிரவாத தாக்குதல்கள் வழக்கில் பன்னிரெண்டு பேருக்கு மரண தண்டனை




(பீஜிங்)

சீனாவில் ஸின்ஜியாங் மாகாணத்திலும் நாட்டின் பிற பகுதிகளிலும் தொடர்ந்து தீவிரவாத தாக்குதல்கள் நடைபெற்று வந்தன. புகையிரத நிலையங்களில் நடந்த கத்திக்குத்து சம்பவங்கள் உரும்கியில் நடந்த குண்டுவெடிப்புகள் இவற்றில அடங்கும்.

இந்த சம்பவங்கள் தொடர்பாக அல்கொய்தா தீவிரவாத இயக்கத்துடன் தொடர்புடைய கிழக்கு துர்கிஸ்தான் இஸ்லாமிய இயக்கத்தினர் 81 பேர் மீது குற்றம் சாட்டப்பட்டது.

இது தொடர்பானவழக்கை சீனாவில் உள்ள பல்வேறு நீதி மன்றங்கள் விசாரித்து நேற்று முன்தினம் தீர்ப்பு அளித்தன.

இதில் 12 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. மற்றவர்களுக்கு தீவிரவாத குற்றச்சாட்டின் பேரில் பல்வேறு கால அளவில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

தீவிரவாத தாக்குதல்கள் குற்றச்சாட்டின்பேரில் நேற்று முன்தினம் 29 பேர் கைது செய்யப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.



ஜி-7 நாடுகளின் உச்சி மாநாடு பெல்ஜியத்தின் தலைநகர் பிரசெல்ஸ் நகரில் ஒன்று கூடியது. இதில் பங்கேற்க வந்த அமெரிக்கா,பிரான்ஸ்,கனடா, ஜேர்மனி, பிரிட்டன், ஜப்பான் ஆகிய நாடுகளின் தலைவர்கள் ஒன்றாக நிற்பதை படத்தில் காணலாம்.

## கடற்பகுதியில் சீனா அத்துமீறல்; ஜி -7 நாடுகள் கண்டனம்

ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான பெல்ஜியத்தின் தலைநகர் பிரஸ்ஸல்சில் பொருளாதார ரீதியில் வளர்ச்சி அடைந்த ஏழு நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கும் ஜி-7 நாடுகள் அமைப்பின் வருடாந்த மாநாடு நேற்று முன்தினம் ஆரம்பமானது.

அதில், ஆசிய கடற்பகுதியில் நிலவும் பதற்றமான சூழ்நிலை குறித்து தலைவர்கள் கவலை தெரிவித்தனர்.

கிழக்கு மற்றும் தெற்கு சீன கடல்களில் நிலவும் எல்லை விவகாரங்களை சர்வதேச சட்டங்களுக்கு உட்பட்டு நாடுகள் தீர்த்துக் கொள்ள வேண்டும் என வளர்ந்த நாடுகளின் தலைவர்கள் வலியுறுத்தினர். குறிப்பாக தெற்கு சீனக் கடற்பகுதியில் பல தீவுகளை தன்னுடையது என சீனா தெரிவிக்கிறது.

இதனால் அந்த தீவுகளுக்கு சொந்தம் கொண்டாடும், அண்டை நாடுகளான ஜப்பான், மலேசியா, புருனே, பிலிப்பைன்ஸ், வியட்நாம், தாய்வான் மற்றும் இந்தோனேசிய நாடுகளுடன் சீனா மோதல் போக்கை கொண்டுள்ளது.

இதனால் அந்த பகுதியில் பதற்றம் நிலவுகிறது. இந்த விவகாரத்தை வளர்ந்த நாடுகளின் தலைவர்கள் தங்கள் முதல் விவாதமாக எடுத்து விவாதித்தனர்.

பின் அவர்கள் வெளியிட்ட அறிக்கையில் கூறியதாவது, ஆசியாவின் கிழக்கு மற்றும் தெற்கு சீன கடற் பகுதியில் நிலவும் பதற்றமான சூழ்நிலை எங்களுக்கு கவலை அளிக்கிறது.

சர்ச்சைக்குரிய கடற் பகுதி தங்களுடையது தான் என எந்த நாடும் தன் படைகளை பயன்படுத்தி பிற நாடுகளை தாக்குவதோ அச்சுறுத்துவதோ கூடாது.

சர்வதேச கடல் சட்டங்களின் படியும் மத்தியஸ்த முயற்சிகளின் படியும் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.




## தலிபான் தீவிரவாத இயக்கத்தின் முக்கிய கொமாண்டர் சுட்டுக் கொலை



(பெஷாவர்)

பாகிஸ்தானில் தெரிக் இ தலிபான் தீவிரவாத இயக்கத்தின் கொமாண்டர ஆஷிக் உல்லா மசூத் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு வசிரிஸ்தானில் பழங்குடியின பகுதியில் நடந்த துப்பாக்கி சூட்டில் தெரிக் இ தலிபான் தீவிவாத இயக்கத்தின் கொமாண்டர் ஆஷிக் உல்லா மசூத் சுட்டுக் கொலை செய்யப்பட்டான் என்று அரசு மற்றும் பழங்குடியின தகவல்கள் உறுதி செய்துள்ளன.

ஆஷிக் உல்லா தீவிரவாத இயக்கத்தில் தற்கொலை குண்டு வெடிப்புக்கான குண்டுகளை தயாரிப்பதில் முக்கிய நபராக இருந்துள்ளான்.

தீவிரவாத இயககத்தின் குண்டு தயாரிப்பவனான சைன் மசூத் இறப்புக்கு அடுத்து குண்டு தயாரிக்கும் பணியில் ஆஷிக் உல்லா தன்னை இணைந்துள்ளான்.

பழங்குடியின பகுதியில் ஆஷிக் உல்லா தீவிரவாதிகளுடன் இருந்த போது அங்கு காரில் வந்தவர் துப்பாக்கியால் சுட்டுள்ளார். இதில் ஆஷிக் உல்லா பலியானான்.

இதுவரையில் இந்த தாக்குதலுக்கு எந்த தீவிரவாத இயக்கமும் பொறுப்பேறகவில்லை. தலிபான் இயக்கத்தில் இருந்து இதுவரையில் எந்த அறிவிப்பும் இது தொடர்பாக வெளியிடப்படவில்லை.

மேலும் பாகிஸ்தானில் தலிபான் தீவிர வாத இயக்கத்திலே பிரிவு ஏற்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஏமனில் அல்கொய்தா போராளிகள் தாக்குதலில் 12 பேர் பலி

ஏமன் நாட்டில் அல்கொய்தா போராளிகள் தாக்கியதில் 12 பேர் பலியாகினர்.

கடந்த 2011ஆம் ஆண்டு ஏமனில் நடைபெற்ற எழுச்சி ஒன்றில் மையத்தில் அதிகாரம் செலுத்தி வந்த அலி அப்துல்லாசலே பதவி விலக நேரிட்டது.

இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்ட அல்கொய்தா போராளிகள் நாட்டின் கிழக்கு மற்றும் தெற்கு பகுதிகளை தங்களின் அதிகாரத்திற்குள் கொண்டு வந்தனர். இவர்களை அங்கிருந்து வெளியேற்ற கடந்த 2012இல் ஏமனின் இராணுவ துருப்புகள் தாக்குதல் நடத்தின.

அதில் தப்பிய தீவிரவாதிகளை முற்றிலும் அழிக்கும் நோக்கிலேயே கடந்த ஏப்ரல் மாதம் முதல் அந்நாட்டின் ஷப்வா மற்றும் அதன் அருகிலுள்ள அப்யான் மாகாணத்தில் ஏமன் இராணுவத்தினர் தரை வழித்தாக்குதலில் ஈடுபட்டிருந்தனர்.


இந்த தேடுதல் வேட்டையில் மறைந்திருந்த ஆயுதமேந்திய அல்கொய்தா போராளிகள் திருப்பித் தாக்கியதில் பொதுமக்களில் ஒருவர் உட்பட 12 வீரர்கள் பலியாகியுள்ளதாக அரசு பாதுகாப்பு அதிகாரி ஒருவர் நேற்று தெரிவித்துள்ளார்.

அல்கொய்தா போராளிகள் ஷப்வா மாகாணத்தின் பய்ஹான் கிராமத்திலுள்ள சோதனைச் சாவடி ஒன்றையும் தாக்கி அங்கிருந்த வீரர்களையும் காயப்படுத்தியதாகவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதற்கு உள்ளூர் பழங்குடியினரும் உதவி புரிந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. இராணுவத்தினர் தங்களுக்குத் தேவையான வீரர்களை பழங்குடிப் பிரிவிலிருந்தும் தேர்வு செய்துகொண்டு நட்பு பாராட்ட முயன்ற போதும் கிராமப்புறங்களில் அவர்களால் தங்களின் கட்டுப்பாட்டை நிலைநிறுத்த முடியவில்லை என்பதே இதற்குக் காரணமாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏமனின் கிழக்குப் பகுதியிலுள்ள ஹட்ராமட் மாகாணத்தில் இன்னும் ஆழமாக வேரூன்றியுள்ள ஜிஹாதிப் போராளிகள் கடந்த சில மாதங்களாக தொடர்ச்சியான தீவிரத் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் செய்திகள் தெரிவித்துள்ளன.

## ஈரான் எண்ணெய் மீதான தடை ஆறு மாதங்களுக்கு நீக்கம்



(வோஷிங்டன்)

ஈரான் எண்ணெய் மீதான தடையை அமெரிக்கா ஆறு மாதங்களுக்கு நீக்கியுள்ளது.

தனது சர்ச்சைக்குரிய அணு ஆயுதத் திட்டத்தில் அமெரிக்காவின் கட்டுப்பாடுகளுக்கு ஈரான் இணங்கியுள்ள நிலையில், சர்வதேச சந்தையில் அந்நாட்டு எண்ணெய்க்கான தடையை அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா ஆறுமாதங்களுக்கு நீக்கியுள்ளார்.

இதுகுறித்து வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளரான ஜே கார்னி கடந்த புதன்கிழமை கூறியதாவது,

இந்தியா, சீனா போன்ற நாடுகள் தங்களின் எண்ணெய் தேவைக்காக ஈரானை சார்ந்து இருப்பதை குறைத்துக் கொள்ளும் அளவுக்கு, சர்வதேச சந்தையில் தேவையான எண்ணெய் வளம் உள்ளது.

இருப்பினும், அணு ஆயுதத் திட்டத்தில் அமெரிக்காவின் கட்டுப்பாடுகளுக்கு ஈரான் முழு ஒத்துழைப்பு அளித்து வருவதால், அடுத்த ஆறு மாதங்களுக்கு அந்நாட்டின் கச்சா எண்ணெய் விற்பனைக்கு தடை தேவையில்லை என ஒபாமா கூறியுள்ளார்.

இது போன்ற தடைத் தளர்வு நடவடிக்கைகளின் பலனாக, ஈரானும் தனது அணு ஆயுத திட்டத்தை நிறுத்திக் கொண்டுள்ளது. இந்த விவகாரத்தில் ஈரான் இணங்கி வருவதை சர்வதேச அணுசக்தி அமைப்பும் உறுதி செய்துள்ளது என்று ஜே கார்னி கூறினார்.

## தாய்லாந்தில் இராணுவ ஆட்சியை எதிர்த்த முக்கிய தலைவர்கள் கைது



தாய்லாந்தில் இராணுவ ஆட்சியை எதிர்த்து போராடிய முக்கிய தலைவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அந்நாட்டில் கடந்த சில மாதங்களாகவே அரசியல் சூழ்நிலை மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து அதில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படாததால் இராணுவம் ஆட்சியை கைப்பற்றியது.

அரசியல் சூழல் மேலும் மோசமாவதை தடுக்கவே இராணுவம் இவ்வாறு நடந்து கொண்டதாகவும் இராணுவம் கூறியது.

அந்நாட்டின் முன்னாள் ஜனாதிபதியான யிங்லக் சினவத்ரா ஆகியோர் ஏற்கனவே இராணுவ ஆட்சியாளர் களால் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டனர்.

ஆனாலும் இராணுவ ஆட்சியை எதிர்த்து பல்வேறு கட்சிகள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றன.

அவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்ட எதிர்ப்பாளர்களின் தலைவரான சொம்பத் பூங்கம் கைது செய்யப்பட்டதாக அவரது பேஸ்புக் தகவல் கூறியுள்ளது.

ஆட்சியை கைப்பற்றிய பின் இராணுவத்தினரை வந்து சந்திக்குமாறு பூங்கம் அறிவுறுத்தப்பட்டார்.

ஆனால் அவர் அதற்கு உடன்பட மறுத்து தலைமறைவானார். தப்பிச் சென்ற அவரை இராணுவத்தினர் தேடி வந்தனர்.

இந் நிலையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய பாதுகாப்பை பாதிக்காத வகையில் பொலிஸ் அதிகாரங்கள் வழங்க அரசு ஆராய்வு

## அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

**தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தாத மாகாண சபைகளின் நிர்வாக முகாமைத்துவத்திற்கு தேவையான பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது தொடர்பாக அரசாங்கம் சிந்திப்பதாக அமைச்சரவையின் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் ஊடகத்துறை அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், பொலிஸ் அதிகாரம் மாகாண சபைகளுக்கு வழங்குவதில்லை என்பதை அரசாங்கம் கொள்கையளவில் திட்டவட்டமாக அறிவித்துள்ளது. எனினும் பெற்றுள்ள சுதந்திரத்தின் பின்னர் ஏற்பட்டுள்ள தேவைக்கேற்ப மாகாண சபைகளுக்கான அதிகாரங்களை வழங்குவது தொடர்பாக அரசு ஆலோசித்து வருவதாகவும் அவர் கூறினார்.

13 ஆவது திருத்தச் சட்டம் வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் நோக்குடனேயே கொண்டுவரப்பட்டது. எனினும் வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் மட்டும்தான் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. எனினும் பொலிஸ் அதிகாரத்தில் நிர்வாகத்தின் முகாமைத்துவத்துக்குத் தேவையான, குறிப்பாக போக்குவரத்து பொலிஸ் பிரிவு உள்ளிட்டவற்றை வழங்குவதற்குரிய விடயங்கள் குறித்து அரசு சிந்தித்து வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

2009 ஆம் ஆண்டு வரையில் 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கான தேவை இருக்கவில்லை. யுத்தத்தின் பின்னர் வடக்கு, கிழக்கு உட்பட நாடு முழுவதும் பெற்ற சுதந்திரத்தின் பின்னர் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கான தேவை ஏற்பட்டுள்ளது.

பொலிஸ் அதிகாரம் ஓரளவு கொடுக்க முடியுமா என்பது பற்றி ஆராயப்படுகிறது. பொலிஸ் ஆணைக்குழு மற்றும் பிரதி பொலிஸ்மா அதிபர் ஒருவரை நியமிக்கும் அதிகாரம் வழங்கப்படமாட்டாது. எனினும் சிலவற்றை வழங்குவது தொடர்பாக அரசு சிந்தித்து வருகின்றது என்றும் அமைச்சர் கெஹலிய தெரிவித்தார். இதேவேளை, ஜனாதிபதி தேர் தல் நடத்தப்பட்டு நான்கு வருட ங்கள் முடிந்தவுடன் மற்றுமொரு ஜனாதிபதித் தேர்தலை நடத்துவ தற்கு ஜனாதிபதிக்கு அரசியலமைப்பில் அதிகாரம் உள்ளது. எனவே, நான்கு வருடங்கள் முடிந்தவுடன் ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் சாத்தியத்தை மறுக்க முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட்டு நான்கு வருடங்கள் முடிந்தவுடன் மற்றுமொரு ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு ஜனாதிபதிக்கு அரசியலமைப்பில் அதிகாரமுள்ளது.

எனவே, நான்கு வருடங்கள் முடிந்தவுடன் ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் சாத்தியத்தை மறுக்க முடியாது. ஜனாதிபதி தேர்தல் நடைபெறலாம்.

எவ்வாறெனினும் அந்த விடயம் குறித்து ஆராய்வதற்கு இன்னும காலமுள்ளது எனத் தெரிவித்தார். (2)

# கொன்சலிற்றாவின் வழக்கு ஒத்திவைப்பு

## சட்ட வைத்திய அதிகாரிக்கு யாழ். நீதிமன்றம் அழைப்பாணை

(யாழ்ப்பாணம்)

குருநகரில் உள்ள கிணறொன்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்ட மேரி கொன்சலிற்றாவின் வழக்கு விசாரணையில் யாழ். போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரிக்கு யாழ். நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் 13 ஆம் திகதியன்று மேரி கொன்சலிற்றா அவரது வீட்டில் இருந்து காணாமற் போய் மறுநாள் காலை குருநகரில் உள்ள கிணறு ஒன்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

குறித்த யுவதியின் மரணத்திற்கு மறைக் கல்வியில் கல்வி புகட்டுகின்ற இரு பாதிரியார்களே காரணம் என கொன்சலிற்றாவின் பெற்றோர் குற்றம் சாட்டியிருந்த நிலையில் குறித்த மரணம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதோடு சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் வைத்தியப் பரிசோதனைக்கும் உட்படுத்தப்பட்டது.

யாழ். போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி சிவரூபனின் மருத்துவ அறிக்கையில் கொன்சலிற்றா நீரில் மூழ்கியே இறந்ததாகவும் பாலியல் தொடர்பில் எவ்வித சான்றுகளோ தடயங்களோ இல்லை எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த வழக்கு கடந்த மாதம் 12 ஆம் திகதி யாழ். நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது சம்பந்தப்பட்ட இரு பாதிரிமார்களும் நீதிமன்றத்தில் ஆஜராகி இருந்தனர்.

இதில் கொன்சலிற்றாவின் தொலைபேசிக்கு பாதிரியார்கள் அனுப்பியதாக கூறப்படுகின்ற குறுந்தகவல் தொடர்பில் தொழில்நுட்ப பரிசோதனை செய்யுமாறு பொலிஸாருக்கு நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

நீதவானின் உத்தரவின்படி கொன்சலிற்றா உயிரிழந்ததற்கு முன்னரான ஒரு மாத காலம் தொலைபேசிக்கு வந்த குறுந்தகவல்களை தொலைபேசி நிறுவனத்தின் மூலம் பெற்றுக் கொண்ட பொலிஸார் அதில் எதுவித குறுந்தகவலும் இடம்பெறவில்லை என நீதிமன்றில் தெரிவித்தனர்.

இதனை மறுத்த கொன்சலிற்றாவின் பெற்றோர் தமது பெண் இறப்பதற்கு முன்னரான மூன்று மாத காலம் அதாவது தை, மாசி, பங்குனி ஆகிய மாதங்களில் வந்த குறுந்தகவல்களை தாம் பார்வையிட்டதாகவும் அவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறும் கூறியிருந்தனர்.

இதனையடுத்து குறித்த மாத குறுந்தகவல்களை பெற்றுக் கொள்ளுமாறு நீதவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

மேலும் நேற்றைய தினம் யாழ். நீதவான் நீதிமன்ற நீதவான் பெ.சிவகுமார் முன்னிலையில் வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது கொன்சலிற்றாவின் பிரேத பரிசோதனை அறிக்கை மன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

அதில் கொன்சலிற்றா கடந்த ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கே உயிரிழந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் கொன்சலிற்றா 13 ஆம் திகதி காலையிலேயே காணாமற் போயிருந்தார். அவ்வாறாயின் 13 ஆம் திகதி காலை 8.30 மணிக்கும் மறுநாள் 14 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கும் இடையில் கொன்சலிற்றா எங்கிருந்தார் என சட்டத்தரணிகள் கேள்வி எழுப்பியிருந்தனர். பிரேத பரிசோதனை அறிக்கை முரண்பட்ட தகவல்களை கொண்டுள்ளதால் அது தொடர்பில் நீதிமன்றில் சட்ட வைத்திய அதிகாரி ஆஜராகி விளக்கமளிக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

மேலதிக மரண விசாரணை குறித்த வழக்கு அடுத்த மாதம் 10 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மேலும் கொன்சலிற்றாவின் தொலைபேசிக்கு பாதிரியாரால் அனுப்பப்பட்டதாக தெரிவித்து சில புகைப்படங்களை அவரது பெற்றோர் ஊடகவியாளர்களுக்கு காட்டியிருந்தனர்.

குறித்த வழக்கில் தமது தரப்பில் முன்னர் ஆஜராகி இருந்த சட்டத்தரணி தற்போது வழக்கில் இருந்து பின்வாங்குவதாகவும் மகளிர் அமைப்புக்கள் உட்பட அனைவரும் எம்மை கை விட்டு விட்டனர் எனவும் கண்ணீர் மல்க அவரது பெற்றோர் தெரிவித்தனர். (2-4)

# அதிக ஒலியை எழுப்பும் ஹோர்ன்கள் கண்டுபிடிப்பு


(கொழும்பு)

சுற்றாடல் தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் கொழும்பில் நடத்தப்பட்ட அதிக ஹோர்ன் ஒலியை எழுப்பும் வாகனங்களை கண்டறியும் சோதனைகளின் போது 9 தனியார் பேருந்துகள் அதக ஒலியை எழுப்பும் ஹோர்னை பொருத்தியிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது.

இந்த 9 பேருந்துகளிலும் சாதாரண டெசிபில் ஒலியை காட்டிலும் காட்டு யானைகளை விரட்டும் ஒலியை ஒத்த ஹோர்ன் பொருத்தப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகர சபையினால் இந்த திட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது கொழும்பின் அனைத்து பகுதிகளிலும் விசேட கருவிகளை கொண்டு ஹோர்ன் ஒலியை அளவிடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (2)

# பிரிவுத்துயர் பகிர்வு



### செல்லையா சுப்ரமணியம்

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கனடா Montreal ஐ வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சுப்பிரமணியம் கடந்த 4 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார். அன்னாரின் பூதவுடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு Aeterna, 55 Rue Gince, Quebec, Montreal , Qc H4N 1J7, Canada என்னும் முகவரியில் தகனம் செய்யப்படும்.

### திருமதி நற்குணநாதன் புஸ்பதேவி



சுன்னாகம் பருத்திக்கலட்டியைப் பிறப்பிடமாகவும் சுவிஸ் Burgdorf Oberburg ஐ வசிப்பிடமாகவும் கொண்ட நற்குணநாதன் புஸ்பதேவி கடந்த 4 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு Friedhof 8, 3400 Burgdorf ,Switzerland என்னும் முகவரியில் தகனம் செய்யப்படும்.



### திருமதி துரைச்சாமி சிவக்கொழுந்து

ஆவரங்கால் 10 ஆம் கட்டையை பிறப்பிடமாகவும் கனடா Markham ஐ வசிப்பிடமாகவும் கொண்ட துரைச்சாமி சிவக்கொழுந்து கடந்த 4 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Avenue, Markham ,ON L3R 5G1 ,Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

### திருமதி மரிய இருதயநாதன் ஞானசிலி



ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட மரிய இருதயநாதன் ஞானசீலி கடந்த 4 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார். அன்னாரின் திருப்பலி இன்று புனித லூசியாள் பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் பிற்பகல் 4 மணிக்கு மாதம்பிட்டி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.




### திருமதி துரைசிங்கம் சரோஜினி

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட துரைசிங்கம் சரோஜினி (ஓய்வுபெற்ற ஆசிரியர்) கடந்த 4 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் அரியாலை சித்துப்பாத்தி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமிர்தசரஸ் பொற்கோவிலில் இரு பிரிவினர்களிடையே கடும்மோதல்



(அமிர்தசரஸ்)

பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸில் உள்ள சீக்கியர்களின் பொற்கோவிலில் இரு பிரிவினர்களுக்கிடையே ஏற்பட்ட மோதலில் பலர் காயம் அடைந்துள்ளனர்.

ஒபரேஷன் புளூஸ்டார் நடத்தப்பட்டதன் 30 ஆவது ஆண்டு தினத்தையொட்டி, பொற்கோவிலில் காலை சிறப்பு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நினைவு தினத்தை அனுசரிக்கும் போது பொற்கோவிலை நிர்வகித்துவரும் சிரோமணி குருத்வாரா பிரபந்தக் கமிட்டியை சேர்ந்தவர்களுக்கும் மற்றொரு பிரிவினருக்கும் இடையே கடும் மோதல் ஏற்பட்டது.

அப்போது இரு பிரிவினரும் தாங்கள் வைத்திருந்த கம்ப, வாள், கத்தி, ஈட்டி உள்ளிட்ட ஆயுதங்களால் ஒருவரையொருவர் கடுமையாக தாக்கிக் கொண்டனர்.

இந்த மோதல் சம்பவத்தில் பலர் காயம் அடைந்துள்ளனர் என்று தகவல்கள் தெரிவித்துள்ளன.

காயம் அடைந்தவர்கள் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப் பட்டுள்ளனர்.

மோதலுக்கான காரணம் குறித்தான தகவல் தெரியவில்லை. இரு பிரிவினர் மோதிக் கொண்டதால் அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது.

# ஜெயாவின் சொத்து குவிப்பு வழக்கு விசாரணைக்கு; இடைக்கால தடை நீடிப்பு



முதலமைச்சர் ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கு பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் நடந்து வருகிறது.


இந்த வழக்கில் சேர்க்கப்பட்டுள்ள தனியார் நிறுவனங்களின் சொத்துக்களை ஒப்படைப்பது தொடரபான வழக்கு முடியும் வரை சொத்து குவிப்பு வழக்கு விசாரணைக்கு தடை விதிக்க வேண்டும் என்று ஜெயலலிதா தரப்பில் மேல் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இதையடுத்து சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணைக்கு மேல்நீதிமன்றம் இடைக்கால தடை விதித்தது.

நேற்று அந்த தடையை 16ஆம் திகதி வரை நீடித்து மேல் நீதிமன்றம் உத்தரவிட்டது. தன்னையும் ஒரு மனுதாரராக சேர்க்க கோரிய தி.மு.க. பொதுச் செயலாளர் அன்பழகனின் மனுவுக்கு ஜெயலலிதா பதில் அளிக்கும்படி உத்தரவிடப்பட்டது.

மேலும், இந்த வழக்கில் தடை கேட்டுள்ள முதலமைச்சர் ஜெயலலிதாவின் கோரிக்கை குறித்து 13ஆம் திகதிக்குள் பதில் அளிக்க வேண்டும் என்று தமிழ்நாடு இலஞ்ச ஒழிப்புத்துறைக்கும் மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# விமானங்கள் வாங்குவதில் ஊழல்; சி.பி.ஐ. இங்கிலாந்து விரைவு




(புதுடில்லி)

விமானங்கள் வாங்குவதில் நடைபெற்ற ஊழல் குறித்த விசாரணையை துரிதப்படுத்துவதற்காக சி.பி.ஐ. குழு இங்கிலாந்திற்கு செல்ல உள்ளது.

கடந்த ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசில் விமானப் போக்குவரத்து துறை அமைச்சராக பிரபுல் படேல் இருந்தார்.

விமானத்துறையில் பழைய விமானங்களுக்கு பதிலாக 43 புதிய விமானங்களை சேர்ப்பதற்காக இங்கிலாந்து குழுவிடம் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

8 ஆயிரத்து 399 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏ-319-இல் 19 , ஏ-320-இல் 4, ஏ-321-இல் 20 விமானங்க்ள் என 43 விமானங்களை வாங்க முடிவு செய்யப்பட்டது.

இதற்கு அப்போதைய நிதியமைச்சர் சிதம்பரம் தலைமையில் விமானத்துறை அதிகாரிகள் உட்பட பலர் இடம் பெற்ற ஒப்பந்த குழு அமைக்கப்பட்டிருந்தது.

பயிற்சிமையம் அமைத்தல், பராமரிப்பு பணிகள் உட்பட பல்வேறு பணிகளை மேற்கொள்வதற்கான பிரிவுகளில் சுமார் 175 கோடி ரூபாய் வரையில் ஊழல் நடந்திருப்பதாக குற்றம் சுமத்தப்பட்டது.

இது குறித்து2011-12இல் நடத்தப்பட்ட தணிக்கை அறிக்கையில் ஊழல் நடைபெற்றது கண்டறியப்பட்டது. பின்னர் சி.பி.ஐ., விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

2012ஆம் ஆண்டு ஆரம்ப கட்ட விசாரணை முடிவடைந்த நிலையில் சிவில் விமான போக்குவர்த்து அமைச்சகம் 2013ஆம் ஆண்டில் அதிகாரிகள் மீது வழக்கு பதிவு செய்ய உத்தரவு பிறப்பித்தது.

இதுகுறித்து சி.பி.ஐ., அதிகாரி கூறுகையில், தற்போது வழக்கு விசாரணையை விரைவுபடுத்துவதற்காக விமான போக்குவரத்து துறை துணை தலைவர் கிரண்ராவிடம் சில கேள்விகள் கேட்கப்பட்டுள்ளதாகவும் மேற்கொண்டு வழக்கிற்கு தேவைப்படும் ஆவணங்களை பெறவதற்காகவும் சி.பி.ஐ., குழுவினர் இங்கிலாந்து செல்ல உள்ளதாக வும் தெரிவித்தார்.

# இந்தியாவுக்கான அமெரிக்க இடைக்கால உயர் தூதராக கேத்தலீன் ஸ்டீபன்ஸ் பதவியேற்றார்



இந்தியாவுக்கான அமெரிக்க உயர்தூதராக இருந்த நான்சி பவெல் அப் பதவியில் இருந்து ஓய்வு பெற்று கடந்த மாதம் 22ஆம் திகதி அமெரிக்காவுக்கு சென்று விட்டார்.

இதனையடுத்து, காலியாக இருந்த அந்த பதவியில் கேத்தலீன் ஸ்டீபன்ஸ் என்பவரை இடைக்கால உயர்தூதராக அமெரிக்க அரசு நியமித்தது. இதனையடுத்து, நேற்று முன்தினம் அமெரிக்காவில் இருந்து புதுடில்லி வந்தடைந்த கேத்தலீன் ஸ்டீபன்ஸ் இங்குள்ள அமெரிக்க உயர்தூதரகத்தில் நேற்று காலை பதவி ஏற்றார்.

நிரந்தர உயர்தூதரை அமெரிக்கா தேர்ந்தெடுத்து, நியமிக்கும் வரை இந்த பதவியில் கேத்தலீன் ஸ்டீபன்ஸ் நீடிப்பார். வெளியுறவு துறையில் அனுபவம் வாய்ந்த இவர், கடந்த 2008ஆம் ஆண்டு முதல் 2011 வரை தென் கொரியாவுக்கான அமெரிக்க உயர்தூதராக பணியாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.


## இந்தியாவுக்குள் ஊடுருவ முயன்ற நபர் கைது

இந்தியா நேபாளம் எல்லைப் பகுதியான உத்தரப்பிரதேசம் மாநிலத்தில் உள்ள சோனாவ்லி சோதனை பகுதியில் இந்திய எல்லை பாதுகாப்பு வீரர்கள் நேற்றுமுன்தினம் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது சந்தேகப்படும்படியாக ஒரு நபர் இந்திய எல்லைக்குள் ஊடுருவ முயன்றார் அவரை பிடித்து வசாரித்த போது ரஷ்யாவை சேர்ந்த அவரிடம் பாஸ்போர்ட்டோ விசாவோ இல்லை என்பது விசாரணையில் தெரியவந்தது.

புதுடில்லிக்கு செல்வதற்காக இந்தோ. நோபாள எல்லை வழியாக நுழைய முயற்சித்ததாக பிடிபட்ட அலெக்ஸாண்டர் ஜென்சன் என்பவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக இந்திய உளவுத் துறையினருக்கு தகவல் அளிக்கப்பட்டதையடுத்து இந்திய குடியு ரிமை துறை அதிகாரிகள் அந்நபரை கைது செய்து விசாரித்து வருகின்றனர்.



இமாச்சல பிரதேச முதல்வர் வீரபத்ர சிங் பிரதமர் நரேந்திர மோடியை டில்லியில் வைத்து சந்தித்த போது...




# பேரறிவாளனுக்கு திடீர் மருத்துவ பரிசோதனை



முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தீ கொலை வழக்கில் வேலூர் சிறையில் உள்ள பேரறிவாளனுக்கு திடீரென மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் பேரறிவாளனுக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை உச்ச நீதிமன்றம் ஆயுள் தண்டனையாக குறைத்தது.

20 ஆண்டுகளுக்கு மேலாக வேலூர் மத்திய சிறையில் உள்ள பேரறிவாளனுக்கு திடீரென சிறைத்துறை அதிகாரிகள் மருத்துவமனை பரிசோதனை மேற்கொண்டுள்ளனர்.

வேலூர் அடுக்கும்பாறை அரசு மருத்துவமனையில் இந்த பரிசோதனை நடத்தப்பட்டுள்ளது.

பேரறிவாளனின் கோரிக்கையை ஏற்று இந்த பரிசோதனையை சிறை அதிகாரிகள் மேற்கொண்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

# ஐ.நா.சமாதானக்குழு உறுப்பினராக ஓய்வு பெற்ற இந்திய இராணுவ அதிகாரி நியமனம்

ஐ.நா. சமாதான நடவடிக்கைகளுக்கான நிபுணர் குழுவில், இந்தியாவைச் சேர்ந்த ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி அபிஜித் குஹா நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் ஐ.நா. சமாதான நடவடிக்கைகள் துறையில் துணை இராணுவ ஆலோசகராக 2010 முதல் 2012 வரை பதவி வகித்துள்ளார். அதைத் தொடர்ந்து சமாதான நடவடிக்கைகள் அலுவலக இயக்குநராகவும் அவர் பணியாற்றியுள்ளார்.

அபிஜித் குஹாவை ஐ.நா. சமாதான நடவடிக்கைகளுக்கான துணைப் பொதுச் செயலாளர்கள் ஹெர்வ் லாட்சூஸ், அமீரா ஹக் ஆகியோர் நியமனம் செய்துள்ளனர்.

5 பேர் கொண்ட சமாதான நடவடிக்கைகளுக்கான நிபுணர் குழுவின் தலைவராக அமெரிக்காவைச் சேர்ந்த ஜேன் ஹோல் லூட் செயற்படுவார்.

சமாதானம் மற்றும் பாதுகாப்பு வவிகாரங்களில் அனுபவம் வாய்ந்த அவர் ஐ.நா. பொதுச்செயலாளரின் சிறப்பு ஆலோசகராகப் பணியாற்றி வருகிறார்.

மேலும் தென் ஆபிரிக்காவைச் சேர்ந்த மைக்கேல் ஃ பிரையர், டென்மார்க்கைச் சேர்ந்த ஜோகன்னஸ் பேகர், கனடாவைச் சேர்ந்த வால்டர் டார்ன் ஆகியோர் அந்த நிபுணர் குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

உலக சமாதான நடவடிக்கைகளுக்கு புதிய தொழில்நுட்பங்களைப பயன்படுத்துவது குறித்து இந்த நிபுணர் குழு ஆய்வு செய்து பரிந்துரைகளை வழங்கும்.

இந்தக் குழு இம்மாதம் ஆய்வுப் பணிகளைத் தொடங்கி வரும் நவம்பர் மாதம் அறிக்கை அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் முன்னேற்றப் பாதையில் செல்வதே நம்மவர்களையும் முன்னேறச் செய்ய சிறந்தவழி.
– ஸ்ரீ அன்னை

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# வெளவாலுக்கு காகம் தலைகீழாய்த் தெரிகிறது

ஒரு மரத்தில் வெளவாலும் காகமும் தங்கியிருக்கின்றன.

ஒருநாள் காகத்தைப்பார்த்து காக்கையாரே... காக்கையாரே... நீங்கள் ஏன் தலைகீழாய் நிற்கிறீர்கள் என்று வெளவால் வினவியது.

அதற்குக் காகம் வெளவாலாரே, நான் நேராகத்தான் நிற்கிறேன். நீர்தான் தலைகீழாய் தொங்குகிறீர் என்றது காகம்.

வெளவாலுக்கு ஒரே கோபம். காக்கையாரே காக்கையாரே ஒரு போதும் பொய் சொல்லக் கூடாது. நீர் தலைகீழாய் நிற்பது தான் உண்மை என்று வெளவால் இறுக்கமாகக் கூறியது.

காகம் மீளவும் சொல்லிற்று; வெளவால் அண்ணே! நீங்கள் தலைகீழாய்த் தொங்குவது இந்த உலகம் முழுவதற்கும் தெரியும். எனவே நான் பொய் சொல்லவில்லை. நீங்கள் தான் உண்மை நிலை தெரியாமல் பேசுகிறீர்கள் என்றது காகம்.

காகத்தின் கருத்தை ஏற்றுக்கொள்ளாத வெளவால், காக்கையாரே நீர் என்ன சொன்னாலும் என்னைப் பொறுத்தவரை நீர் தலைகீழாய்த்தான் நிற்கிறீர் என்று கூறி, உண்மை நிலையை உணர முடியாமல் கதையை நிறைவு செய்தது வெளவால்.

இந்த நிலைதான் இலங்கை இனப்பிரச்சினையிலும் காணப்படுகின்றது. அதாவது இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை என்கிறது அரசு. ஆனால் தமிழ் மக்களோ காணி அபகரிப்பு முதல் கட்டாயக் குடியேற்றம் உட்பட தமது சொந்த இடங்களில்வாழமுடியாதநிலைமையில் இருக்கின்றனர்.

இலங்கை அரசு கூறுவது போல இனப்பிரச்சினை இல்லையென்றால், வடபுலத்தில் இராணுவப் பிரசன்னம் எதற்கு? நில அபகரிப்பு ஏன்? என்ற வினாக்கள் எழும்.

இலங்கையில் இருக்கக் கூடிய முப்படை என்பது; தமிழர்களுக்கு எதிரான படை போலத் தெரிகின்றதே தவிர, அது இலங்கையின் ஒட்டுமொத்த பிரஜைகளையும் பாதுகாப்பதற்கான படைபோலத் தெரியவில்லை.

அப்படியானால், இனப்பிரச்சினை என்பது இலங்கையில் மிகவும் வலுப்பெற்ற நிலையில் இருக்கின்றதென்பதே நிஜம். உண்மை இதுவானால் தமிழ் மக்கள் தங்களின் உரிமை தொடர்பில் தொடர்ந்தும் விசனப்பட்டுக் கொண்டே இருப்பர்.

தங்களின் உரிமைப் பிரச்சினையை ஐ.நா. சபையும் சர்வதேசமும் தீர்த்து வைக்க வேண்டும் என்ற நினைப்பை அவர்கள் எங்ஙனம் கை விட முடியும்.

இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கான ஏற்பாடுகள் உள்ளக மட்டத்தில் நடைபெறுமாக இருந்தால் அது தொடர்பிலேனும் ஆறுதல் அடைய முடியும்.

ஆனால் அந்தச் சிந்தனையும் இல்லை நோக்கமும் இல்லை என்பதே அரசின் நிலைப்பாடு.

இத்தகையதொரு நிலைப்பாடு தமிழ் இனத்தை அடிமைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டதென்றே கூறவேண்டும்.

இந்நிலையில் தான் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா தனித் தமிழீழத்திற்கு பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டுமென பிரதமர் மோடியிடம் வலியுறுத்தினார்.

ஜெயலலிதாவின் இக் கோரிக்கை இலங் கைக்கு எதிரான சதி என்று குற்றம்சாட்டும் தேசிய சுதந்திர முன்னணி முதலில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு அரசைகட்டாயப்படுத்தியிருக்கவேண்டும்.

செய்யவேண்டியதை செய்யாமல் விட்டு சதி, சூழ்ச்சி என்று கூறுவதெல்லாம் மடமைத்தனம்.

வெளவால் முதலில் தன்னிலையை அறிந்து கொள்வதை விடுத்து, காகத்தைக் குறை கூறுவது எங்ஙனம் நியாயமாகும்.

வெளவாலின் நிலையில் நின்று கொண்டு மற்றவர்களைப் பார்க்கக் கூடாது என்பது நம் தாழ்மையான கருத்து.

# இலங்கையர்களின் உழைப்பால் தென்கொரியாவின் வருமானம் வளர்ச்சி

## தென்கொரிய தூதுவர் புகழாரம்

தென்கொரியாவில் பணியாற்றும் இலங்கையர்களால் அதிக பொருளாதார முன்னேற்றத்தை தமது நாடு அடைந்து வருவதாக இலங்கைக்கான தென்கொரிய தூதுவர் தெரிவித்துள்ளார்.

கைத்தொழில் வாணிபத்துறை அமைச்சர் றிஷாத் பதியுதீனை அமைச்சில் வைத்து சந்தித்து உரையாடும் போதே தென்கொரிய தூதுவர் மேற்படி கருத்தை கூறியுள்ளார்.

இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தக உறவு குறித்து இச்சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டது.

தென்கொரியாவில் பணியாற்றும் இலங்கையர்களின் உழைப்பு எமது நாட்டுக்கு அதிக வருமானத்தையும் பொருளாதார ரீதியாக முன்னேற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது. அவர்களது சேவை பாராட்டுக்குரியது. அதற்காக விசேடமாக இலங்கைக்கு நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளேன் என தூதுவர் தெரிவித்தார்.

இரு நாடுகளுக்குமிடையில் வர்த்தக உறவை ஊக்குவிப்பதன் அவசியம் குறித்து சுட்டிக்காட்டிய அமைச்சர் றிஷாத் பதியுதீன், இரு நாடுகளினதும் வர்த்தக தூதுக்குழுக்களை ஒன்றிணைத்து செயற்படுத்தல், இலங்கையின் வர்த்தக குழுவொன்றை தென்கொரியாவுக்கு அனுப்புதல் மற்றும் தென்கொரிய முதலீட்டாளர்களை இலங்கையில் முதலீடு செய்வது குறித்தும் ஆலோசனைகளை முன்வைத்தார்.

கடந்த ஐந்து வருடங்களில் இலங்கை பொருளாதார ரீதியாக அடைந்திருக்கும் முன்னேற்றத்தை அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

இதேவேளை இலங்கையின் இந்த முன்னேற்றம் குறித்து தாம் திருப்தியடைவ தாக வும் தென்கொரிய தூதுவர் மேலும்தெரிவித்தார். (2)

## றுகுணு பல்கலைக்கழக மோதலுக்கு ஜனாதிபதி பொறுப்புக்கூற வேண்டும்

றுகுணு பல்கலைக்கழகத்தில் ஏற்பட்ட மோதல் நிலைமை தொடர்பில் ஜனாதிபதி உட்பட தென் மாகாண சபை உறுப்பினர்கள் பொறுப்புக்கூற வேண்டும் என பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க சம்மேளனத்தின் தலைவர் கலாநிதி சந்திகுப்த தேநுவர தெரிவித்துள்ளர்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

கிரிக்கெட் வன்முறையாளர் ஒருவரும் தென் மாகாண சபை உறுப்பினர்கள் சிலரும் வந்து பல்கலைககழக மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தினர்.

அரசாங்கம் ஒருவருக்கு ஒருவர் மோதி கொள்ளும் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளது.

மாணவர்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும் போது ஒரு மணிநேரத்திற்கு முன்னதாக அந்த இடத்திற்கு வரும் பொலிஸார், இம்முறை மோதல் ஏற்பட்ட போதும் அங்கு வரவில்லை.

பல்கலைக்கழங்களில் தீர்மானங்களை எடுக்கும் போது கூட்டாக இணைந்து தீர்மானங்கள் எடுக்கப் படும்.

ஆனால் றுகுணு பல்கலைக் கழகத்தில் தேசத்துக்கு மகுடம் கண்காட்சியை நடத்துவது தொடர்பான தீர்மானம் அப்படி எடுக்கப்படவில்லை.

நிர்வாகம் இதன் போது நேரடி யான தீர்மானத்தை எடுத்தது எனவும் சந்திர குப்த தேநுவர குறிப்பிட்டுள்ளார். (2)

## விசாகப் பொங்கல்


(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை தென்மேற்கு- விழிசிட்டி அருள்மிகு பத்திரகாளி சமேத வீரபத்திரர் ஆலய வருடாந்த விசாகப் பொங்கல் எதிர்வரும் 11 ஆம் திகதி புதன் கிழமை காலை 6 மணிக்கு நடைபெறும்.

மேலும் அன்றைய தினம் காலை 8 மணிக்கு பரிபாலனசபை பொதுக் கூட்டமும் நடைபெறவுள்ளது. (2)

## நீராவியடி ஜெய வீரகத்தி விநாயகர் ஆலய ஆறாம் திருவிழா இன்று

### நீராவிக் குளக்கரையான் திருநாள் ஆறு மயில்வாகனத் திருக்காட்சி



மகிழம்பூ மாலையுடன் அல்லிமலர்க் கைக்கொண்டு
மாதுளை முத்துமாலைதனைச் சிரமதனில் சூட்டிக்கொண்டு
நீல வண்ணப்பட்டாடை நீலோற்பல மொட்டுடனே
மயூரேஷ கணபதியாய் வருகின்றான்!
இன்று

*கஜவதனகுஹராஜனார்*

## திருமஞ்ச வெள்ளோட்டம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் மேற்கு திருவருள்மிகு ஸ்ரீ சந்திரசேகர விநாயகர் ஆலயத்தில் திருமஞ்ச வெள்ளோட்ட விழா நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 2மணிக்கு நடைபெறவுள்ளது.

மேலும் திருமஞ்ச வெள்ளோட்டம் நிறைவுற்றதும் திருமஞ்சத்தை உருவாக்கிய சிற்பக் கலைஞர்களை கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெறும்.

இந் நிகழ்வில் தலைமை சிற்பக் கலைஞருக்கு சிற்பக் கலாவேந்தர் எனும் பட்டம் வழங்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் மதுரகவி காரை எம்.பி. அருளானந்தனால் வாழ்த்துப்பா இயற்றி பாடிக் கையளிக்கப்படும். (2)

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



நாம் வெற்றி பெறவேண்டுமென்றால் புத்தி, வாய்ப்பு, ஆண்டவனின் கிருபை இவையனைத்தும் சேர்ந்து இருக்க வேண்டும்.

நாம் வாழ்வில் வெற்றியடைய வேண்டுமென்றால் ஒரு குறிக்கோளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். குறிக்கோளை ஏற்படுத்திக்கொள்வதற்கு எமது இருதயத்தின் ஆசையைக் கண்டுபிடிக்க வேண்டும். அதாவது நமது ஸ்வதர்மாவைக் கண்டுபிடிக்கவேண்டும்.

படிப்புத்தான் முக்கியம் என்றாலும் படிப்புத்தான் எல்லாமே என்று நினைக்க வேண்டாம். படிப்பு வரவில்லை என்றால்கூட உங்களுக்கென்று ஒருதனித்தன்மை இருக்கும். அதைக்கண்டு பிடித்தால்கூட வாழ்வில் முன்னேற முடியும்.

எடிசன் பள்ளியில் திறமையற்றவர் என்று பெயர் வாங்கியவர். ஒருமுறை இரண்டுமுறை அல்ல ஆயிரத்து ஒருமுறை அவருடைய கண்டுபிடிப்பில் தோற்றவர். ஆனால் அவரால்தான் இன்று உலகமே ஒளிவீசுகின்றது.

இந்த உலகத்தில் அனைவருமே ஒரேமாதிரி இருப்பதில்லை. ஆனால் அனைவருக்கும் தனித்தன்மை இருக்கின்றது.

## ஊதியக் கொடுப்பனவு


(யாழ்ப்பாணம்)

இலங்கை போக்குவரத்துச் சபை (வடக்கு) யாழ்.சாலை ஊழியர்களுக்கான இம்மாத ஊழியக் கொடுப்பனவு வழங்கப்படும் என யாழ்.சாலை முகாமையாளர் செ.குலபாலசெல்வம் அறிவித்துள்ளார்.

இதற்கமைய யாழ்.சாலையின் அனைத்து ஊழியர்களுக்கு மானவேதனம் இன்று சனிக்கிழமை வழங்கப்படும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (2)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### தெய்வ நம்பிக்கை அவசியம்



- உலகிலுள்ள நல்லவர்கள் செய்த தியாகத்தின் பயனையே மனிதகுலம் இன்று அனுபவித்து வருகிறது.
- உலகம் பெரிய உடற்பயிற்சிக் கூடம். அதில் நம்மை வலிமையுடையவர்களாக ஆக்கிக் கொள்ளவே பூமிக்கு வந்திருக்கிறோம்.
- வாழ்வு ஒருநாள் முடிந்து விடும் என்பது உறுதியாக இருக்கும்போது நற்செயலுக்காக நம் உயிரை விடுவது மேல்.
- தெய்வ நம்பிக்கை இல்லாத அறிவாற்றல் மனிதனை மிருகமாகச் செயற்பட வைத்து விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான கராத்தே; தீவக பாடசாலை அணிகள் ஆதிக்கம்

வடமாகாண பாடசாலைகளுக்கிடையில் இடம்பெற்று வரும் கராத்தேப் போட்டிகளில் தீவகக் கல்வி வலய பாடசாலை அணிகள் மற்றும் வீரர்கள் 4 முதலிடங்களையும், ஒரு இரண்டாமிடம் மற்றும் இரண்டு மூன்று இடங்களைப் பெற்று ஆதிக்கம் செலுத்தியுள்ளனர்.


வடமாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடமாகாணப் பாடசாலை அணிகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் 5 கட்டங்களாக இடம்பெற்று வருகின்றன.

முதலாம் மற்றும் இரண்டாம் கட்டப் போட்டிகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் முடிவுற்ற நிலையில் மூன்றாம் கட்டப் போட்டிகள் தற்போது வவுனியா மாவட்டத்தில் இடம பெற்று வருகின்றது.

கராத்தே போட்டிகள் வவுனியா சிவப் பிரகாச மகளிர் கல்லூரி மற்றும் வவுனியா கத்தோலிக்கத் திருச்சபை தமிழ் கலவன் பாடசாலை ஆகியவற்றில் இடம்பெற்றன.

கராத்தேப் போட்டிகள், கராத்தே காட்டா (கராத்தேயின் அசைவுகளைச் செய்து காட்டுதல்) தனிநபர் மற்றும் அணி என நடைபெற்றன.

அத்துடன் குமுத்தி (சண்டையில் ஈடுபடுதல் - தனிநபர் போட்டி) போட்டியும் இடம் பெற்றன.



### குமுத்தி (சண்டையில் ஈடுபடுதல்) வெற்றியாளர்கள்

குமுத்தி கராத்தேயில் 15 வயது ஆண்களில் முதலிடத்தினை ரி.தனுஜன் (யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி), இரண்டாமிடத்தினை எஸ்.சஞ்சீவன் (கிளிநொச்சி பளை மத்திய கல்லூரி), மூன்றாமிடத்தினை எஸ்.ரிலுக்ஷன் (யாழ்.இணுவில் இந்து கல்லூரி) ஆகியோர் பெற்றனர்.

குமுத்தி 15 வயதுப்பிரிவு பெண்களில் முதலிடத்தினை எம்.தியாகராசி (யாழ். புங்குடுதீவு ஸ்ரீகணேசா வித்தியாலயம் - தீவகம்), இரண்டாமிடத்தினை பி.தேனுகா (யாழ்.தும்பளை சைவப்பிரகாச மகா வித்தியாலயம்), மூன்றாமிடத்தினை கே.தமிழ் நிலா (கிளிநொச்சி மகா வித்தியாலயம்) ஆகியோர் பெற்றனர்.

குமுத்தி 17 வயதுப்பிரிவு ஆண்களில் முதலிடத்தினை எம்.முரளி (யாழ். சென். அன்ரனீஸ் கல்லூரி), இரண்டாமிடத்தினை ஈ.அல்லிக்குமரன் (யாழ்.வேலாயுதம் மகா வித்தியாலயம்), மூன்றாமிடத்தினை ரி.தனுசன் (கிளிநொச்சி மத்திய கல்லூரி) ஆகியோர் பெற்றனர்.

குமுத்தி 17 வயதுப்பிரிவு பெண்களில் முதலிடத்தினை எஸ்.சிந்துஜா (யாழ். பருத்தித்துறை பெண்கள் உயர்தரப் பாடசாலை), இரண்டாமிடத்தினை பி.துவாரகா (யாழ். தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்), மூன்றாமிடத்தினை எஸ்.பிரத்திகா (கிளிநொச்சி மகா வித்தியாலயம்) ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

குமுத்தி 19 வயதுப்பிரிவு ஆண்களில் முதலிடத்தினை எச்.என்.றினாஷ் (வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலயம்) இரண்டாமிடத்தினை ஆர்.செந்தூரன் (யாழ். இந்து கல்லூரி), மூன்றாமிடத்தினை எம். முரளிதரன் (யாழ்.கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்) ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

குமுத்தி 19 வயதுப்பிரிவு பெண்களில் முதலிடத்தினை ஆர்.தமிழ்மகள் (கிளிநொச்சி இந்து கல்லூரி), இரண்டாமிடத்தினை எச்.நர்மதா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), மூன்றாமிடத்தினை என்.சர்மிளா (கிளிநொச்சி இந்து கல்லூரி) ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

### காட்டா (கராத்தே அசைவுகளைச் செய்து காட்டுதல்) அணிகளுக்கிடையிலான போட்டி

15 வயதுப்பிரிவு ஆண்களில் முதலிடத்தினை கிளிநொச்சி மத்திய கல்லூரியும், இரண்டாமிடத்தினை யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரியும், மூன்றாமிடத்தினை கிளிநொச்சி நெச்சிக்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையும் பெற்றுக்கொண்டன.

15 வயதுப்பிரிவு பெண்களில் முதலிடத்தினை யாழ்.கைதடி நவீல்ட் பாடசாலையும், இரண்டாமிடத்தினை கிளிநொச்சி இந்து கல்லூரியும், மூன்றாமிடத்தினை கிளிநொச்சி மகா வித்தியாலயமும் பெற்றுக் கொண்டன.

17 வயதுப்பிரிவு ஆண்களில் முதலிடத்தினை யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரியும், இரண்டாமிடத்தினை சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியும், மூன்றாமிடத்தினை கிளிநொச்சி நெச்சிக்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையும் பெற்றுக்கொண்டன.

17 வயதுப்பிரிவு பெண்களில் முதலிடத்தினை யாழ்.கைதடி நவீல்ட் பாடசாலையும், இரண்டாமிடத்தினை முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரியும், மூன்றாமிடத்தினை கிளிநொச்சி இந்து கல்லூரியும் பெற்றுக் கொண்டன.

19 வயதுப்பிரிவு ஆண்களில் முதலிடத்தினை சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியும், இரண்டாமிடத்தினை அச்சுவேலி மத்திய கல்லூரி அணியும் பெற்றுக்கொண்டன.

19 வயதுப்பிரிவில் முதலிடத்தினை கிளிநொச்சி இந்து கல்லூரி அணி பெற்றுக் கொண்டது.

### காட்டா (கராத்தே அசைவுகளைச் செய்து காட்டுதல்) தனிநபர்களுக்கிடையிலான போட்டி

15 வயதுப்பிரிவு ஆண்களில் முதலிடத்தினை எல்.பிரியதர்ஷன் (யாழ்.கைதடி நவீல்ட் பாடசாலை), இரண்டாமிடத்தினை எம்.சதன் (யாழ்.புங்குடுதீவு மகா வித்தியாலயம் - தீவகம்), மூன்றாமிடத்தினை எஸ்.சிந்துஜன் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி) ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

15 வயதுப்பிரிவு பெண்களில் முதலிடத்தினை பி.தேனுகா (யாழ்.தும்பளை சிவப் பிரகாச மகா வித்தியாலயம்), இரண்டாமிடத்தினை எஸ்.ஜானுகா (யாழ்.கைத்தடி நவீல்ட் பாடசாலை), மூன்றாமிடத்தினை கே.தமிழ்நிலா (கிளிநொச்சி மகா வித்தியாலயம்) ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

17 வயதுப்பிரிவு ஆண்களில் முதலிடத்தினை ஈ.ஆழிக்குமரன் (யாழ்.வேலாயுதம் மகா வித்தியாலயம்), இரண்டாமிடத்தினை ஏ.துஸியந்தன் (யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி), மூன்றாமிடத்தினை எம்.முரளி (சென்.ஜோன்ஸ் கல்லூரி) ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

17 வயதுப்பிரிவு பெண்களில் முதலிடத்தினை எஸ்.சிந்துஜா (யாழ்.பருத்தித்துறை பெண்கள் உயர்தரப் பாடசாலை), இரண்டாமிடத்தினை பி.துவாரகா (யாழ்.தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்), மூன்றாமிடத்தினை சி.ஜெயந்தினி (யாழ்.கைதடி நவீல்ட் பாடசாலை) ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

19 வயதுப்பிரிவு ஆண்களில் முதலிடத்தினை எம்.சுகிர்தன் (சென்.அன்ரனீஸ் கல்லூரி - தீவகம்), இரண்டாமிடத்தினை எச்.எம்.றினாஸ் (வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலயம்), மூன்றாமிடத்தினை எம்.மபீஸன் (வவுனியா கத்தோலிக்க திருச்சபை தமிழ் கலவன் பாடசாலை) ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

19 வயதுப்பிரிவு பெண்களில் முதலிடத்தினை ஆர்.நிதுஜா (யாழ்.வேலணை மத்திய கல்லூரி -தீவகம்), இரண்டாமிடம் என்.சர்மிளா (கிளிநொச்சி இந்து கல்லூரி), எச்.நர்மதா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி) ஆகியோர் பெற்றுக்கொண்டனர். (க)

# நாவற்குழி சரஸ்வதியை வீழ்த்தியது சிவன் விளையாட்டுக் கழகம்



நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக் கழகத்திற்கெதிரான கிரிக்கெட் போட்டியில் சிவன் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றுள்ளது.

கைதடி மேற்கு சனசமூக நிலையத்தின் 66 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு குமரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் தென்மராட்சி பிரதேச கழகங்களுக்கிடையிலான அணிக்கு 9 பேர் பங்கு பற்றும் 12 பந்து பரிமாற்றங்களை கொண்ட கிரிக்கெட் போட்டியின் முதலாவது அரையிறுதி ஆட்டம் அண்மையில் நடைபெற்றது. இதில் சிவன் வி.க. எதிர் நாவற்குழி சரஸ்வதி வி.க. மோதியது.

நாணயச்சுழற்சி:- சிவன் வி.க. (துடுப்பாட்டம்) முதலில் துடுப்பெடுத்தாடிய சிவன் வி.க. 12 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 93 ஓட்டங்களினை 5 இலக்குகளினை இழந்து பெற்றனர்.

துடுப்பாட்டத்தில் சிவன் வி.க. சார்பாக செந்தூரன் 25, கமல்- 24 ஓட்டங்களினை தமது அணிக்காக பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் நாவற்குழி சரஸ்வதி வி.க. சார்பாக கனோஜன் - 24/2, கபில்ராஜ்- 42/2 இலக்குகளினை கைப்பற்றினர். பதிலுக்கு 94 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பெடுத்தாடிய நாவற்குழி சரஸ்வதி வி.க. அணியினர் 9.5 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்கினையும் இழந்து 42 ஓட்டங்களினை மாத்திரம் பெற்று 51 ஓட்டங்களினால் தோல்வியடைந்தனர். துடுப்பாட்டத்தில் நாவற்குழி சரஸ்வதி வி.க. சார்பாக கயூதரன்- 13, கபில்ராஜ்-7 ஓட்டங்களினை தமது அணிக் காக பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் சிவன் வி.க. சார்பாக செந்தூரன் -10/3, வினோ -14/2 விக்கெட்டுகளை கைப்பற்றினர். (க-29)

விளையாட்டுச் செய்திகள்

## இன்றைய போட்டி

(தும்பளை)

உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை ஆதரவுடன் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டியில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு றேஞ்சர்ஸ் B விளையாட்டுக் கழகத்தை எதிர் த்து இமையாணன் மத்திவிளையாட்டுக் கழகம் களமிறங்கவுள்ளது.

அதனை தொடர்ந்து பிற்பகல் 4.30 மணிக்கு சக்திவேல் (கொடுக்குளாய்) விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சென்.பீற்றேர்ஸ் விளையாட்டுக் கழகம் களமிறங்கவுள்ளது. (க-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாவது டெஸ்ட் போட்டிக்கான இங்கிலாந்து அணி அறிவிப்பு

இலங்கை - இங்கிலாந்து அணிகளுக்கிடையில்நடைபெறவுள்ளமுதலாவது டெஸ்ட் போட்டிக்கான அணியை இங்கிலாந்து அறிவித்துள்ளது.


அலஸ்டயர் குக் தலைமையில் 12 வீரர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர். புதிய மூன்று வீரர்களுக்கு அணியில் வாய்ப்பு வழங்கப்பட்டுளளது. மூயேன் அலி, கிறிஸ் ஜோர்டான், சாம் றொப்சன் ஆகியோரே இங்கிலாந்து டெஸ்ட் அணியில் இடம்பிடித்துள்ள புதிய வீரர்களாவர்.

உபாதை காரணமாக சந்தேகத்தில் இருந்த விக்கெட் காப்பாளர் மத் ப்ரையர் அணியில் இணைக்கப்பட்டுளார். லியாம் பிளங்கட் 7 வருடங்களின் பின்னர் மீண்டும் அணியில சேர்க்கப்பட்டுள்ளார். அணியில் இடம்பிடிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட மொன்டி பனேசர் ஒழுக்காற்று நடவடிக்கை காரணமாக அணியில் அங்கம்வகிக்கும்வாய்ப்பை இழந்துள்ளார்.

ஆஷஸ் போட்டிகளின் தோல்வியின் பின்னர் அணியில் இருந்து பலர் விலகியுள்ள நிலையில் பல மாற்றங்களுடன் இங்கிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

அலஸ்டைர் குக், மூயேன் அலி, ஜேம்ஸ் அன்டர்சன், கரி பலன்ஸ, இயன் பெல், ஸ்டுவோர்ட் ப்ரோட், க்றிஸ் ஜோர்டான், லியாம் ப்லங்கட், மத் ப்ரையர், சாம் றொப்சன், ஜோ ரூட், க்றிஸ் வோக்ஸ் ஆகியோரே இங்கிலாந்து அணியில் இடம்பிடித்துள்ள வீரர்கள். (க)

# மரியா ஷரபோவா இறுதிப்போட்டிக்கு தெரிவு



பிரெஞ் பகிரங்க டென்னிஸ் போட்டித் தொடரின் மகளிர் பிரிவில் மரியா ஷரபோவா, சிமோனா ஹலெப் ஆகியோர் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளனர்.

ரஷ்ய வீராங்கனை மரியா ஷரபோவா, கனடாவின் வீராங்கனை ஜுஜீன் பௌச்சார்ட் உடன் மோதி 4:6 என்ற புள்ளிகளின் படி முதல் செட்டில் தோல்வியடைந்த போதும் அடுத்த இரண்டு சுற்றுககளிலும் 7:5, 6:2 என்ற புள்ளிகளின் படி வெற்றி பெற்றார்.

மற்றைய அரை இறுதிப் போட்டியில் றொமேனிய வீராங்கனை சிமோனா ஹலெப், ஜேர்மனி வீராங்கனை அன்றியா பெட்கோவிக்கை 6:2;7:6 என்ற புள்ளிகளின்படி இரண்டு செட்களிலும் வெற்றி பெற்றார். (க)

# ஹொக்கி கருத்தரங்கும் பயிற்சிப்பட்டறையும் - 2014

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட வளைகோலாட்ட சங்கமானது இன்று 7ஆம் திகதி மற்றும் 8ஆம் திகதிகளில் (சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை) வளைகோலாட்ட கருத்தரங்கும் பயிற்சிப் பட்டறையும் - 2014 இனை யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரியில் ஒழுங்கு படுத்தியுள்ளது.

மேற்படி கருத்தரங்கு மற்றும் பயிற்சிப்பட்டறையினை இலங்கை வளைகோலாட்ட சம்மேளனம் நடத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி கருத்தரங்கின் இரண்டாம் நாள் 8ஆம் திகதி அன்று பங்குபற்றுபவர்களுக்கும் வளவாளர்களுக்கும்இடையில்வளை கோலாட்ட போட்டியின் ஒழுங்கு விதிகள் சம்மந்தமான கலந்துரையாடல் இடம்பெறும்.

அதனை தொடர்ந்து இலங்கை வளைகோலாட்ட சம்மேளனத்தினால் தேசிய ரீதியிலான வளைகோலாட்ட நடுவர்களுக்கான பரீட்சையும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி கருத்தரங்கில் பங்குபற்றுபவர்களை காலை 8.00 மணிக்கு யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரிக்கு சமுகமளிக்கும்படி கேடடுக்கொள்ளப்பட்டுள்ளது. (க)

## கொழும்பில்...

யாக முதல் தரக் கப்டன் தகுதியை கொண்ட திமித்திரி வி.பஸ்சென்யூக் பணியாற்றி வருவதுடன் அந்த கப்பல் 162.8 மீற்றர் நீளத்தை கொண்டது.

7 ஆயிரத்து 595 தொன் எடை கொண்ட இந்த கப்பலில் 38 அதிகாரிகளும் 321 கடற்படையினரும் பணியாற்றி வருகின்றனர்.

கொழும்பு துறைமுகத்திற்கு வந்துள்ள ரஷ்ய கப்பல் எதிர்வரும் 8 ஆம் திகதி வரை இலங்கையில் நங்கூரமிட்டிருக்கும்.

ரஷ்ய கடற்படையினர் இலங்கையில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் இலங்கை கடற்படையினர் ஏற்பாடு செய்துள்ள விசேட நிகழ்ச்சியில் அவர்கள் கலந்து கொள்ள உள்ளனர். (செ-11)

## மிக வயதா...

பர் மாதம் 22 ஆம் திகதி பிறந்துள்ளார்.

இவர் மாவனெல்ல, ஹேம்மாத்தகம பிரதேசத்தில் தனது குடும்பத்தினருடன் வசித்துவந்துள்ளார்.

இவருக்கு 7 பிள்ளைகளும் 98 பேரப்பிள்ளைகளும் உள்ளதுடன், இவரின் கணவர் 111 வயதில் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (செ-11)

## பயங்கரமான அபாய...

துள்ளதாக தகவல்கள் வெளியாகி இருந்தன.

இராஜதந்திர ரீதியில் முன்னாள செயலாளர் நாயகத்திற்கு இருக்கும் வரவேற்பு காரணமாக அவரை தலைவர் பதவிக்கு தெரிவுசெய்ததாக கூறப்படுகிறது.

இது அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகளின் தந்திரம் என இராஜதந்திரிகள் கோடிட்டுக்காட்டியுள்ளனர்.

கொபி அனான் போன்ற நோபல் பரிசு பெற்ற ஒருவரை விசாரணைக் குழுவின் தலைவராக நியமித்தால், அவருக்கு விசா வழங்குவதை இலங்கை அரசாங்கம் நிராகரிக்க முடியாது.

அத்துடன் அவர் இலங்கையில பயணிக்கும் இடங்கள் மற்றும் சந்திக்கும் நபர்கள் தொடர்பில் வரையறைகளை விதிக்க முடியாது.

கொபி அனானுக்கு எதிராக அவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால், இலங்கைக்கு சார்பான நாடுகளும் இலங்கையை விமர்சிக்க கூடும்.

13 பேரை கொண்ட சர்வதேச விசாரணைக்குழுவின் இரண்டு உறுப்பினர்கள் சர்வதேச புகழ் பெற்ற தொழில்நுட்ப நிபுணர்கள்.

மேற்படி விசாரணைக்குழுவை நியமிப்பதன் மூலமாக நவநீதம்பிளளை இலங்கைக்கும் இலங்கை இராணுவத்திற்கும் பாரிய அழுத்தங்களை கொடுக்க முயற்சித்து வருகிறார் எனவும் தயான் ஜயதிலக்க குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை ஐ.நா மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கை தொடர்பில் தயாரித்துள்ள மனித உரிமை தொடர்பான இறுதியறிக்கை அடுத்த வருடம் மார்ச் மாதம் மனித உரிமை பேரவையில் சமர்ப்பிக்கப்படும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

இதன் போது இலங்கைக்கு விஞ்ஞான ரீதியான மற்றும் பொருளாதார ரீதியான தடைகள் விதிக்கப்படக் கூடும் எனவும் தயான் ஜயதிலக்க கூறியுள்ளார். (செ-11)

## பள்ளிவாசலை அகற்ற...

விரோதமாக இயங்கி வருகின்றது என்ற அடிப்படையில் அந்த அமைப்பு இந்த முறைப்பாட்டை செய்துளளது.

பிரதேசத்தில் உள்ள விகாரை ஒன்றின் தலைமை பிக்குவான மெதிரிகிரியே புஞ்ஞசார தேரர், பொது பல சேனா அமைப்பின் சார்பில் இந்த முறைப்பாட்டை செய்துள்ளார்.

இந்த முறைப்பாட்டை அடுத்து பள்ளிவாசலுக்கு சென்ற பொலிஸாருக்கு, பள்ளிவாசல் நிர்வாகம் அதன் பதிவு ஆவணங்களை காட்டியுள்ளது.

முஸ்லிம் மத மற்றும் கலாசார திணைக்களம் இதனை பள்ளி வாசலாக அங்கீகரித்துள்ளது.

குறித்த பள்ளிவாசலை அங்கிருந்து அகற்றுமாறு கோரி பொதுபல சேனா சிறிய மற்றும் பாரியளவிலான ஆர்ப்பாட்டங்களை பிரதேசத்தில் மேற்கொண்டது. எனினும் பள்ளிவாசலை அகற்ற எந்த காரணங்களும் இல்லை என பள்ளிவாசல் நிர்வாகம் தெளிவாக கூறியுள்ளது.

சிங்களவர்கள் பெருபான்மையாக வாழ்ந்து வரும் மாவனல்லை பிரதேசத்தில் முஸ்லிம் மக்களும் கணிசமான அளவில் வாழ்ந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

## வேற்றுக்கிரகம் மோதி...

கொண்ட ஜெர்மனிய விஞ்ஞானிகள் இதனைத் தெரிவிக்கின்றனர்.

நானூற்றைம்பது கோடி ஆண்டுகள் முன்பாக பூமியின் மீது வேறு ஒரு கிரகம் வந்து பூமியின் மீது பயங்கரமாக மோதியது என்பதும், அப்படி மோதிச் சிதறிய சிதறல்கள் தான் பூமியைச் சுற்றி ஒன்றுதிரண்டு நிலவு உருவானது என்பதும்தான் 1980கள் முதல் விஞ்ஞானிகள் பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கோட்பாடாக இருந்துவருகிறது.

சூரிய குடும்பமும் உருவான விதம் தொடர்பான சாத்தியக்கூறுகளை கணினிகள் மூலமாக அனுமானித்தபோதும் நில்வு உருவானதற்கு பொருந்திவரக்கூடிய விளக்கமாக இதுதான் இருந்துவருகிறது.

ஆனால் இந்த கோட்பாட்டுக்கு தடய பூர்வ ஆதாரம் எதுவும் அதற்கு இதுவரை இல்லாமல் இருந்துவந்தது.

அப்படி வந்து மோதியதாக கருதப்படும் கிரகத்துக்கு கிரேக்க புராணத்திலிருந்து எடுத்து தியா என்ற ஒரு பெயரை விஞ்ஞானிகள் கொடுத்திருந்தார்கள்.

அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் நிலவுப் பயணம் சென்று அங்கிருந்து பாறைகளை எடுத்து வந்த பின்னர் அதில் செய்யப்பட்டிருந்த ஆய்வுகளை வைத்து, நிலவுப் பாறைகள் முழுக்க பூமியிலிருந்து சென்றவைதான் - அதாவது பூமிப் பாறைகளில் காணப்படும் இரசாயன மூலக்கூறுகளும் அடையாளங்களும்தான் அந்த பாறைகள் முழுமையிலும் தென்பட்டதாக கருதப்பட்டது.

ஆனால் மேலும் நூதனமான ஆய்வுகளை தற்போது நிலவுப் பாறைகளில் மேற்கொண்டபோது, பூமிப் பாறைகளின் இரசாயன கூற்றுக்கு சம்பந்தமில்லாத வெளிக்கிரக தோற்றத்துக்கான அடையாளங்கள் நிலவுப் பாறைகளில் தெரிவதாக ஜெர்மனியிலுள்ள கொயெடிங்கென் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

பூமிப் பாறைகளுக்கும் நிலவுப் பாறைகளுக்கும் இடையில் சிறு வித்தியாசம் இருப்பதை தாங்கள் கண்டுபிடித்திருப்பதாகவும், இரண்டு கிரகங்கள் மோதிக்கொண்ட கோட்பாட்டை ஆதரிப்பதாக இந்த கண்டுபிடிப்பு அமைந்துள்ளதென்றும் ஆய்வை வழிநடத்திய டாக்டர் டானியல் ஹெர்வார்ட்ஸ் கூறினார்.

பாறைகளில் காணப்படும் ஒக்ஸிஜன் ஐசடோப்களுடைய கலவைகளுக்கிடையில் வித்தியாசங்களை அளந்து டாக்டர் ஹெரவார்ட்ஸ் இந்த ஆய்வை செய்துள்ளார்.

பூமிப் பாறைகளில் ஒக்ஸிஜன் ஐசடோப்களுடைய கலவை ஒரு விதமாகவும், நிலவுப் பாறைகளில், அது வேறு விதமாகவும் இருப்பதாகவும் தற்போது கண்டறியப்பட்டுள்ளது.

ஆனால் நிலவுப் பாறையில் வேற்று கிரக தோற்றத்தைக் குறிக்கக்கூடிய அந்த வித்தியாசம் மிகக் குறைவாகவே தென்படுகிறது.

எனவே வேற்று கிரகம் பூமியின மீது மோதியதென்ற கோட்பாடு சரியாக இருக்குமா? என்று சில விஞ்ஞானிகள் இப்போதும் ஐயம் எழுப்புகின்றனர். (செ-11)

## முன்னாள் போராளிகள்...

ச்சித் திட்டம் இலங்கை இராணுவத்தாலும், புனர்வாழ்வு ஆணையாளர் நாயகத்தின் பணியகத்தினாலும் இணைந்து வவுனியாவிலுள்ள பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்தில் நடத்தப்பட்டு வருகின்றது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பிரதிநிதிகளும், புனர்வாழ்விற்குள்ளாகி வருபவர்களின் உறவினர்களும் இந்த முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களை அடிக்கடி பார்வையிட்டு வருவதாக மேஜர் ஜெனரல் விஜேதிலக தெரிவித்தார்.

மூன்று மாதத்திற்கொரு முறை நாங்கள் ஒரு பிரிவை சமூகத்தில் மீள இணைக்கிறோம். அடுத்த பிரிவு இம்மாத இறுதிக்குள் மீள இணைக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

புனர்வாழ்விற்குட்படுத்தப்பட்டு, சமூகத்துடன் மீள இணைக்கப்பட்டுள்ளவர்களில் 230 இற்கும் மேற்பட்டவர்கள் உயர்கல்வியினைப் பெறுவதற்கு தகுதிபெற்றுள்ள தோடு, 35 பேர் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்றுவருகின்றனர்.

ஏற்கெனவே சமூகத்துடன் மீள இணைக்கப்பட்டுள்ளவர்களின் முன்னேற்றமும், நலன்பேணலும் புனர்வாழ்வளிக்கப்பட்ட பயனாளர்களின் சமூக, பொருளாதார நலன்பேணல் ஒருங்கிணைப்பு அலுவலகத்தினால் தொடர்ச்சியாகக் கவனிக்கப்பட்டு வருகிறது.

இந்த அலுவலகங்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள அனைத்து மாவட்டங்களிலுமுள்ள பிரதேச செயலங்களில் உருவாக்கப்பட்டுள்ளன.

அரசாங்க மற்றும் கூட்டாண்மைப் பகுதி நிறுவனங்கள், சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், சமூகம் ஆகிய அனைத்துடனும் ஒருங்கிணைத்து புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள், அநத மாவட்டங்களிலுள்ள அவர்களின் குடும்பங்கள் ஆகியவற்றின் வெற்றிகரமான, நீடித்து நிலைக்கக்கூடிய சமூக-பொருளாதார மீள்இணைப்பை உறுதிப்படுத்துவதே இந்த அலுவலகத்தின் பிரதான பொறுப்பாகும்.

அரசாங்கத்தால் ஆதரவளிக்கப்பட்ட புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டத்தைப் பூர்த்திசெய்த பின்னர், முன்னாள் போராளிகள் வாழ்க்கைத் திட்டங்களை ஆரம்பிப்பதற்காக 250,000 ரூபாய் வரையிலான கடன்களை மிகக்குறைந்த வட்டியில் பெற உரித்துடையவர்களாகுவர். புனர்வாழ்வை நிறைவு செய்த முன்னாள் போராளிகளில் இதுவரை 1,773 பேர் இந்தக்கடனைப் பெற்றுள்ளதுடன், மேலதிக விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன என ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

கடன் வசதிக்கு மேலதிகமாக, புனர்வாழ்வளிக்கப்பட்ட நபர்களுக்கு வெளிநாடுகளில் வேலை வாய்ப்பு வசதிகளை வழங்குவதற்கான வழிகளை பணியகம் ஆராய்ந்து வருகிறது.

புனர்வாழ்வளிக்கப்பட்டு, தொழிற் பயிற்சிகளைப் பெற்ற 40 பேரை வேலைக்கமர்த்துவதற்கான ஆர்வத்தை சிங்கப்பூரிலுள்ள கட்டுமான நிறுவனமொன்று வெளிப்படுத்தியுள்ளது, என அவர் தெரிவித்தார்.

எந்திரவியல் திறன்கள், தகவல் தொழிநுட்பம், விவசாயம், விலங்கு வேளாண்மை, அழுக்கலை, உணவு பதனிடல், கல்வி, கைவேலைப்பாடுகள், தச்சுத் தொழில், கட்டுமானம் உட்பட பல தொழில் முறைப் பயிற்சிகளை புனர்வாழ்வுக் காலம் உள்ளடக்குகிறது.

உளவியல்சார் உதவிகள், கல்வி, விளையாட்டு மற்றும் ஆன்மீக, சமய, கலாசார மேம்பாடு ஆகியவற்றையும் புனர்வாழ்வுச் செயன்முறை உள்ளடக்கியுள்ளது. மே 2009இல் போர் முடிவடைந்ததன் பின்னர் அரசாங்கம் 2.5 மில்லியுன் ரூபாவினை முன்னாள் புலிப் போராளிகளின் புனர்வாழ்விற்காக செலவளித்துள்ளது. இந்த நிகழ்ச்சித் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீட்டினை அரசாங்கம் 2013 இல் 300 மில்லியன் ரூபாவிலிருந்து, 500 மில்லியன் ரூபாவாக அதிகரித்தது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் ப்ரிந்துரை ஒன்றினைப் பின்பற்றி, தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிச் சந்தேகநபர்களின் நிலையை ஆராயவும், தேவைப்படும் இடங்களில் சட்ட நடவடிக்கையை விரைவுபடுத்தவும் விசேட ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனிவா...

ம்ப உரையை நிகழ்த்தும் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, தனது பணியகத்தின் செயற்பாடுகளின் நிலைமைகள் தொடர்பில் அறிக்கையைச் சமர்ப்பித்து விளக்கம் அளிக்கவுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கான விசாரணைக்குழு குறித்த அறிவிப்பை இதன்போது ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை வெளியிடுவார் என தெரியவருகின்றது.

இந்த அறிவிப்பை அடுத்து, ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கையின் மனிதவுரிமை நிலைமைகள் தொடர்பில் விவாதங்கள் இடம்பெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் பதவியில் இருந்து எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்துடன் ஓய்வுபெறும் நவநீதம்பிள்ளையின் இறுதி அறிக்கையாக இவ்வறிக்கை இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன், எதிர்வரும் 11ஆம் திகதி காலை முதல் மதியம் வரை இடம்பெறவுள்ள ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு என்ற தலைப்பிலான குழுவிவாதத்தை நவநீதம்பிள்ளை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இந்த விவாதத்திலும் இலங்கையில் ஊடகவியலாளர்கள் எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்கள் தொடர்பில்தகவல்களும்வெளியிடப்படும் என அறிய முடிகின்றது. (செ-11)

# ஜனாதிபதி...

வுள்ளது.

இந்தநிலையில் இதுவரை ஆணைக்குழுவுக்கு 18,600 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இதில் 5000 முறைப்பாடுகள் பாதுகாப்பு படையினர் தொடர்பானதாகும் என்று ஆணைக்குழுவின் உறுப்பினர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆணைக்குழு 1990 ஆம் ஆண்டு ஜூன் 10 ஆம் திகதி முதல் 2009 ஆம் ஆண்டு மே மாதம் வரையான காலப் பகுதியில் காணாமல், போனோர் தொடர்பில் விசாரணைகளை நடத்துகிறது.

இதேவேளை, காணாமல்போனோர தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான இரண்டாம் கட்ட சாட்சி விசாரணைகள்நேற்று ஆரம்பமானது.

காத்தான்குடி பிரதேச செயலகத்தில் ஆணைக்குழுவின் தலைவர்மெக்ஸ்வெல பரணகம தலைமையில் நேற்றைய அமர்வு நடைபெற்றது.

ஆணைக்குழு முன் சாட்சியமளிப்பதற்காக நேற்றைய தினம் 59 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதிலும், 49 பேர் சமுகமளித்து சாட்சியமளித்ததாக ஆணைக்குழுவின் செயலாளர் எச்.டபிள்யூ.குணதாச தெரிவித்தார்.

இதுதவிர நேற்றையதினம் புதிதாக மேலும் 16 பேரின் முறைபாடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

குருக்கள் மடத் தில் 163 பேர் கொலை செய்யப்பட்டு புதைக் கப்பட்டதாக கூறப் படும் சம்பவம் தொடர்பிலேயே நேற்று அநேகமானோர் சாட்சியமளித்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார். இந்த அமர்வுகள் காத்தான்குடி பிரதேச செயலகத்தில் இன்றும் இடம்பெறவுள்ளன. (செ-11)


## English Classes

- ☑ Spoken & Grammar for students & employees
  - ➢ Special Classes
  - ➢ Group Classes
  - ➢ Classes for grade-1 to grade-11
  - ➢ English for kids
- ☑ Elocution classes

Contact: NALTC,
116, Adiyapatham, Road, Thirunelvely.
Tel:-0766901516
(C-7585)



## MOBILE PHONE REPAIRING COURSE

(கையடக்க தொலைபேசி திருத்தும் பாடநெறி)

*நீங்கள் பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தியவரா? சுயதொழில் ஒன்றை எதிர்பார்ப்பவரா? வேலைசெய்துகொண்டு பகுதிநேரமாக வருமானம் ஈட்டவேண்டுமா?*

**4 days course**

புதுப்பொலிவுடன் யாழ்நகரில
உங்கள் எதிர்காலத்துக்கு
மாதம் 150,000/-க்கு மேல்
வருமானம் ஈட்ட ஒருவாய்ப்பு.

திருத்தும் துறையில் 10வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரும் இலங்கையில் 2000ற்கும் மேற்பட்ட மாணவர்களைஉருவாக்கியமுதற்தர ஆசிரியருமான Ganesh.K.
பாடநெறிக்கான கட்டணத்தை முதல் மாதத்திலேயே சம்பாதிக்கமுடியும். நவீன Mobile Phone Repairing முறைகள் பயிற்றுவிக்கப்படும.

BTEC
BRITISH TECHNOLOGY ENGLISH COLLEGE
#21, Sirampiyadi lane
Jaffna.
TP: 021 790 4468
MO: 0777 444 225
(C-7573)



## மிக குறைந்த விமான கட்டணங்கள்

| | | |
|---|---|---|
| கொழும்பு – மதுரை | –16500 | RTN |
| கொழும்பு – சென்னை | –21900 | RTN |
| கொழும்பு – திருச்சி | –22400 | RTN |
| கொழும்பு – டோகா | –26000 | O/W |
| கொழும்பு – பெங்களூர் | – 27600 | RTN |
| கொழும்பு – மலேசியா | –30000 | RTN |
| கொழும்பு – சிங்கபூர் | –30200 | RTN |
| கொழும்பு – பிரான்ஸ் | –45500 | O/W |
| கொழும்பு – லண்டன் | –44800 | O/W |
| கொழும்பு – சுவிஸ் | –83500 | RTN |
| கொழும்பு – கனடா | –105700 | o/w |

வீட்டில் இருந்தவாறே பெற்றுக்கொள்ளலாம்

யாழ் நகரில் நம்பிக்கையான பாதுகாப்பான 24 மணித்தியால சேவை வழங்குனர்
Nation Popular Travels & Tours
#128, Brown Road, Jaffna
128, பிறவுண் வீதி யாழ்ப்பாணம்
0114375357, 0773083820
(C-7587)
0214 920 920
நீங்கள் பறந்து செல்ல நாங்கள் சிறகுகளாகின்றோம்



அரச துறை, தனியார் துறை மற்றும் NGOகளில் தற்போது கோரப் பட்டுள்ள வேலைவாய்ப்புகள் பற்றிய வழிகாட்டல், ஆலோசனை மற்றும் உதவிகளுக்கு..
கோலாசிற்றி 021 320 2787 தொழில் வங்கி
224/1. நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (இலுப்பையடி சந்திக்கு அருகில்)
இனி நாம் இருக்கிறோம் நேரில் வரவும்



## கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகிறோம்.
அழையுங்கள் 0779086737
GUNAA BEST PC Computer Repair
52, Hospital Road, Jaffna. (6499)



Organ, Guitar,
புல்லாங்குழல் வகுப்புக்கள்
சினிமாப் பாடல்களுக்கான Notes விற்பனைக்குண்டு.
கரவீணா இசை மன்றம்
4, செட்டித் தெரு ஒழுங்கை, நல்லூர்.
T.P :- 0777 031 293
(6461)



## வேலை வாய்ப்பு

நெல்லியடி நகரில் இயங்கும் முன்னணி கணினி நிறுவனத்துக்கு Ms office, DTP தெரிந்த இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.
(பயில விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்)
தொடர்புகளுக்கு - 0773614572
(C-7586)



## vacancy

புதியதோர் எதிர்காலத்தை நோக்கி...
யாழ், வவுனியா, மன்னார், கிளிநொச்சி மாவட்டத்தினருக்கான பயிற்சியுடன் கூடிய பதவி வெற்றிடங்கள். 50 பேருக்கு முன்னுரிமை.
பயிற்சியின் போது 10,000/= பின் 30,000/=
உடன் அழைக்க:-0770771377
தங்குமிட வசதி உண்டு
(6610)


## மரண அறிவித்தல்

அமரர் மருதப்பு நிர்மலாதேவி



நவாலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மருதப்பு நிர்மலாதேவி நேற்று வெள்ளிக்கிழமை (06.06.2014) காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி ஆரியம்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

சிறிதேவி கருமாரி நகைமாடம், யாழ்ப்பாணம். (6588)

தகவல்:-
க.விஜிந்தன் (குகா)


## YOGIS

(Academy & Beauty Therapy, Hair Dressing & Home Science)

EXHIBITION
CAKES and SUGAR CRAFT 11.06.2014


கேக் கண்காட்சி



திருமண அலங்கார கேக் வகைகள், பிறந்தநாள் கேக் வகைகள், ஐசிங் பூக்களின் அலங்காரங்கள் இன்னும் வித்தியாசமான கேக்களின் அலங்கார கண்காட்சி (3 நாட்கள் மட்டும்) 11.06.2014 முதல் ஆரம்பமாகிறது. கண்காட்சி 11-ம் திகதி 11 மணிக்கும் 12-ம், 13-ம் திகதிகளில் காலை 9 மணியிலிருந்து இரவு 8 மணி வரை நடைபெறும்.

நடைபெறும் இடம் :- 75, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலயத்திற்கு முன்பாக)
(C-7555)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.குணம் சிறிராம்
என்பவர் அலியான்ஸ்
காப்புறுதி நிறுவனத்தில் எனக்கு
காப்புறுதி நிறுவனம் சம்பந்தமான
ஆலோசனைகளையும், நிதி சம்பந்தமான
ஆலோசனைகளையும் வழங்கியுள்ளார்.
இவர் எமக்கு செய்த சேவையின்
காரணமாகத் தற்பொழுது ஏசியன்
(Asian Alliance)
காப்புறுதி நிறுவனத்திற்கு பிராந்திய
முகாமையாளராகத் தெரிவு
செய்யப்பட்டுள்ளார்.
இவரின் சேவைகள் இன்னும் தொடரவும்.
இவர் இன்னும் வளரவும் மனதாரப்
பாராட்டி வாழ்த்துகிறோம்.

Java
Civil Engineering Construction
No.12, yamuna Road,
Nallur, Jaffna.


SPEED LANKA EXPRESS



## வெளிநாடுகளுக்கான

தபால் பொதிகள் சேவை

- உள்நாட்டு, வெளிநாட்டு துரித தபால் பொதிகள் சேவை
- உங்கள் இல்லங்களில் இருந்தவாறே அனுப்பும் வசதி
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்
- சர்வதேச விமான பயண சீட்டுகளை பெற்றுக்கொள்ளலாம்

ஸ்பீட் லங்கா எக்ஸ்பிரஸ் கொரியர் & ரவல்ஸ்
135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0772931062, 0776217926
www.speedlanka.net
(C-7580)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.06.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.